www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஆக. 01-07,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 320



## காத்திருக்கும் பொறி

## தகவல் கறக்கும்

## புலனாய்வு புலிகள்

## உலகைக் கலக்கிய அழகி மோனிக்கா

### உண்மைத் தொடர் ஆரம்பம்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## நாளையும் கமாலிட்டாக்கள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

தமிழ் மக்கள்மீதான
பழிவாங்கும் பதிலடிகள்!
பொருளாதாரத் தடைமூலம்
பட்டினிபோடும் கொடூரம்!
கோவணத்தோடு திரியவைக்கும்
கெடுபிடி உத்தரவுகள்!
திசை திருப்பும்
புதை குழி இழுத்தடிப்புக்கள்!
படு பயங்கரமான
பாலியல் வல்லுறவுகள்!
வடக்கு-கிழக்கு எங்கும்
இதுதான் நிலை!
ஏனைய பகுதிகளில்
வகை தொகையற்ற
கைதுகள்! கெடுபிடிகள்!
சந்தேகப் பார்வைகள்!
முன் எப்போதுமில்லாத வகையில்
நாடெங்கும்
தமிழ் பேசும் மக்கள்
பெரும் அழுத்தங்களை
சந்தித்து வருகின்றனர்!
மன்னார் பள்ளிமுனையில்
ஜூடா கமாலிட்டா
என்னும் இளம்பெண்
பாலியல் வல்லுறவுக்கு
இரையாகியுள்ளார்.
காமவெறி மட்டுமன்றி
இனரீதியான வெறுப்புணர்வும்
இந்த வெறியாட்டத்தில்
வெளிப்பட்டுள்ளது!
கடித்தும், குதறியும்
மிருகத்தனமாக
நடந்து கொண்டுள்ளனர்!
பிறப்புறுப்பில்
துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.
படையினரிடையே
மேலோங்கிவரும்
இனவாத முரட்டுத்தனத்தையே
இந்நிகழ்வு உறுதிசெய்துள்ளது!
தமிழ் மக்கள் அனைவரும்
தம் எதிரிகள் என்று
கருதும் நோக்கின்
வெளிப்பாடே இதுவும்!
ஏற்கனவே- மட்டக்களப்பில்
கோணேஸ்வரி என்பவரை
பிறப்புறுப்பில் கைக்குண்டை
வெடிக்க வைத்து
கொடூரமாகக் கொன்றனர்!
இதற்கு காரணமான
படையினர்மீது
இன்றுவரை
எவ்வித நடவடிக்கையுமில்லை!
நீதி விசாரணை
என்ற பெயரில்
இழுத்தடித்து வருகிறார்கள்!
இவ்வாறு இழுத்தடித்தால்
சாட்சிகள் சிதைவடைந்து
படையினரை காப்பாற்றலாம்!
யாழ் குடாநாட்டில்
பாலியல் வதையின்பின்
கொல்லப்பட்ட பலரது
வழக்குகளும் இவ்வாறே
இழுத்தடிக்கப்படுகின்றன!
ஆக, ஒரேயொரு
கிருஷாந்தி விடயத்தில்
தவிர்க்க முடியாமல்
வழக்கு விரைவாகி
தீர்ப்பும் வழங்கப்பட்டது!
இதனை வைத்தே
இங்கு நீதி நிலவுகிறது
என்று காட்டிக் கொண்டு
ஏனைய பாலியல் கொடூரங்கள்,
படு கொலைகள் என்பவற்றை
இழுத்தடித்து மறைக்கும்
முயற்சிகள் நடக்கின்றன!
இந்த முயற்சிகளை
முறியடித்து,
குற்றமிழைத்தவர்களுக்கு
தண்டனை வழங்கக் கோரவோ,
நீதி விசாரணைகளை துரிதப்படுத்த
தூண்டுதல் செய்வதற்கோ
தமிழ் பேசும் தரப்பில்
அமைப்புக்கள் இல்லை!
பொல்கொட வாவி
படுகொலைகள் முதல்
கோணேஸ்வரி
கோரக் கொலை வரை
குற்றவாளிகள் தப்பிவிட்டனர்!
அவர்கள் தப்பிய துணிச்சலே
இன்று கமாலிட்டாவை
காட்டுமிராண்டித்தனமாக
குதறிப் போடுவதற்குரிய
துணிச்சலைக் கொடுத்தன!
நாளை மேலும்
கோணேஸ்வரிகள்- மேலும்
கமாலிட்டாக்கள்
இன்னமும் கொடூரமாக
குதறி வீசப்படுவர்!
சேர்பியப் படைகள்
அல்பேனியாவில் நிகழ்த்திய
பாலியல் வக்கிரங்களை
உலகம் கண்டித்தது!
இங்கு நிகழ்வதை
கண்டிக்க முனைபவர்களையும்
தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடுகள்
குழப்பி விடுகின்றன!
இவர்களே மௌனமாயிருந்து
அரசுக்கு சாமரம் வீசும்போது
சர்வதேச சமூகம் எப்படி
அநீதிகளை உணர்வது?
வெறுமனே
கண்டன அறிக்கைகள்
பரிகாரமாகாது!
கண்ணீர் விடுவதும்
தீர்வாகாது!
ஆட்சியாளரிடம்
முறையிடுவதும் பயன் தராது!
உலகத்தையே ஏமாற்றும்
இங்குள்ள ஆட்சியாளரில்
நமக்கு நம்பிக்கையில்லை
என்பதை உலகமறிய
உரத்துச் சொல்லவேண்டும்!
இங்கு தொடரும்
அநீதிகளை
உலக அரங்கின் முன்னால்
கொண்டு செல்ல வேண்டும்!
அதற்குரிய அமைப்புக்களே
உடனடித் தேவை!
அதனைச் செய்வதற்கே
நேர்மையாளர்கள் வேண்டும்!
தமிழ்க் கட்சிகளை
நம்பிப் பயனில்லை!
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## ஆலய தரிசன நெறி முறைகளுள் சில

* தெய்வ காரியங்களில் நிலையான நம்பிக்கையான பக்தி இருக்க வேண்டும். வீண் விளம்பரத்துக்கான போலி பக்தி கூடாது.

* நமது குல தெய்வத்தை ஒருபோதும் மறக்கக்கூடாது. மாதம் தோறும் குலதெய்வத்திற்கு நம்மால் இயன்றளவு வழிபாட்டிற்குரிய வழி வகைகளைச் செய்ய வேண்டும்.

* மாதா, பிதா, குரு தெய்வம் என்பதனை நிலையாகக் கொள்ள வேண்டும். தாயிடம் காட்டுகின்ற பக்தி இம்மைக்கும், தந்தையிடம் காட்டுகின்ற பக்தி மறுமைக்கும், புண்ணியத்தைச் சேர்க்கும். குருவிடம் காட்டுகின்ற பக்தி பிரம்ம பதவியைத் தரும்.

* இறைவனிடம் பக்தி இருப்பதோடு பயமும் இருத்தல் வேண்டும். இறைவனின் நல்லடியார்களை, சித்தர்களை, சத்புருஷர்களை சித்தத்திலே கொண்டு வழிபடுவார்க்கு இறைவனின் திருபாகடாட்சம் வெகு விரைவில் கிட்டும்.

* வேதத்தினால் ரிசிகளையும், ஹோமத்தினால் தேவர்களையும், சிரார்த்த காரியங்களால் பித்ருக்களையும், அன்னத்தினால் அதிதிகளையும், மலரினால் பஞ்ச பூதங்களையும், தியானத்தினால் தெய்வங்களையும் ஆராதிப்போர்களுக்கு அஷ்ட ஐசுவரியங்களும் பொங்கிப் பெருகும்.

* ரசாயன ரசம் பூசிய கண்ணாடியில் முகம் பார்க்கலாம். அதேபோல பக்தி ரசம் பூசிய மனக் கண்ணாடியில் இறைவனைக் காணலாம். மதங்கள் பல இருக்கலாம். மூர்த்தங்கள் பல இருக்கலாம். அனைத்தும் பரம் பிரம்ம சொரூபம் என்பதனை மனதில் கொள்ள வேண்டும்.

தொகுப்பு: அ. அரசரெத்தினம்-சேனையூர், மூதூர்.



## நல்லதும் கெட்டதும்

ஹஸ்ரத் லுக்மானுல் ஹகீம் (அலை) அவர்கள், ஒரு சிறந்த மா மேதையாக விளங்கியவர்கள். அவர்கள், தமது சிறு வயதில் ஒரு தனவந்தரிடம் ஆடுகளை மேய்க்கும் இடையராக பணி புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களது புத்திக் கூர்மையையும், அறிவுத் திறனையும், கண்ட எஜமான், அவர்களை பரீட்சிக்க எண்ணி,

"லுக்மானே! நீர் போய் ஒரு ஆட்டை அறுத்து, அதில் மிக நல்ல பொருள் எது உள்ளதோ அதைக் கொண்டுவாரும்!" என்று ஏவினார். லுக்மான் அவர்கள், ஓர் ஆட்டை அறுத்து, அதன் நாவையும், இருதயத்தையும் கொண்டு வந்தார்கள். மறுபடியும் எஜமான், "மற்றோர் ஆட்டை அறுத்து, அதில் மிகக் கெட்ட பொருள் எதுவோ அதைக் கொண்டுவாரும்!" என்றார். முன்போலவே லுக்மான் அவர்கள் ஓர் ஆட்டை அறுத்து அதன் நாவையும், இருதயத்தையும் கொண்டு வந்தார்கள். ஆச்சரியமுற்ற எஜமானர், அது பற்றி வினவியபோது, "இந்த இரண்டும் நல்லவைகளாக இருந்தால், இவை போல் நல்லவை வேறொன்றும் இருக்கமாட்டாது. இவ்விரண்டும் கெட்டுவிடில் இவற்றை விட கெட்டவை வேறொன்றும் இருக்க முடியாது." என்று லுக்மானுல் ஹகீம் பதிலிறுத்தார்கள்.

ஆகவே, எமது இதயங்களையும், நாவுகளையும் தீய விடயங்களை ஒட்ட விடாது, தூயவையாக வைத்துப் பேணிடுவோம்.

தொகுப்பு: ஏறாவூர் ஸபீக் ஹாபிஸ்.

## கவிதைப் போட்டி இல. 317

### பரிசுக்குரிய கவிதை

#### தொடரும்

அன்று கிருஷாந்தி
நேற்று கோணேஸ்வரி
இன்று கமாலிட்டா
தொடரும் பாலியல் வதை!
நிலம் பிடிக்கும் படையெடுப்பு
நிற்கும்வரை தொடரும்!

வே. தயாளன்- மன்னார்.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

#### பெண்ணடிமை

"கழுத்தினை நெரிக்கும்
கயவர்களின் விலங்கு!
கால்களை நெருக்கும்
கலாசார விலங்கு!
கண்ணிலே மருட்சி!
கனி முகத்திலே விரக்தி!
மண்ணடிமை ஒயவில்லை-இன்னும்
பெண்ணடிமை தீரவில்லை!"

நா. ஜெயபாலன்- பிபிலை.

#### வன்முறைச் சட்டங்கள்!

நீ உண்மை பேச முடியாது
பாதுகாப்புச் சட்டம்!
நீ ஊர்வலம் போக முடியாது
அவசரகாலச் சட்டம்!!
நீ உயிர் வாழ முடியாது
பொருளாதார தடைச் சட்டம்!!!

த. ஜெபிஜனார்த்-மட்டக்களப்பு.



#### வாய்ப் பூட்டு?

சாகா உண்மைகளைச்
சாகடிக்கும் எண்ணமுடன்
தோண்டிய புதைகுழியில்
தோன்றிய 'பாவை'க்கு
மீண்டும் வாய்ப்பூட்டு!

அ. சந்தியாகோ-
அசோகா வித்தியாலயம், கண்டி.

#### கழுத்துவரை

பேரினவாதத்தின் கரம்
கழுத்துவரை வந்தபின்னும்,
கை கட்டி பார்ப்போர்
அசல் தமிழ் வித்தாக
இருக்கமாட்டார்!

பரிமளா சபாபதி
திக்வளை தோட்டம்-ஹாலி எல.

#### உண்மை

"நாங்கள் வேறு
நீங்கள் வேறு!"
பாலியல் கொடூரங்கள்
பகரும் உண்மையிது!

சி. தேவசுந்தரம்-வவுனியா.

#### இவள்தானோ?

இனவாதமும்- காமமும்
கூடிக் கலந்து
கொத்திப் போட்ட
எங்கள் சோதரி
ஜூடா கமாலிட்டா
இவள் தானோ?!

அ. ஜஸ்டீன்-குடாப்பாடு,
நீர்கொழும்பு.

#### எச்சரிக்கை

இன்னொரு
செம்மணியை
நிரப்ப...
இப் பெண்மணி
தேவையா?
ஐயோ...
கண்மணியை
விட்டுவிடு!

ஜெயா சரவனேஸ்வரி- ஹொப்டன்.

#### கத்தி

கழுத்துக்குக் கத்தி
பாதுகாப்புச்
சட்டங்கள்!
வயிற்றுக்குக் கத்தி
பொருளாதாரத் தடை!

த. நகுலேஸ்வரன்- கல்லடி,
மட்டக்களப்பு.

#### சிலை

கண்களால் கண்டதை
வாயினால் சொன்னால்
வந்திடும் வினை என
வாயினை மறைத்திங்கு
வைத்திட்டார் மனிதச் சிலை!

'திக்கவயல்'-அம்பாறை.

## கவிதைப் போட்டி இல.320



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 07.08.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.320
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

#### அபகரிப்பு

பிடிக்குள் இருப்பது பூர்வீக நிலம்!
பிடித்திருப்பது அதிகாரத்தின் கரம்!!

அ. சுதர்சன்- கல்லடி, மட்டக்களப்பு.

#### கொடுமை

பெருந்தோட்டக் கம்பெனியின்
பிடிப்புக்குள்ளே மலைமகளோ?

ச. மகாலிங்கம்- வெலிமடை.

## மூடக்கருத்துக்களை பரப்பலாமா?

'முரசு' முற்போக்கு சிந்தனை உடையது எனும் கருத்தை அதன் வெளிப்பாடுகள் வலியுறுத்துகின்றன. அந்த நம்பிக்கையிலேயே இதை தெரிவிக்கிறேன்.

சில செய்தி ஊடகங்கள் ஜூலை 16ந் திகதி உலகம் அழியும் பயங்கரம் எனும் கடவுள் அல்லது அரக்கன் பூமிக்கு வருவான் என்றெலலாம் 'றீல்' சுற்றுகிறார்கள். இதை வாசித்துவிட்டு சிறுவர்கள் 'உலகம் அழிந்து விடும். எல்லாரும் செத்துவிடப்போகிறோம்' என அங்கலாய்க்கிறார்கள். இவ்வாறான சமூகத்தை பலவீனப்படுத்தும் மூடக்கருத்துக்கள் பரப்பத்தக்கனவா? என்பதை இவை ஏன் யோசிப்பதில்லை?

சஞ்சீவி சிவகுமார், பேராதனை.



முரசே!

ராஜேஸ்குமாரின் 'கையில் சிக்கிய மின்னல்' ரசிகன் தரும் 'இலக்கிய நயம்' அருமை. அத்துடன் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' சோகமே சோகம். 'அஜ்மீர் அரண்மனை'யில் அடுத்தடுத்து என்ன இரகசியங்கள் உள்ளதோ!

பி. பௌமியா, புதிய காத்தான்குடி-01.



என் அன்பின் முரசே!
நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சுவை. அதிலும் 'அல்பிரட் துரையப்பா முதல் காமினிவரை' என்னை மிகவும் கவர்ந்துள்ளது. உன் புகழ் மென்மேலும் வளர என் நல்வாழ்த்துக்கள்.

முரசின் அபிமானி
வ். ஜெயந்தி,
பலாந்தோட்டை.

## காதில் பூ வைக்கிறார்

முரசே!

பொதுஜன முன்னணியும், ஐ.தே.கட்சியினரும் ஒன்றுபடவேண்டும் என்று 'டமில்' கட்சிகள் பழைய பல்லவியை பாடிக்கொண்டிருக்கின்றன. கொழும்பு வீதிகளில் ஐ.தே.கட்சியை இரத்தம் சிந்த வைத்தது அரசாங்கம். இதனைத் தமிழ்க் கட்சிகள் கண்டிக்கவில்லை. எனவே தமிழ்க் கட்சிகளுக்குக்கூட இரு கட்சிகளையும் புரிந்துணர்வுடன் செயற்பட வைக்கும் எண்ணம் கிடையாது. அரசியல் தீர்வுக்கு தாம் முயற்சி செய்வதாக தமிழ் மக்களது காதுகளில் பூவைக்கப் பார்க்கிறார்கள். அதன் நிமித்தம் பொ.ஐ.மு., ஐ.தே.க. இரண்டும் ஒன்றுபடும், ஒன்றுபடுத்த முயற்சிப்போம் என்று பூவைக்கிறார்கள். கீரியும் பாம்பும் ஒன்றாகுமா? எலியும் பூனையும் ஒன்றாகுமா?

ஆர். வசந்தகுமார், மட்டக்களப்பு.

# வாசக(ர்)சாலை

## நடக்கவே முடியாத இணக்கப்பாடு

ஆளும் கட்சியும், ஐ.தே.கட்சியும் இணக்கம் காணும் என்று இப்போதும் நினைப்பவர்கள் மூடர்கள்! அல்லது மக்களை மூடர்களாக்க நினைப்பவர்கள் என்றே கருதுகிறேன். எதிர்க்கட்சியை ஆளும் கட்சி தெருவில் அடித்து நொறுக்கிவிட்டது. இரு தரப்பும் அடுத்த தேர்தல்களுக்காக ஒருவரை ஒருவர் குழிபறிக்க கண்ணாக இருக்கிறார்கள்.

இதைவிட ஜே.வி.பி. மூன்றாவது சக்தியாக வளர்ந்து நிற்கிறது. இதனை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் ஆளும் கட்சி எதிர்க்கட்சி இணக்கம் என்று காலத்தை கடத்துகிறது ஒரு வர்த்தகர் சங்கம்.

இப்படியான முயற்சியில் ஈடுபடுவது மூலம் வர்த்தகர்கள் சிலர் தம்மை இரு கட்சிகளுக்கும் பிரபலமாக்கி ஆதாயமடையலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு நஷ்டம்தான்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை சீர்குலைத்து பேரினவாத சக்திகளுக்கு துணைபோகும் செயலே இதுவாகும்.

பி. சோமசுந்தரம், யாழ்ப்பாணம்.

## உண்மைகள் மறைவதில்லை

துருக்கி அரசு குர்திஷ் போராளிகளின் தலைவரான அப்துல்லா ஒக்லானுக்கு தூக்குத் தண்டனை வழங்கியதை, துணிச்சலுடன் முரசு கண்டித்ததைப் பாராட்டுகிறோம். அவர் குற்றவாளியல்ல, விடுதலைப் போராளியே என்பதை உலகம் ஏற்றுக்கொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை.

மு.இ. ஜீனத் பானு, கிண்ணியா.

மக்கள் இதயம் ஈர்த்த இளவரசி டயானாவின் நனவுகள் (நினைவுகள்) யாவும் கண்ணீரில் கரைந்த கனவுகளாகவே போய்விட்டன. 94ம் ஆம் அத்தியாயம் கண் கலங்க வைத்துவிட்டது. வாழ்வதற்கான வாழ்க்கையில் சாகும்வரை போராடிய டயானாவின் ஆத்மா சாந்தியடைய நாமும் வேண்டுகிறோம். அவரின் ஆத்மாவாவது அமைதி அடையட்டும்!

எஸ். பத்மா உமாஜினி- கொழும்பு-10.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.



படிப்பகம்

www.padippakam.com

# கொழும்பில் தமிழ்க் கட்சிகளது கூட்டம்!

## குமார் பொன்னம்பலம் சாட்டை! பிரமுகர்கள் வாயடைப்பு!

வன்னி நெருக்கடி பற்றி ஆராய அமைச்சர் தொண்டா தலைமையில் 27.07.99 அன்று தமிழ்க் கட்சிகளது கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் இ.தொ.கா., கூட்டணி, ஈ.பி.டி.பி, புளொட், ஈரோஸ் மற்றும் அ.இ.தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கலந்துகொண்டன.

இக் கூட்டத்தில் குமார் பொன்னம்பலம் தெரிவித்த கருத்துக்கள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தின.

### என்ன பலன்?

"தொண்டமான் ஐயா அவர்களே! இதுபோல மூன்று கூட்டங்களை இதுவரை நடத்தி உள்ளீர்கள். அரசிடம் கோரிக்கைகள் விட்டீர்கள். அதன் பலன்கள் என்ன? அரசு என்ன பதில் கூறியது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? என்று நீங்கள் எமக்கு கூறவில்லை.

இப்போதும் வன்னி மக்களுக்கு உணவு அனுப்புமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கிறீர்கள். இந்த அரசு தமிழ் மக்களுக்கு எதிரான அரசு. இதனிடம் கோரிக்கை விடுவது துரோகத்தனம் என்பதே எனது கருத்து.

ஐயா! நீங்கள் கூறுகிறபடி நாங்கள் அரசிடம் கோரிக்கை விட்டால், அதற்கு அரசு செவி சாய்க்குமா? செவி சாய்க்காது விட்டால் அடுத்த கட்டம் என்ன? அரசை எதிர்த்துப் போராட வேண்டும். நீங்கள் தயாரா? குறைந்தபட்சம் வன்னி மக்களுக்கு உணவு அனுப்புமாறு காலக்கெடு விதிக்க நீங்கள் உடன்படுவீர்களா?

அரசையும் ஆதரித்தபடி இப்படிக் கோரிக்கை விடுத்து மக்களை ஏமாற்றுவதில் எனக்கு உடன்பாடில்லை. இங்குள்ள கட்சிகள் அனைத்துமே அரசை ஆதரிப்பவை.

எங்கள் கோரிக்கைகளை அரசு ஏற்காது விட்டால் அரசை எதிர்க்க நீங்கள் முன்வருவீர்கள் என்றால், உங்களை தலையில் வைத்து கொண்டாட நான் தயாராக உள்ளேன்!" என்று குமார் கூறினார்.

"ரெலோ இயக்கம் அரசை ஆதரிப்பதாக கூறவேண்டாம். நாம் அரசை எதிர்ப்பவர்கள்!" என்று அடைக்கலநாதன் எம்.பி

(அலுவலக நிருபர்)

பதிலளித்தார்.

"தம்பி! அவசரகால சட்டத்தை மட்டும் எதிர்த்துக் கொண்டு, படையினருடன் நீங்கள் இணைந்து செயற்படுவது எனக்குத் தெரியும்!" என்று குமார் கூறினார்.

### வேறு சாதனை

"நானும் மானமுள்ள தமிழன்தான். அரசோடு சேர்ந்து நின்றதால்தான் பிரஜா உரிமை பெற்றுக் கொடுத்தேன்!" என்று தொண்டமான் தெரிவித்தார்.

"ஐயா! இதைத்தான் அடிக்கடி கூறுகிறீர்கள். இதனைப் பெற்றுக் கொடுத்ததைவிட வேறு என்ன செய்தீர்கள்? அதனைக் கூறுங்கள். இதுகூட ஐ.தே.கட்சி ஆட்சியில் கிடைத்தது தானே! இந்த ஆட்சியில் என்ன பெற்றுக் கொடுத்தீர்கள் கூறுங்கள்?" என்று குமார் வினா தொடுத்தார்.

ஈ.பி.டி.பி. எம்.பி சந்திரகுமார் உரையாற்றும்போது: "வன்னி மக்களுக்கு நிபந்தனை இல்லாது உடனடியாக உணவு அனுப்ப அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். அரசுக்கு மட்டும் கோரிக்கை விடுக்காது; சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புக்களுக்கும் மகஜர் அனுப்ப வேண்டும். படையினர் தமது இராணுவ உபாயங்களுக்கு உணவை ஆயுதமாக பயன்படுத்துகின்றனர்!" என்று கூறினார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன், கூட்டணி செயலதிபர் சம்பந்தன் ஆகியோர் சந்திரகுமார் எம்.பியின் கருத்தை தாமும் ஆமோதிப்பதாகக் கூறினார்கள்.

"படையினர் கூறும் நிபந்தனைகள் பற்றி நமக்கு அக்கறையில்லை. வன்னி மக்களுக்கு உடனடியாக உணவு அனுப்பப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு!" என்று சுரேஸ் கூறினார்.

"கடந்த நாலரை வருடமாக இந்த அரசுடன் பேசிப் பேசி, கோரிக்கைகள் விட்டு ஏமாந்து போனோம். இக் கோரிக்கைக்கும் பலன் கிட்டப்போவதில்லை. இந்த அரசு எதையும் செய்யாது!" என்று ஈ.பி.ஆர். எல்.எஃப் பிரமுகர் வில்சன் கூறினார்.

### ஏமாற்றுவேலை

இறுதியில் கடிதம் ஒன்று தயாரானது. அதில் தனது பெயரைச் சேர்க்க வேண்டாம் என்று குமார் கேட்டுக்கொண்டார். "அரசிடம் கோரிக்கை மட்டும் விடுப்பதோடு நிறுத்திக் கொள்ளும் உங்களோடு என்னால் உடன்பட முடியாது. நீங்கள் தமிழர்களை ஏமாற்றுகிறீர்கள்!" என்று கூறிவிட்டு சென்றார் குமார் பொன்னம்பலம்.

கூட்டத்தில் கலந்து கொண்ட சகல கட்சிப் பிரமுகர்களும் குமார் பொன்னம்பலத்தின் கருத்தை ஆதரித்தனர். ஆனால் அவர் கூறியது போல பகிரங்கமாக அரசை எதிர்த்து நிற்க மட்டுமே தயக்கம் கொண்டவர்களாக இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இக் கூட்டத்தில் சிவதாசன் எம்.பி, பாலச்சந்திரன் எம்.பி, விஜயசிங்கம், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மூன்று இலட்சம் தமிழர்கள் அவதி

## வன்னி எங்கும் கண்டனப் போராட்டம்

## உயிர் ஊசலாடும் பச்சிளம் குழந்தை

வன்னிக்கான போக்குவரத்துப் பாதையை முடி, விநியோகங்களை அரசும், படையினரும் தடுத்ததைக் கண்டித்து வன்னி எங்கும் போராட்டங்கள் நடந்துள்ளன.

மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், தாய்மார்கள், சின்னஞ் சிறார்கள் உட்பட பொது மக்களின் சகல தரப்பாரும் போராட்டங்களில் பங்கு கொண்டுள்ளனர்.

புலிகளின் தூண்டுதல் எதுவும் இன்றியே இவ்வாறான போராட்டங்கள் பெருமளவில் நடந்துள்ளன.

கிளிநொச்சி கூட்டுறவு சங்க ஊழியர்கள் மிதிவண்டி ஊர்வலம் நடத்தி இரவு பகலாக தொடர் போராட்டம் நடத்தும் மக்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

மாணவர்களும் மாபெரும் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். "பட்டினி கிடந்து கல்வி கற்க முடியாது. முன்பு குப்பி விளக்கு இருந்தது. தற்போது அதுவும் இல்லை. இந்த நிலை தொடருமானால் நாங்களும் புலிகளோடு இணைந்து போரிடுவது தவிர வேறு வழியில்லை!" என்று மாணவர்கள் கூறினார்கள்.

இங்கு எப்போதோ பட்டினிச் சாவுகள் நிகழ்ந்திருக்கும். நமது சொந்த வளமும், சொந்த உற்பத்திகள் சிலவற்றின் உதவியுமே எங்களைக் காப்பாற்றியுள்ளன.

எங்கள் வளமான நிலங்கள் படை நடவடிக்கைகளால் பறிபோகாதுவிட்டால் நாங்கள் மேலும் பல காலம் தாக்குப் பிடித்து நிற்கலாம்.

### முற்றுகை

விவசாய நிலங்களை விட்டு எங்களை வெளியேற்றிவிட்டு, உணவு விநியோகத்தையும் நிறுத்திவிட்டனர். இது திட்டமிட்ட முற்றுகை தான்" என்று வன்னி மக்கள் பலரும் ஒரே குரலில் கூறியுள்ளனர்.

வன்னியில் புலிகளது கட்டுப்பாட்டு பிரதேசத்தில் தற்போது மூன்று இலட்சத்து 76 ஆயிரத்தி 365 தமிழர்கள் வசிக்கின்றனர். இவர்களில் இரண்டு இலட்சம் தமிழர்கள் தற்போதைய அரசின் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்தவர்கள் ஆவர்.

வன்னியில் மருத்துவமனைகளில் 40ற்கு மேற்பட்ட நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்கு வவுனியாவுக்கு கொண்டுவர முடியாமையால் ஆபத்தான கட்டத்தில் உள்ளனர்.

மலவாசல் இல்லாது பிறந்த குழந்தை ஒன்றும் பரிதவித்தபடி புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் உள்ளது. மரத்தால் விழுந்து முள்ளந் தண்டு முறிந்த ஒருவருக்கு இரண்டு கால்களும் இயங்காதுள்ளன. இவ்வாறான பல நோயாளர்கள் பாதைத் தடையால் பரிதாபகரமான நிலையில் உள்ளனர்.

### உணவு லொறிக்குப் பதிலாக குண்டு விமானங்கள்

இதற்கிடையே 26.07.99 அன்று வன்னி நோக்கி ரணகோஷ படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினார்கள்.

அதற்கு முன்னர் கிளிநொச்சி-விசுவமடுவில் விமானத் தாக்குதலில் குழந்தை ஒன்று தலை சிதறி துடிதுடித்து மாண்டான்.

மணலாற்றில் இருந்து முல்லைத்தீவு செம்மலை நோக்கியும் எறிகணை வீச்சுக்கள் நடந்துள்ளன. இதனால் செம்மலை மகா வித்தியாலய அதிபர் காரியாலயம் சேதமடைந்தது. மாணவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றதால் உயிர் இழப்புக்கள் ஏற்படவில்லை.

உணவு லொறிகளை அனுப்ப மறுக்கும் அரசு குண்டு விமானங்களை அனுப்புகிறது. எறிகணைகளை வீசுகிறது என்று தொண்டர் ஸ்தாபனங்கள் கண்டித்துள்ளன.

# பாய்ந்தது அவசரகாலச் சட்டம்!

## யாழ் மாணவர்கள் குமுறல்

'வன்னியில் உள்ள தமிழ் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர். தானாடா விட்டாலும் தசையாடும் என்பார்களே. இங்குள்ள தமிழ் கட்சிகளுக்கு உணர்வே எழவில்லையே' என்று யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் குமுறலோடு தெரிவித்தனர். வன்னி மக்கள் மீதான பொருளாதார முற்றுகையைக் கண்டித்து யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

இப் போராட்டம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுக்கப்பட்டது. "உணவு அனுப்புமாறு அமைதியாக போராட்டம் நடத்தக்கூட அவசர காலச் சட்டம் தடைபோடுகிறது. பசித்த வயிறுகளுக்கு உணவு அனுப்பக் கோருவது பயங்கரவாதச் செயலா? அமைதிக்கு முரணான நடவடிக்கையா?" என்று மாணவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# அதிரடிப்படை ரோந்து

மன்னார் தீவுப் பகுதியில் கடந்த 1990ஆம் ஆண்டுமுதல் நிலை கொண்டிருந்த இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு விசேட அதிரடிப்படை முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் பாரிய படை நகர்வு விரைவில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னார் கோட்டை இராணுவ முகாமும் மூடப்படவுள்ளது. ரண கோஷ நடவடிக்கை முன்னெடுத்துச் செல்லப்படும் பள்ளமடு, பெரியமடு, பாலம்பிட்டி போன்ற பகுதிகளில் மாத்திரமே படையினர் நிலைகொண்டுள்ளதாகத் தெரிகிறது. மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் அதிரடிப்படையினரே முகாமிட்டுள்ளனர்.

அதிரடிப்படையினர் அடிக்கடி ரோந்து நடவடிக்கைளில் ஈடபட்டுவருவதால் பொது மக்கள் மத்தியில் அச்சம் குடிகொண்டுள்ளது. இப்பகுதிகளில் எந்நேரமும் சிறு சிறு தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் முக்கிய இடங்களில் சனநடமாட்டம் குறைந்து காணப்படுகிறது. நகருக்கு வருவதையும் மக்கள் பெருமளவில் தவிர்த்து வருகின்றனர்.

# கமாலிட்டா கொலை

## சாட்சிகளுக்கு மிரட்டல்

மன்னார்-பள்ளிமுனையில் கடந்த 12.07.99 அன்று இடம்பெற்ற பாலியல் வல்லுறவின் பின்னரான கொலை சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட இருவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரு இராணுவ சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டிய இரு காட்சிகளையும் தேடி மர்ம மனிதர்கள் சுமார் மூன்று தடவை குறித்த நபர்களின் வீட்டுக்குச் சென்று விசாரித்துள்ளதாக தெரிய வருகிறது.

இதனையடுத்து சாட்சிகளில் ஒருவரான கொலையுண்ட ஜூட் கமாலிடாவின் சகோதரர் தன் குடும்பத்துடன் படகு ஒன்றின் மூலம் இந்தியாவுக்குச் சென்றுவிட்டதாகவும், மற்றைய சாட்சியான மரக்கறி வியாபாரி தலைமறைவாக உள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த 19ஆம் திகதி சனி விலேஜ் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தையடுத்து பொது மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஒரு படைவீரர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் தாராபுரம் பகுதியில் இடம்பெற்ற மர்மக் கொலை தொடர்பாக வாக்கு மூலம் அளிப்பார் என முன்பு கூறப்பட்டது. பின்னர் தனக்கு அவ்வாறான விடயம் எதுவும் தெரியாது எனக் கூறியுள்ளாராம்.

# திருமலையில் திட்டமிட்ட குடியேற்றம்

## தமிழ் மக்கள் மத்தியில் கலக்கம்

மட்டிக்களிக் கடற்பரப்புக்கு எதிரே விரிந்து கிடக்கும் சுமார் 42 ஏக்கர் நிலப் பரப்பில் சிங்கள மக்கள் குடியேற ஆரம்பித்துள்ளனர்.

இக் காணி தமிழர்களுடைய உறுதிக் காணிகளாகும். ஆலயங்கள், நம்பிக்கை நிதியங்கள், தனியார் என்பவற்றுக்குச் சொந்தமான இந்தக் காணி பல வருடங்களாகத் தரிசாகவே கிடந்து வருகிறது.

1995 நடுப்பகுதியில் இதில் தமிழ் மக்கள் குடியேற முயன்றபோது காணிச் சொந்தக்காரர்கள் ஆக்ரோஷமாகக் களத்தில் இறங்கித் தடுத்து விட்டார்கள். ஆனால் இப்போது கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறார்கள்.

இக் குடியேற்ற முயற்சி வெற்றிகரமாக நிறைவேறுமானால் தமிழர்களுடைய நிலம் பறிபோவதுடன் நகர வாக்காளர் விகிதாசாரத்தில் பாரிய மாறுதல் ஏற்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வீரகத்திப் பிள்ளையார் கோவில் நிலம் அடாத்தாக ஆக்கிரமிக்கப்படும்போது கை கட்டி வாய்புதைத்து நிற்கும் நிர்வாகம் போல், இக் காணி உரிமையாளர்களும் 'சிவனே என்று இருக்கப் போகிறார்களா அல்லது சட்டரீதியான எதிர் நடவடிக்கை எடுக்கப் போகிறார்களா' என்பதே இன்றுள்ள கேள்வி.

# ஐ.நா.வைநோக்கி பேரணி

## ஈழ அமைப்புக்கள் ஏற்பாடு

ஜெனிவா புகையிரத நிலையத்தில் இருந்து ஐ.நா.சபை நோக்கி மாபெரும் பேரணி ஒன்று நடைபெற இருக்கிறது.

எதிர்வரும் 09.08.99 அன்று 2.00 மணிக்கு பேரணி புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பேரணியை வெளிநாடுகளில் உள்ள ஈழத்தமிழர் அமைப்புக்கள் ஒழுங்கு செய்திருக்கின்றன.

பெரும் திரளான தமிழர்கள் இப் பேரணியில் கலந்துகொள்ள உள்ளதாக அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கடற்புலிகளை சமாளிக்க முஸ்தீபு!

## பல நூறு கோடியில் போர்ப் படகுகள்

ரசிய நிறுவனம் ஒன்றிடம் இருந்து அதி நவீன போர்ப் படகுகளை இலங்கை கடற்படை கொள்வனவு செய்ய உள்ளது. பெருமளவு நிதியை செலவிட்டு இவை கொள்வனவு செய்யப்பட உள்ளன.

பின்வரும் போர் படகுகளே கொள்வனவு செய்யப்பட உள்ளனவாம்.

இலக்கு வைத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தக்கூடிய 'மொல்னியா'. இதன் விலை 44.6 மில்லியன் டொலர். (நம்நாட்டு மதிப்பில் 312 கோடியே 20 இலட்சம்.)

'ஸ்வெற்லியக்' கண்காணிப்புப் படகு. இதன் விலை. 18.3 மில்லியன் டொலர். (128 கோடியே 10 இலட்சம்)

'பொகோமொல்' கண்காணிப்புப் படகு. இதன் பெறுமதி 13.1 மில்லியன் டொலர்கள். (91 கோடியே 70 இலட்சம்)

'மிராஜ்' கண்காணிப்பு படகு-11.1 மில்லியன் டொலர். (77 கோடியே 70 இலட்சம்)

'பவுக்' கண்காணிப்புப் படகு-20.9 மில்லியன் டொலர் (146 கோடியே 30 இலட்சம்)

இந்த ஐந்து படகுகளும் மேற்படி விலைகள் குறிக்கப்பட்டிருந்தாலும் மூன்றுக்கு மேற்பட்ட படகுகள் கொள்வனவு செய்யப்பட்டால் விலையைக் குறைக்க முடியும் என்று ரசிய நிறுவனம் தெரிவித்துள்ளதாம்.

ரஷ்யா நிறுவனம் இந்தப் படகுகளை விற்பனை செய்வதற்கு மொஸ்கோவிலுள்ள சிறிலங்கா தூதுவருடன் தொடர்பு கொண்டதை அடுத்து, இங்கிருந்து-மேற்கொண்டு பரிசீலனைகளைச் செய்து அரசுக்கு சிபாரிசு செய்யும் பொருட்டு கடற்படையைச் சேர்ந்த நான்கு உயரதிகாரிகள் அங்கு அனுப்பப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# ஆலயக் குருக்கள் கைது!

அக்கரைப்பற்று-மருதடி மாணிக்கப் பிள்ளையார் ஆலயக் குருக்கள் அரசரெட்ணம்- செந்தில் நாதன் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு மேல் விசாரணைக்காக கண்டிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கடந்த எட்டு வருட காலமாக அக்கரைப் பற்று பொலிஸ் நிலையத்திற்குப் பக்கத்திலுள்ள மேற்படி ஆலயத்தில் குருக்களாகப் பணி செய்து வரும் அவர் கடந்த 23.07.99 அன்று கைது செய்யப்பட்டார்.

இவரது சொந்த இடம் மட்டக்களப்பு-அரசடித்தீவாகும். இப்பகுதி இப்பொழுது புலிகளது பூரண கட்டுப்பாட்டிலுள்ளது.

குருக்கள் கைது செய்யப்பட்டதை அறிந்த கோயில் நிர்வாகக் குழுவினர் அங்கு சென்றுவிசாரித்தபோது சீருடையினர் அவர்களையும் சில மணிநேரம் உள்ளே தள்ளி விட்டார்களாம். விசாரணைக்காக மறுநாள் வருமாறு கூறிவிட்டு அதன்படி அவர்கள் சென்றதும் 'யார் உங்களை இங்கு வரச் சொன்னது?' என்று கேட்கப்பட்டதாம்.

இதற்கு முன்னரும் வடக்கு-கிழக்கில் வேறு பல இந்து ஆலயக் குருக்களும், தேவாலய பிதாக்களும் கைது செய்யப்பட்டதும் விசாரணையின்றி நீண்டநாட்கள் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# புலிகள் ஊடுருவல்?

## நகரில் தேடுதல்

கிழக்கின் நகரப்பகுதிகளிலும், நகரத்தை அண்டிய மறுமுனைகளிலும் புலிகள் இயக்கத்தினரின் ஊடுருவலும், நடமாட்டமும் அதிகரித்திருப்பதால் படையினர் உஷாரடைந்துள்ளனர்.

இதனால் வழக்கத்திற்கு மாறாக நகரப் பகுதிகளில் அவ்வப்போது படையினரால் தேடுதல்கள் நடாத்தப்படுகின்றன. கைதுகளும், விசாரணைகளும் தீவிரமடைந்துள்ளன.

புலிகளின் நடமாட்டம் இல்லை என்று படையினர் இதுவரை நினைத்திருந்து அஜாக்கிரதை காட்டிய கண்காணிப்புப் பகுதிகளில் இப்பொழுது புலிகளின் பிஸ்டல் குழு மற்றும் சினைப்பர் குழுவினரின் புழக்கம் அதிகரித்திருப்பதால் தாக்குதல்கள் தீவிரப்படும் என்ற அச்சம் பரவலாக நிலவுகிறது.

நகரப்பகுதிகளில் பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடமாடுகின்றனர். இடைநடுவில் அகப்பட்டு மாட்டி விடுவோமோ என்ற பீதியில் மக்கள் கிலி கொண்டுள்ளனர்.

கிழக்குப் பிராந்திய ஆணையிடும் படை அதிகாரி மட்டக்களப்புக்கு மீண்டும் விஜயம் செய்து அங்கு மூன்று நாள் தங்கியிருந்து நிலைமையை ஆராய்ந்ததுடன் பிரதான இராணுவ முகாம்களுக்கும் தரைவழியாகச் சென்று பார்வையிட்டு கலந்தாலோசனை நடத்தினார்.

# ரீ-சேர்ட்டுக்குள் துப்பாக்கி-பொலிஸார் பலி!

## முஸ்லிம் பகுதிக்குள் தாக்குதலும்-தேடுதலும்

மட்டக்களப்பு-ஏறாவூர் வைத்திய சாலைக்கு அருகில் இரவு நேரப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது புலிகள் அதிரடித் தாக்குதல் நடாத்திவிட்டு வந்த வழியே தப்பிச் சென்றனர்.

பொலிஸார் தாக்கப்பட்ட முஸ்லிம் பகுதிக்குள் இதுவரை காலமும் எந்தவொரு தாக்குதலும் இடம்பெற்றிருக்காததால் கடமையிலிருந்த பொலிஸார் அஜாக்கிரதையாக நின்றிருந்தனர். இதனை நன்கு அவதானித்துவிட்டு ரீ-சேர்ட்டுக்குள் துப்பாக்கியை மறைத்து முதுகுப்பக்கமாக போட்டுக் கொண்டு வந்து சுட்டு விட்டுச் சென்றனர்.

இச்சம்பவத்தில் ஒருபொலிஸ் உத்தியோகத்தர் கொல்லப்பட்டார். பொலிஸார் மேற்கொண்ட பதில் தாக்குதலில் ஒரு முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் காயமடைந்தனர். புலிகள் தரப்பில் அவர்களின் முழுநேர ஆதரவாளர் ஒருவர் காயமடைந்திருப்பதாக தெரியவருகிறது. இச்சம்பவம் ஜூலை 21ஆம் திகதி இரவு 7.58 க் நடந்தது.

இச்சம்பவம் இடம்பெற்றதற்குப் பின்னர் 24.07.99 அன்று ஏறாவூர் முஸ்லிம் பகுதிச் சந்தைக்குள் சில மணிநேரம் பொலிஸார் தேடுதலை நடத்தினர். ஆயினும் எவரும் கைது செய்யப்படவில்லை. ஏறாவூர் முஸ்லிம் பகுதிக்குள் இதுவரையில் இடம்பெற்ற முதலாவது தேடுதல் சம்பவம் இதுவாகும். தமிழ் மக்கள் பிரவேசிக்கும் உள் வீதிகள் சில தடைப்படுத்தப்பட்டதுடன் அவ்வழியால் வந்த பலர் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.



படிப்பகம்

# கல்முனை டிப்போ புறக்கணிப்பு!

(காரைதீவு நிருபர்)

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை நாட்டிலுள்ள பஸ்டிப்போக்களுக்கு குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ்கள் வழங்குகையில் கல்முனை டிப்போ புறக்கணிக்கப்பட்டிருப்பதாக டிப்போ முகாமையாளர் எஸ்.எல்யூ. லெவ்வை கவலை தெரிவித்தார்.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி பணிப்புரை விடுத்தும் போக்குவரத்து சபைத் தலைவர் ரமால் சிறிவர்த்தன அதனை கவனத்திற் கெடுக்காதது வேதனைக்குரியது என மேலும் அவர் கூறினார்.

கிழக்கில் அம்பாறை, சந்தளாய், சாத்தான்குடி, மட்டக்களப்பு போன்ற பஸ்டிப்போக்களுக்கு தலா இரு குளிரூட்டப்பட்ட பஸ்கள் அண்மையில் வழங்கப்பட்டிருந்தன.

கல்முனைக்கு இப்பஸ்கள் வழங்கப் படாதது ஆச்சரியத்துக்குரியது. நெடுந்தூர சேவைகளை பலவித சிரமங்களின் மத்தியில் கல்முனை டிப்போ நடாத்தி இலாபமீட்டியும் வந்தமை குறிப்பிடத்தக்கது.

பருவகாலச் சீட்டு விநியோகித்தலுக்கு பஸ்கள் போதாமலிருக்கின்ற இவ்வேளையில் புதிய பஸ்கள் கிடைக்காதது ஒருவித புறக்கணிப்பாகவே உள்ளது.

# ஆய்வு மையம் ஆரம்பம்

(திருமலை நிருபர்)

திருகோணேஸ்வர ஆய்வு மையம் ஒன்று திருக்கோணமலையில் நிறுவப்பட்டுள்ளது. ஜூலை 18ல் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இதன் ஆரம்பக் கூட்டம் பண்டிதர் இ. வடிவேல் தலைமையில் இடம்பெற்றது.

தலைவராக பண்டிதர் இ. வடிவேலுவும், செயலாளராக க.தேவகடாட்சமும் பொருளாளராக திரு. சுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டதோடு நிர்வாகக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

திருக்கோணமலையில் தமிழர் தொன்மையை சரித்திரச் சான்றுகள் கொண்டு நிறுவுவது, அவற்றை மக்களுக்குத் தெரியப்படுத்துவது எதிர்காலச் சந்ததிக்கு ஆவணங்களையும், சான்றுகளையும் தேடிப் பாதுகாத்து ஒப்படைப்பது என்பவை இம் மையத்தின் குறிக்கோள்கள் எனப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

துறை சார்ந்த அறிஞர்களைக் கொண்டு ஆய்வு குழுக்களை அமைப்பது என்றும் அதற்கான வசதிகளைச் செய்வதோடு மேலும் அறிஞர்களைத் தேடி அவர்களின் பங்களிப்புக்களை சேர்த்துக் கொள்வதென்றும் இக்கூட்டத்தில் முடிவாகியுள்ளது.

# ஆசிரியைகளுடன் மோதல்

(நமது நிருபர்)

அநுராதபுர நகரிலுள்ள தமிழ் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் அதிபருக்கும் பெண் ஆசிரியர்களுக்குமிடையே இருந்துவரும் முறுகல் நிலையினால் மாணவர்களின் கல்வி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு பாடசாலை சீராக இயங்க வேண்டுமாயின் அதிபர்- ஆசிரியர் உறவு மிக முக்கியமானது. அதனைத் தெரிந்திருந்தும் குறிப்பிட்ட அதிபரின் அடாவடித்தனமான செயலானது திட்டமிட்டு செய்யப்படுகின்றதா எனவும் கேள்வி எழுப்பப்படுகின்றது.

இங்குள்ள பெண் ஆசிரியைகள் மீது சீறிப்பாயும் அதிபர், அவர்களுடன் தரக்குறைவாக நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெண்கள் தமது தேவைக்குரிய விடுமுறையைப் பெறும்போது கூட அதனை ஜீரணிக்க முடியாத இந்த அதிபர், ஆசிரியைகளை பயமுறுத்துகிறாரராம்.

இதனால் இங்குள்ள ஆசிரியைகள் மிகவும் மனவேதனை அடைந்துள்ளதுடன், உளவியல் ரீதியான பாதிப்பிற்கும் ஆளாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது விடயத்தில் வட-மத்திய மாகாண கல்வித் திணைக்களம் கரிசனை எடுக்குமா என சம்பந்தப்பட்டோர் வினவுகின்றனர்.

# ஜெயபூமி காணி இல்லை!

(காரைதீவு நிருபர்)

அம்பாறைப் பிரதேசத்தில் இனிமேல் தமிழ் பேசும் சமூகங்களுக்கு ஜெயபூமி காணி வழங்கப்படமாட்டாது. என முடிவெடுக்கப் பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக எதிர்வரும் 27ம் திகதி அம்பாறைக் கச்சேரியில் நடைபெறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டிற்கு அமைச்சர் அஷ்ரஃப், மொகைதீன் எம்.பி. ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையாம்.

அமைச்சர் அஷ்ரஃப் தேவைக்கதிகமாக அரசகாணிகளை சிறுபான்மை சமூகத்திற்கு வழங்கி வருவதாக பெரும்பான்மையின எம்பிக்கள் குற்றஞ்சாட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது அமைச்சருக்கு எதிரான அணியில் குறிப்பிட்ட நாலு எம்.பிக்கள் ஒன்று சேர்ந்து ஜெயபூமி காணி வழங்குவதில்லை என முடிவெடுத்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறின.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து 29.07.1999



### நந்தகுமார் சாரங்கன்

சுவிசில் வசிக்கும் சதுமலையை சேர்ந்த திரு.திருமதி நந்தகுமார்-வனஜா தம்பதியினரின் செல்வப் புதல்வன் சாரங்கன் தனது முதலாவது பிறந்தநாளை 29.07.99 அன்று ZURICH உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். சாருக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, சதுமலை அப்பப்பா, அம்மம்மா, சுவிசில் வசிக்கும் ஐயா, அம்மம்மா, மாமா, பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்திமார், சித்தப்பா, அண்ணாமார், அக்காமார், ஃபிரான்ஸ் மாமா,மாமி, கனடா மாமி, மச்சாள்மார்கள், வசந்தன் சித்தப்பா, சித்தி (கனடா) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவரை எச்சாட்டி பைரவர் அருள் கொண்டு பலகலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: வசந்தன் சித்தப்பா, T.P.: 502672


சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N. THANGA, T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P 2974924,
HP 97546610. HP 97651074


## 9வது நினைவஞ்சலி



சிவானந்தன் சதீஷ்குமார்

தோற்றம்: 01.11.1981 | மறைவு: 26.07.1990

ஒன்பது ஆண்டுகள் ஓடிமறைந்தாலும்
அன்பான உன்னுருவை என்றும் மறந்ததில்லை
இன்னும் பல்லாண்டுகள் உருண்டோடிப் போனாலும்
சின்னவனே 'சக்குட்டி' உனை என்றும் மறப்போமோ!

சி. சிவானந்தன் தம்பதி(பெற்றார்)
சகோதர-சகோதரிகள் மற்றும் உறவினர்
சோமர் தெரு, கழுதாவளை-03


Bright Book Centre (Pvt) Ltd.
தபால் மூலம் கல்விநெறிகள்

* 90 Days Spoken English & Sinhala.
* Business English.
* Method of Computerised Book- Keeping & Accountancy (M C B A).
* Nursery Teacher Training Course (N T T C)
* Art of Yogasanam.
* புலம்பெயர்ந்தோருக்கான தமிழ் மொழி விருத்தி பாடநெறி

மேற்படி கல்வி நெறிகள் தபால் மூலம் தொடர விரும்பும் உள்நாட்டினரும் / வெளிநாட்டினரும் ரூபாவில் சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

பெயர் : ..........
விலாசம் : ..........
விரும்பும் பாடநெறி : ..........

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27 FIRST FLOOR, C. C. S. M. C.
P.O. BOX NO: 162, COLOMBO - 11
TELE : 434770.



தபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) – இரசாயனவியல்
Year - 9, 10, 11 – விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 – ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்

P.T.C 14, Covington Road, Batticaloa.



தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி, மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"



கார்த்திகன் டெலி:.போன் காட்

சர்வதேச தொலைபேசி அழைப்புக்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் வாடிக்கையாளர்கள் நாடுவது கார்த்திகன் டெலி:.போன் காட். குறைந்த கட்டணத்தில் நிறைந்த உரையாடலுக்கு சிறந்தது! இதோ கார்த்திகனின் சிறப்பு சேவை கட்டணம் கனடாவில் இருந்து...

10 கனடியன் டொலர் காட் இலங்கைக்கு 18 நிமிடம்.
20 கனடியன் டொலர் காட் இலங்கைக்கு 36 நிமிடம்.
10 கனடியன் டொலர் காட் இந்தியா 16 நிமிடம்
20 கனடியன் டொலர் காட் இந்தியா 34 நிமிடம்
10 கனடியன் டொலர் காட் வன்னி 8 நிமிடம்.
20 கனடியன் டொலர் காட் வன்னி 16 நிமிடம்.
10 கனடியன் டொலர் காட் சுவிஸ் 90 நிமிடம்.
10 கனடியன் டொலர் காட் ஜேர்மனி 90 நிமிடம்.

கார்த்திகன் கோல் காட் மேலதிக விபரங்களுக்கு:

வன்னியில் உங்கள் உடன் பிறப்புக்களுடன் தொடர்பு கொள்வதற்கு இதோ தொ.பே. இலக்கங்கள்:
புதுக்குடியிருப்பு: 011873761932759,
ஸ்கந்தபுரம்: 011873761932798

தொ.பே.இ: (416) 461-3456-தொ.நகல்.இ: (416) 461-8621


## 31வது நாள் நினைவு அஞ்சலி



திருமதி ஆறுமுகம் வள்ளியம்மாள்

எம் அன்பு இதய தெய்வமே!
மாதம் ஒன்று மறைந்தாலும்
உங்கள் அன்பு நினைவுகள்
என்றென்றும் மாறாது.
தந்தையில்லா வேளையிலும்
தத்துவங்கள் சொல்லி நின்றாய்.
இன்னல் பெரிதெனினும்
இன்முகம் காட்டி நின்றாய்.
இன்று எம்மை விட்டு நீயும்
இறைவனிடம் சேர்ந்து விட்டாய்
நீயில்லா பொழுதுகளோ
நீண்டெம்மை வதைக்குதம்மா.....

மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

31.07.99 எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் குடும்பம் சகிதம் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்க வேண்டுகிறோம்.

மகன்கள், மகள்கள்,
மருமக்கள்மார்,பேரப்பிள்ளைகள்.
தகவல்: ஏ.மனோகரன்-
553, பாலசூரிய மாவத்தை, கந்தானை.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி ரசிகா 30.07.1999

யாழ்ப்பாணம் கல்வியங்காடு திலகேஸ்வரன்-தேவநாயகி தம்பதியினரின் செல்வப் புதல்வி-செல்வி ரசிகா தனது முதலாவது பிறந்தநாளை நோர்வே ஒஸ்லோவில் 30.07.99 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, வவுனியா அப்பப்பா, அப்பம்மா, கல்வியங்கடு அம்மம்மா, மாமா, அத்தை, மச்சான்மார், பூநகரி மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார், நோர்வே சித்தப்பா, சித்தி, தம்பி, கனடா பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணாமார், மாமா, அத்தை, மச்சாள், இலண்டன் அத்தான், அண்ணா மற்றும் உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வி ரசிகாவை அம்மன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.


K.N.S SHOPPING CENTRE & TAKE AWAY
SWISS

உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை பெற்றுக்கொள்ள ஒறிஜினல் வீடியோ-ஓடியோ கசற்றுக்கள் COMPACT டிஸ்குகள் வீடியோ CDகள், 22 கரட்டில் நம்பிக்கைக்கு உத்தரவாதமளிக்கும் தங்க நகைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் இலங்கை, இந்திய, சுவிஸ் உணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் இலகுவாக நீங்கள் பெற்றுக்கொள்ள.


K.N.S SHOPPING CENTRE
K.N. SUKUMARAN
ANKER- STR- 16
8004- ZURICH
SWITZERLAND.

☎ 01-242 7111- FAX 01- 2427144 வாரத்தில் 7 நாட்களும் (ஞாயிறு உட்பட) திறந்திருக்கும். நேரம் காலை 9 மணிமுதல், இரவு 12 மணிவரை.



மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன்று திறவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.
உலகெங்கிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

www.padippakam.com

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# கப்பல் தகர்ப்பு காரணம் யார்?

திருமலை துறைமுகப் பகுதியில் உள்ள இறங்குதுறையில் தரித்து நின்ற கப்பல் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

25.07.99 அதிகாலையில் இச் சம்பவம் நடந்துள்ளது.

விடுதலைப் புலிகளே இதற்கு காரணம் என்று அரச செய்தி ஊடகங்கள் கதையை முடித்துவிட்டன.

ஆனால் இக்கப்பல் தகர்ப்பு தொடர்பாக பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன.

தகர்க்கப்பட்ட கப்பலின் பெயர் 'நியூகோ ஏன்டுயெரன்ஸ்.' இக்கப்பல் பாலமூர்த்தி என்பவரால் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிடம் குத்தகைக்கு எடுக்கப்பட்ட கப்பலாகும்.

350 பயணிகள் மிக வசதியாக அமர்ந்து பயணம் செய்யக்கூடியது. உள்ளேயே சிற்றுண்டி விடுதி போன்ற வசதிகளும் உள்ளன.

இக் கப்பலின் பெறுமதி 60 மில்லியன் ருபா (6 கோடி ரூபாய்).

இக் கப்பல் முன்னர் யாழ்-திருமலை சேவையில் ஈடுபட்டது. பின்னர் திருத்த வேலைகளுக்காக தரித்து நின்றது.

கப்பல் தகர்க்கப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பிருந்துதான் திருமலை, மூதூர் பயணிகள் சேவைக்கு அனுமதிக்கப் பட்டு, சேவையை ஆரம்பித்தது.

திருமலை இறங்குதுறையில் பொலிஸ் நிலையம் இருக்கிறது. அதன் எதிரே, பொலிஸ் நிலையத்தில் இருந்து 25 யார் தூரத்தில்தான் கப்பல் நின்றது. கப்பல் நின்ற பகுதியில் நீரில் சலசலப்பு ஏற்பட்டால் கூட பொலிஸ் நிலைய காவலரணில் உள்ளவருக்கு கேட்டு விடும்.

பெரிய கப்பல் அல்ல என்பதால் ஆழம் குறைந்த பகுதியில் தரித்து நின்றது.

அதுதவிர இப் பகுதியில் கடற்படை ரோந்துகள் அடிக்கடி நடக்கும். கடற்படை துறை முகத்தில் இருந்து பார்த்தால்கூட கப்பல் நிற்கும் பகுதி நன்கு தெரியும்.

இறங்குதுறைப் பகுதிக்கு வெளியார் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. படகுகள்கூட இப்பகுதிக்கு செல்ல முடியாது.

பயணிகள்கூட கப்பல் புறப்படுவதற்கு பதினைந்து நிமிடத்திற்கு முன்புதான் இறங்குதுறைப் பகுதிக்குள் அனுமதிக்கப்படுவர். அதுவும்கூட நன்றாக துருவிப் பார்த்துவிட்டே அனுமதிப்பார்கள்.

இவ்வாறான கட்டுக்காவல் மிகுந்த பகுதிக்குள் சென்று, கப்பலுக்கு குண்டு வைக்கப்பட்டுள்ளது.

கட்டுக் காவலை மீறிச் சென்று குண்டு வைப்பது புலிகளால் முடியாத காரியமில்லை. ஆனால் இப் பகுதிக்குள் ஊடுருவ புலிகள் முயன்றிருந்தால், இக் கப்பலைவிட பெரிய இலக்குகளை குறிவைத்திருக்கலாமே! இதனால்தான் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

துறைமுகப் பகுதியில் தரித்துள்ள வெளிநாட்டு கப்பல்களை தாக்கியிருக்கலாம்.

அல்லது அங்குள்ள பொலிஸ் நிலையத்தைக்கூட இரவோடு இரவாக தாக்கியிருக்கலாம்.

அரசுக்கு நேரடியாக நஷ்டத்தையும், இழப்பையும் உண்டாக்கக்கூடிய இலக்குகள் பல குறிப்பிட்ட பகுதியில் உள்ளன.

26.10.96 அன்று இப் பகுதியில் வைத்துத்தான் கடற்படைக்கு சொந்தமான டோராப் படகு ஒன்று கடற்புலிகளால் தாக்கப்பட்டது.

எனவே, கட்டுக்காவல் மிக்கதும், பெரிய இலக்குகள் நிறைந்ததுமான பகுதிக்குள் ஊடுருவ வாய்ப்புக் கிடைத்தால், சிறிய தனியார் கப்பல் ஒன்றை தாக்குவதோடு அந்த வாய்ப்பை இழக்க புலிகள் நினைப்பார்களா? நினைக்கமாட்டார்கள்.

அது மட்டுமல்ல, திருமலை, மூதூர் கப்பல் சேவையால் புலிகளுக்கு பல வழிகளில் இலாபம் என்று புலிகளது எதிர்தரப்புகள் கருதியிருக்கலாம்.

குறிப்பிட்ட கப்பல் சேவை மூலம் புலிகளுக்கு உணவுப் பொருட்கள் போய்ச் சேருகின்றன. திருமலை நகருடன் மூதூர் புலிகளுக்கு தொடர்புகள் பேணப்படவும் போக்குவரத்து சீராக இருப்பது சாதகம் என்றும் கருதியிருக்கலாம்.

மூதூரில் பாதி படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. மீதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியிலும் புலிகளது செல்வாக்கு நிலவுகிறது.

எனவே திருமலை-மூதூர் கப்பல் சேவை சீராக நடப்பது புலிகளுக்கும் சாதகமே தவிர எவ்வகையிலும் பாதகம் இல்லை.

அது மட்டுமன்றி பயணிகள் சேவையை நிறுத்த நினைத்தால் புலிகள் குண்டு வைக்கத் தேவையில்லை. ஒரு எச்சரிக்கை விடுத்திருந்தாலே போதுமானது.

யாழ் தனியார் விமான சேவை விடயத்தில் மீண்டும் மீண்டும் போதிய எச்சரிக்கைகளை புலிகள் விடுத்திருந்தனர். சுவரொட்டிகள்கூட ஒட்டியிருந்தனர்.

மொத்தத்தில் மூதூர்-திருமலை பயணிகள் கப்பல் சேவையை புலிகள் நிறுத்துவதற்கு காரணம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை.

அதே சமயம் அரச செய்தி ஊடகங்களும், பாதுகாப்பு பிரிவுகளும் நடந்து கொண்ட முறைகளும் சந்தேகங்களை வலுப்படுத்துகின்றன.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த தினத்தன்று அரச வானொலி தற்கொலைத் தாக்குதல் என்று செய்தியில் கூறியது. தற்கொலை குண்டுதாரியின் உடலும் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவித்தது.

மறுநாள் 26.07.99 அன்று அரச ஏரிக்கரை பத்திரிகைகளிலும் 'தற்கொலைத் தாக்குதல்' என்றே செய்தி வெளியிடப்பட்டது.

இவை அரச செய்தி ஊடகங்கள் தாமாக புனைந்த கதைகளாக இருக்க முடியாது. தமக்கு தெரிவிக்கப்பட்ட செய்திகளையே வழக்கம்போல அவை வெளியிட்டுள்ளன.

அதேபோல துறை முகப் பகுதியில் கிடந்ததாக நீரடி நீச்சலுக்குரிய உபகரணங்களும் காண்பிக்கப்பட்டுள்ளன.

கரும்புலி ஒருவர் நீரடி நீச்சல் மூலம் கப்பலை தகர்த்துவிட்டார் என்பது போலவே சகல சித்தரிப்புக்களும் இருந்தன.

ஆனால் அங்கு கண்டெடுக்கப்பட்ட உடல் கரும்புலியின் உடல் அல்ல. கப்பலின் பிரதம அதிகாரியான சவரிமுத்து அருள்நாயகத்தின் உடல்தான் கண்டெடுக்கப்பட்டது.

கப்பலின் மேல் தளத்தில் படுத்திருந்த அருள்நாயகம் குளிர்காற்று பலமாக வீசியதால் எழுந்து கீழ்தளத்திற்கு சென்று படுத்திருக்கிறார். அதனால்தான் குண்டு வெடித்தபோது பலியானார். மேல் தளத்திலேயே படுத்திருந்தால் தப்பியிருப்பார்.



இலங்கைப் படையினருடன் அமெரிக்க பச்சைக் கமாண்டோக்கள். இப்படம் புலிகளது புலனாய்வுப் பிரிவால் கொத்திச் செல்லப்பட்டு வெளியிடப்பட்டது. இது முன்பும் முரசில் பிரசுரமாகியது.

அருள்நாயகத்தை பொலிசாருக்கும் நன்கு தெரியும். 'டடா' என்றுதான் பொலிசாரும் அவரை அழைப்பதுண்டு.

அப்படியிருக்க கரும்புலியின் உடல் கண்டெடுக்கப்பட்டதாக செய்தி வந்தது எப்படி?

நீரடி நீச்சல் மூலம் கப்பலை புலிகள் நெருங்கியிருந்தால், உபகரணங்களை விட்டுச் செல்ல வேண்டிய அவசியம் என்ன? கொண்டு வந்தவர்களுக்கு அதனை திரும்பக்கொண்டு செல்வதா கடினம்?

எப்படியோ கப்பல் தகர்ப்புக்கு யார் காரணம் என்பதை நாம் கூறும் நிலை இல்லை. ஆனால் இதனால் யாருக்கு சாதகம் அதிகம் என்று மட்டும் பார்ப்போம்.

அதுமட்டுமன்றி பாதுகாப்பு அமைச்சு உடனடியாக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டு, புலிகள்தான் காரணம் என்று அடித்துச் சொல்லியுள்ளது. போதிய விசாரணையின் முன்பே அறிக்கை வந்துவிட்டது.

வன்னியில் மக்கள் பட்டினி கிடப்பதற்கு புலிகள் காரணம் என்பது போல ஒருபுறம் பிரசாரம் நடக்கிறது.

அதேபோல திருமலை மூதூர் பயணிகள் சேவையும் புலிகளால் சீர்குலைந்தது என்று பிரசாரம் செய்ய இச்சம்பவம் தோதாக இருக்கிறது என்பது மட்டும் உறுதி.

வன்னி பொருளாதாரத் தடைக்கு புலிகள் மீது பழி போடுவதற்கு துணையாக, புலிகள் எங்குமே பொதுமக்கள் நலனுக்கு ஊறுவிளைவிக்கிறார்கள், போக்குவரத்துக்கு குறுக்கே நிற்கிறார்கள்' என்று காண்பிக்க கப்பல் தகர்ப்பு சாதகம்தான்.

இந்த இடத்தில் முக்கியமான ஒரு நிகழ்வை கவனிக்க வேண்டும். கொழும்பு ஆங்கில பத்திரிகைகள் வெளியிட்டுள்ள செய்தி இது.

அமெரிக்க படை அதிகாரி ஜெனரல் சிமித் 20.07.99 அன்று கொழும்பு வந்து மூன்று நாள் தங்கியிருந்தார்.

வடக்கு-கிழக்கு படை அதிகாரிகள் அனைவரும் அவரைச் சந்தித்து போரை வெற்றி கொள்ளும் உபாயங்கள் பற்றி கலந்துரையாடினார்கள்.

ஜெனரல் சிமித் படை அதிகாரிகளுக்கு கூறியுள்ள முக்கிய உபாயம், "புலிகளையும், தமிழ் மக்களையும் பிரிப்பதற்கும், புலிகளை தனிமைப்படுத்தவும் திட்டங்கள் தீட்டி செயற்படுங்கள்" என்பதுதான்.

இச் செய்திகள் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. அரச தரப்போ படைத் தரப்போ, அமெரிக்கத் தரப்போ சிறிதும் மறுக்கவில்லை.

மூதூர் பயணிகள் கப்பல் தகர்ந்த செய்தியை ஜெனரல் சிமித் அறிந்திருந்தால் மிகவும் மகிழ்ந்திருக்கக்கூடும். இதனை தமிழ் மக்களிடம் பிரசாரப்படுத்துமாறு யோசனையும் கூறியிருக்கலாம்.

## அமெரிக்க தளபதியின் புத்தியும் உத்தியும்

20ம் திகதி ஜெனரல் சிமித் கொழும்பு வருகிறார். 23ம் திகதி திரும்புகிறார். 26ம் திகதி பயணிகள் கப்பல் தகர்ந்து போகிறது. இவை எல்லாம் தற்செயலான நிகழ்வுகளா? யாமறியோம்!

ஜெனரல் சிமித் மேலும் கூறியுள்ள உபாயங்கள் பின்வருமாறு:

* கைப்பற்றிய பகுதிகளில் புனர்வாழ்வு மூலம் பொதுமக்களை கவர்வது.

* செய்தி ஊடகங்களின் அனுசரணையை பெற்றுக் கொள்வது.

* கைப்பற்றப்பட்ட பகுதி மக்களை உளவியல் ரீதியில் கவருவதற்கு ஏற்ற உதவிகளை செய்ய வேண்டும்.

வியட்நாம் மக்களின் தலைகளில் குண்டுகளையும் போட்டுவிட்டு, பின்னர் அதே விமானங்களில் குழந்தைகளுக்கான பொம்மைகளையும் போட்டது அமெரிக்கா. அதுகூட மக்களை கவரும் உத்திதான். ஆனால் வெற்றி மட்டும் கிட்டவில்லை.

சில உத்திகளை கூறுவது சுலபம். நடைமுறைப்படுத்துவது கடினம்.

புலிகள் தாக்கினால் பதிலுக்கு மக்களைத் தாக்கும் பதிலடிகள் நாளும் பொழுதும் அதிகரித்து வரும்போது, மக்களை கவரும் ஜெனரல் சிமித்தின் உபாயம் எப்படிப் பயன்படும்?!

கெரில்லா தாக்குதல்கள் மேலும் தீவிரமாகப் போகின்றன. வடக்கு-கிழக்கு எங்கும் கெரில்லா தாக்குதலுக்கு இலக்குகள் தேடும் பணியில் புலிகளது புலனாய்வு பிரிவு தகவல்களை கறந்து வருகிறது.

பல்வேறு ரூபங்களில் புலனாய்வுப் புலிகள் நாடெங்கும் ஊடுருவியுள்ளனர்.

முதலில் துல்லியமான தகவல்கள், பின்னர் கச்சிதமான தாக்குதல்கள் என்பதே யாழ் குடாநாடு மற்றும் கிழக்கில் புலிகளது தற்போதைய உத்தி.

படை இலக்குகள் மட்டுமன்றி, தமிழ்கட்சிகளது செயற்பாடுகளும் அவதானிக்கப்பட்டு வருகின்றன.

வவுனியாவில் 26.07.99 அன்று 'கறுப்பு ஜூலை' நினைவாக புலிகள் அதிரடி கெரில்லா தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

வெலிக்கடை சிறைப்படுகொலை நடைபெற்று 26.07.99 அன்று பதினாறு வருடங்கள் நிறைவு பெற்றன.

தலைநகரில் புலிகள் தாக்கலாம் என்று படையினர் எதிர்பார்த்து இருக்கையில், வடக்கின் முக்கிய நகர்களில் ஒன்றான வவுனியாவில் கெரில்லாக்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்தப்பட்டது சாதாரண பகுதியில் அல்ல. அதி உயர் பாதுகாப்பு பகுதியில்தான். ஒட்டோவில் வந்து தாக்கிவிட்டு அதே ஒட்டோவில் சுலபமாக தப்பிப்போயுள்ளனர்.

இராணுவ இணைப்பு செயலகம், புலனாய்வு அலுவலகம், பொலிஸ் எஸ்.பி அலுவலகம் போன்றன உள்ள பகுதியிலேயே தாக்குதல் நடந்தது.

தாக்குதல் நிகழ்ந்த தேநீர் கடைக்கு முன்பாக பொலிஸாரின் தங்குவிடுதி உள்ளது.

அப்பகுதி சிங்களப் பகுதி போன்றதாகும். தாக்குதலில் பலியான ஐந்து பொதுமக்களில் நான்குபேர் சிங்களவர்கள். ஒருவர் தமிழர். பொலிசார் ஒருவரும், படையினர் இருவரும் பலியாகி உள்ளனர். மேலும் சிலர் காயமடைந்தனர்.

ஒட்டோ ஒன்றை கடத்திச் சென்றே தாக்குதலுக்கு பயன்படுத்தி உள்ளனர்.

இத் தாக்குதலுக்கு வவுனியாவில் உள்ள தமிழ் இயக்கங்கள்மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

அது தவறான சந்தேகம். வவுனியாவில் அதி உயர் பாதுகாப்பு மையத்தில் தாக்குதல் நடந்துள்ளதாக புலிகளின் குரலும் கூறியுள்ளது.

வவுனியா தாக்குதலின் பின்னர் தேடுதல்கள், சுற்றி வளைப்புக்கள் இடம்பெற்றன.

இவை தவிர்க்க முடியாதவை. ஆனால் கெரில்லாக்களை தப்ப விட்டுவிட்டு தங்களை சிரமத்திற்கு உள்ளாக்கும் போது படையினர் மீது பொதுமக்களுக்கு அதிருப்தி ஏற்படுவதும் தவிர்க்க முடியாதது.

இவ்வாறான சூழ்நிலைகள் ஜெனரல் சிமித்துக்கு தெரியாமல் இருக்கலாம்.

நவீன ஆயுதங்களும், ஆட்பலமும் போரின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பது நாடுகளுக்கிடையான பெரும் யுத்தங்களில் சாத்தியப்படலாம்.

ஆனால் போராடும் இயக்கங்களுடன் நடைபெறும் போர்களில் அவை தீர்மானிக்கும் பாத்திரம் வகிப்பதில்லை. அவற்றால் அழிவுகளை உண்டாக்க முடியும். அந்த அழிவுகளுக்கு ஏற்ப மேலும் எதிர்ப்பலைகள் தான் குறிப்பிட்ட மக்களிடம் எழும். இது வியட்நாம் முதல் இன்று அதி நவீன பிரிட்டிஷ் படைகளை எதிர்கொள்ளும் ஐரிஸ் போராளிகள் வரை தகுந்த உதாரணங்கள்.

அமெரிக்கப் படையினர் இலங்கை அரச துருப்புக்களுக்கு பயிற்சி அளிப்பது முதலில் இரகசியமாக இருந்தது. பின்னர் அது அம்பலமானது.

அப்போது அமெரிக்கா சொன்ன காரணம் தமாஷானது. 'யுத்தத்தில் ஈடுபட பயிற்சி அளிக்கவில்லை' என்று கூறியது.

ஆனால் தற்போது யுத்த உபாயங்கள் குறித்து அமெரிக்க படை அதிகாரியே வந்து விளக்கம் கொடுத்துச் செல்கிறார்.

அதுமட்டுமன்றி அமெரிக்காவில் இருந்து ஒரு தொகையான இராணுவ வாகனங்கள் படையினருக்கு வந்து சேரப்போகின்றன.

தென் கொரியாவில் உள்ள அமெரிக்க தளத்தில் இருந்து இந்த வாகனங்கள் வந்து சேரப்போகிறதாம்.

தற்போதும் இலங்கை படையினருக்கு தென்னிலங்கையின் பல பகுதிகளில் மிக இரகசியமாக அமெரிக்க படையினர் பயிற்சிகள் கொடுத்து வருகின்றனர்.

கடற்பரப்பில் சண்டையிடும் பயிற்சிகளும் மேலும் அதிகரிக்கப்பட உள்ளதாம்.

அமெரிக்கா நேரடியாகத் தனது படைகளை இறக்கவில்லையே தவிர, இன்றைய யுத்தத்தில் முக்கிய பங்காளியாக மாறியுள்ளது.

அண்மையில் உலக வங்கி பிரதிநிதிகள் சிலர் இலங்கைக்கு வந்திருந்தனர். இவர்களது நோக்கம் குறைந்த பட்ச தீர்வு ஒன்றை தமிழ் மக்கள் ஏற்கவைத்து அரசுக்கு உதவுவது தான்.

தென்னாசியாவில் அமெரிக்காவுக்கு ஒத்துழைக்கும் இலங்கையின் சந்திரிக்கா அரசுக்கு இத்தகைய உதவிகள் வழங்குவது, தொடர்ந்து தமது பிடியில் வைத்திருப்பதற்கே.

உலக வங்கி ஒரு நிதி நிறுவனம். அதற்கு அரசியல் அபிலாசைகள் கிடையாது என்று முன்பு கூறப்பட்டது. ஆனால் அது உண்மையல்ல.

அமெரிக்கா போன்ற நாடுகள் உலகை தம் பிடியில் வைத்திருக்க உலக வங்கி மூலம் கடன்கள் கொடுத்து வளைப்பதும், அக்கடன்களை சாச்சாக வைத்து உள்நாட்டு அரசியலில் கட்டளைகள் பிறப்பிப்பதுமே வழக்கம்.

தற்போது பகிரங்கமாகவே உலக வங்கி இலங்கை இனப்பிரச்சனையில் மூக்கை நுளைத்துள்ளது. தமிழ்க் கட்சிகளையும் அழைத்து நோட்டம் பார்த்துள்ளது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை எதிர்க்கும் இலங்கை அரசு தனக்கு சாதகமான தலையீடுகளை அனுமதித்துள்ளது.

இந்திய முன்னாள் தூதர் 'ஜா' இலங்கை பிரச்சனைபற்றி கூறிய கருத்துக்களை இலங்கை ஆட்சேபித்தது.

ஆனால் உலக வங்கி பிரதிநிதிகள் இங்கு வந்து இனப்பிரச்சனை தீர்வு பற்றி ஆலோசித்ததை குறை கூறவில்லை.

மொத்தத்தில் அமெரிக்காவும் அதன் ஆதிக்கத்துக்கு உதவும் நிறுவனங்களும் இலங்கை யுத்தத்தில் அரசுடன் கைகோர்த்து களம் இறங்கிவிட்டன.

**நாரதர்**

# அதிரடி அய்யாத்துரை



***வன்னிப் பிரச்சனை*** பற்றி மலையகத் தனித்துவ தொண்டரை கூட்டம் கூட்டுமாறு கேட்டது தமிழ்க்கட்சி சித்தர் தானாம். 'உது உங்கள் பிரச்சனை' என்று முதலில் மறுத்தாராம் தொண்டர். "ஐயா! நீங்கள் எங்களுக்கெல்லாம் மூத்தவர். நாங்கள் கூப்பிட்டால் மற்றவை வரமாட்டினம். நீங்கள் கூப்பிடுங்கோ" என்று சித்தர் மன்றாட்டமாக கேட்டுக் கொண்டாராம். தனித்துவ தொண்டரை வடக்கு-கிழக்கு கட்சிகள் மூத்த தலைவர் என்றும், வழிகாட்டி என்றும் போற்றுவதில் அர்த்தமிருக்குதான். எப்படி என்று நீங்கள் யோசித்துப் பாருங்கோ. புரியும்.

***தொண்டரின் கூட்டத்தில்*** குமாரர் ஒரு பிடி பிடித்து பலரை ஆட்டம் காணச் செய்து போட்டார். 'இங்கே ஒன்று பேசுவார்கள். வெளிநாட்டு தூதரங்களுக்கு சென்று வேறொன்று பேசுவார்கள். அது நீர்தான்' என்று சம்பந்தமானவருக்கு நெத்தியடியாக கூறினாராம் குமாரர். தெரியாத்தனமாக கூப்பிட்டுவிட்டோம் என்று நினைத்திருப்பார் தொண்டர்.

***வடக்கு-கிழக்கு*** மாகாணசபைத் தேர்தல் தற்போதைக்கு இல்லை என்று அதிகார சக்தி உறுதியாக தமிழ்க்கட்சி வட்டாரங்களுக்குக் கூறி விட்டாராம். இரு மாகாணங்களும் இணைந்திருக்கக் கூடியதாக தேர்தல் நடத்த மாட்டார்கள் என்று 'முரசு' கூறியதன் உண்மை இப்போது புரி கிறதோ? காலத்தை இழுத்தடித்து, நிலங்களை விழுங்கி, பிரிப்புக்கு வழி தேடுவதுதான் பொதியின் இரகசியம். அதுக்கு தோதான ஏற்பாடுகளை மட்டும்தான் செய்வினம். அதெல்லாம் கிடக்க, கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தாவிட்டால் 'வழக்குப் போடுவோம்' என்று சூளுரைத்த டமில் கட்சி டமிலர் என்ன ஆனார்?

***தனியார் தொலைக்காட்சி*** ஒன்றில் தமிழ்ப்பிரிவு செய்திக்கும் பெரும்பான்மை இனத்தவரே பொறுப்பாம். தேனகம் தொடர்பாக வெளியான செய்தி ஒன்று பற்றி இரண்டு தமிழ் செய்தியாளர்கள் அந்தப் பொறுப்பாளரால் அச்சுறுத்தப்பட்டனராம். 'சிறுபான்மையினருக்கு பாதகமான செய்தியை எப்படி வெளியிடலாம்?' என்று கேட்டுத்தான் அச் சுறுத்தலாம். தமிழர் ஒருவருக்குச் சொந்தமான நிறுவனத்திலேயே இப்படி நடக்கிறதே என்று அந்தச் செய்தியாளர்கள் புலம்பினார்களாம்.

***கொழும்பு நகரில்*** பிரபலமான தனியார் மலர்ச்சாலை அது. கொழும்பில் உள்ள தமிழர்கள் பலர் நாடுவதும் அதனையே. அங்கு சமீபத்தில் பெரிய மோசடி ஒன்று நடந்திருக்குது. இறுதிச் சடங்குக்காக 30 ஆயிரம் ருபா பெறுமதியான சவப்பெட்டி வாங்கினாராம் சிங்கள தனவந்தர் ஒருவர். குறிப்பிட்ட தனியார் நிறுவனமே அவரது உறவினரது மரணச்சடங்கை பொறுப்பேற்று நடத்தியது. பெட்டியோடு பிணத்தை சூளைக்குள் வைத்து மூடிவிட்டனர். தனவந்தருக்கு சந்தேகம். எங்கே பிணம் எரிந்த புகையைக் காணவில்லை என்று கேட்டாராம். தடுமாற்றமாக பதில்கள் வந்தன. மறுபடி சூளையைத் திறக்குமாறு தனவந்தர் சத்தம் போட்டாராம். திறந்தபோது அதிர்ச்சி காத்திருந்தது. சவப்பெட்டியைக் காணவில்லை. பிணம் மட்டும் சூளைக்குள் கிடந்தது. மறுபடி அந்தப் பெறுமதியான சவப்பெட்டியை விற்பதற்குத்தான் சூளையின் மறுபக்கத்தால் இப்படி எடுத்து வைக்கிறார்களாம். சூளையில் நின்றவர்கள் கோபம் கொண்ட கூட்டத்தால் நையப்புடைக்கப்பட்டனராம். 'ஜெய ஜெய' என்று நடக்குது சவப்பெட்டித் திருட்டு. ஜாக்கிரதை!

***பாராளுமன்றத்தில்*** பொதியைப் போடப் போவதாக டமில் கட்சிகளுக்கு யாரோ கதை விட, அதனை நம்பி டமில் கட்சிகள் கூறியுள்ள கருத்துக்கள் புல்லரிக்க வைக்குது! எதை முன்வைக்கப் போகினம் என்று தெரியாதாம். ஆனால் வரவேற்கினமாம்! இந்த ஒப்பற்ற கருத்தைக் கூறிய அந்த தன்மான தலைவரின் பெயரை குறிப்பிட்ட பத்திரிகை வெளியிட்டு இருக்கலாம்தானே! புத்திசாலித்தனத்தைக் காட்டியிருக்கலாமல்லோ? எதை எதை வரவேற்பது என்று ஒரு விவஸ்தை வேண்டாமோ?

**இந்தவாரப் பொன்மொழி:**

"இளமையில்
தவறான பலவற்றை
நம்புகிறோம்!
முதுமையில்
உண்மையான பலவற்றை
சந்தேகிக்கிறோம்!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

244

# ஆனையிறவுச் சமர்

## சாதகங்களும், பாதகங்களும்

ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதலில் படையினரைவிட புலிகளது தரப்புக்கு உயிரிழப்பு அதிகம்.

ஆனால் வெற்றிலைக் கேணி புல்லாவெளியில் தரையிறக்க படையினருடன் நடைபெற்ற சண்டைகளில் படையினருக்கு கணிசமான இழப்புக்கள் ஏற்பட்டன.

வெற்றிலைக்கேணி புல்லாவெளி சண்டையில் இரு தாக்குதல்களை புலிகள் நடத்தினார்கள். 21.07.91 அன்று முள்ளியானில் நடைபெற்ற தாக்குதல் சண்டையில் புலிகள் தரப்பில் 42 பேர் பலியானார்கள். படையினர் தரப்பில் 90ற்கு மேற்பட்டோர் பலியானார்கள். இவர்களில் 31 உடல்களை புலிகள் கைப்பற்றினார்கள். 29 உடலகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.



புலிகளின் தளபதி சொர்ணம்

முள்ளியான் தாக்குதல் சண்டை வெற்றியாக முடிந்ததோடு. அதன் பின்னர் ஈழ யுத்தத்தில் ஊடறுப்பு சமர்கள் பலவற்றை நடத்துவதற்கான அனுபவத்தையும் புலிகளுக்கு ஏற்படுத்தியது.

அதுவரை கண்ணிவெடித் தாக்குதல், அதிரடித்தாக்குதல், முற்றுகைச் சமர் போன்றவற்றிலேயே புலிகள் ஈடுபட்டு வந்தனர்.

முள்ளியான் சண்டையோடு ஊடறுத்து உள்நுழையும் தாக்குதல் முறையையும் புலிகள் கையாள ஆரம்பித்தனர்.

சண்டைகளில் திருப்பங்களை ஏற்படுத்தும் போர் முறைகளில் இதுவும் ஒன்று. நீண்டு பரந்து நகரும் படையணிகள்மீது திடீர் ஊடறுப்பு நடத்தப்படும் போது படையணிகள் சிதறுகின்றன. பலத்த இழப்பும் ஏற்படும்.


தளபதி சொர்ணம் தலைமையில் நடத்தப்பட்ட இத் தாக்குதல் புலிகளது போராட்ட வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

15.08.91 அன்று புல்லாவெளியில் புலிகள் மேற்கொண்ட ஊடறுப்பு தாக்குதல் தோல்வியில் முடிந்தது.

புலிகள் தரப்பில் 43 பேர் பலியானார்கள். படையினர் தரப்பில் 10பேர் வரையே பலியானார்கள்.

இந்த இரண்டு தாக்குதல் சண்டைகளிலும் புலிகள் தரப்பில் 85 பேர் பலியானார்கள். படையினர் தரப்பில் நூறு பேர் வரை பலியானார்கள்.

ஆனால் ஆனையிறவு தளம் மீதான நான்கு தாக்குதல் சண்டைகளில் 200 புலிகள் வரை பலியானார்கள். படையினர் தரப்பில் 50 பேர் வரைதான் பலியானார்கள்.





பிரபா

ஆனையிறவு தளம் மீதான தாக்குதல் சண்டைகளில் படையினரது இழப்பை விட புலிகளது இழப்பு பாரியது.

ஆனால் வெற்றிலைக் கேணியில் இருந்து நகர்ந்த படைகளுடனான சண்டைகளில் புலிகளது இழப்பு படையினரைவிட குறைவாக இருந்தது.

இதற்கு முக்கிய காரணம், ஆனையிறவில் படையினர் தாக்குதலை எதிர்பார்த்து போதுமான தற்காப்பு ஏற்பாடுகளை செய்து வைத்திருந்தனர்.

ஆனால் வெற்றிலைக் கேணி, புல்லாவெளி போர்முனையில் தற்காப்பு ஏற்பாடுகளை படையினர் மேற்கொள்ள போதிய அவகாசம் கிடைக்கவில்லை.

ஆனையிறவுச் சண்டை உக்கிரமாக நடைபெற்றதுபோது பி.பி.சி வானொலியில் அதுபற்றிய செய்திகள் வெளியாகின.

அப்போது பி.பி.சி. சுதந்திரமாக செய்திகளை வழங்கி வந்தது. இலங்கை அரசுடன் கூட்டுச் சேரவில்லை.

பி.பி.சியின் கொழும்பு நிருபராக இருந்தவர் கிறிஸ்டோடர் மொறிஸ்.

இலண்டனில் இருந்து அவரிடம் தொலைபேசி மூலம் கேட்கப்பட்ட கேள்வி, "ஆனையிறவில் என்ன நடக்கிறது?"

அதற்கு அவர் பின்வருமாறு பதில் கூறினார்:" புலிகள் ஆனையிறவை முற்றுகையிட்டு உக்கிரமான தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனைத் தடுத்து நிறுத்த இராணுவம் கடும் முயற்சி செய்து வருகிறது.

இழப்புக்கள் பற்றி இராணுவத் தரப்பில் இருந்து வரும் தகவல்கள் நம்பகத் தன்மையற்று உள்ளன.

10 வருட உள்நாட்டுப் போரில் முதற் தடவையாக மரபுப் போர் முறையில் புலிகள் போரிட்டு வருகின்றனர்.

அப்போது குறுக்கிட்ட இலண்டன் செய்தியாளர், "ஆகவே இலங்கையில் இரண்டு இராணுவங்கள் இருக்கின்றன என்று சொல்கிறீர்களா?" எனக் கேட்டார்.

"ஆம், அப்படித்தான்" என்று பதிலளித்தார் கிறிஸ்மொறிஸ்.

28.07.91 அன்று பி.பி.சியில் மேற்படி சம்பாஷணை இடம் பெற்றிருந்தது.

இலங்கையில் இரண்டு இராணுவங்கள் உள்ளன என்ற கருதுகோளை உருவாக்கியது வெற்றிலைக் கேணி, புல்லாவெளி சண்டைதான்.

14.07.91 அன்று மாலை ஆனையிறவில் இருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த வெற்றிலைக்கேணி கடற்கரையில் இராணுவம் தரையிறக்கப் பட்டது.

அதன் பின்னர் சண்டையின் மையம் வெற்றிலைக் கேணிப் பக்கம் நகர்ந்தது.

### சாதக பாதகம்

தரையிறக்கத்தை பொறுத்தவரை படையினருக்கு பல சாதகமான நிலைகள் அப்போது இருந்தன.

கடல்வழி தரையிறக்கம் வெற்றிலைக் கேணி, சுண்டிக்குள கடற்பகுதியில்தான் நடக்கும் என்பதை புலிகள் முன்கூட்டியே ஊகித்திருந்தனர்.

வெற்றிலைக்கேணி, சுண்டிக்குள கடற்கரையோர நீளம் சுமார் 16 கிலோ மீட்டர்.

இந்தளவு தூரத்திற்கும் தமது அணிகளை நிறுத்தி வைக்கும் அளவுக்கு புலிகளிடம் அப்போது ஆட்பலம் இருக்கவில்லை.

16 கி.மீட்டர் நீளமான கடற்பரப்பில் எங்கு படையினர் இறங்கப்போகின்றனர் என்பது குறிப்பாகத் தெரியாது.

அவ்வாறு தெரிந்து குறிப்பிட்ட பகுதியில் அணிகள் தயாராய் நின்றால்கூட, படையினர் அதனை தவிர்த்து வேறு பகுதியில் தரை இறங்குவர்.

ஆனையிறவு தளம்மீது முற்றுகைச் சண்டையையும் நடத்திக் கொண்டு, கடற்கரைப் பகுதியிலும் அணிகளை குவித்து வைத்திருக்க புலிகளுக்கு ஆட்பலம் போதாது.

ஆனால் படையினரிடம் ஆட்பலம் இருந்தது. ஆயுத தளபாட வசதிகளும் இருந்தன.

14ம் திகதி வெற்றிலைக்கேணி சந்தியை நோக்கி சென்ற கடற்படை படகுகள் புலிகளின் எதிர்ப்பால் திரும்பிச் சென்றன.

பின்னர் சிறிது நேரத்தில் மறுபடி திரும்பி முன்னர் இறங்க முயற்சித்த இடத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் படையினரை இறக்கின.

ஒருவேளை அங்கு புலிகள் கடும எதிர்ப்பைக் காட்டியிருந்தால் வேறு பகுதியில் தரையிறக்கம் நடந்திருக்கும்.

அப்போது புலிகளிடம் கடற்புலி அணிகள் பலமாக இருக்கவில்லை. நீண்டதூர ஆட்டிலெறிகளும் இருக்கவில்லை.

வெற்றிலைக் கேணி புல்லாவெளி கடல் வெளி சண்டையில் எட்டாயிரம் இராணுவத்தினர் பங்கு கொண்டனர்.

இதுதவிர கடற்படை, விமானப் படை, பீரங்கிப் படை, கவசவாகனப்படை போன்றவை பக்க துணையாக நின்றன.

இச் சண்டையை எதிர்கொண்ட புலிகளிடம் மேற்கண்ட படைபலங்களும் படைக் கல வசதிகள் இருக்கவில்லை.

அவ்வாறிருந்தும் படையினரை தடுத்து நிறுத்தி பலத்த இழப்பையும் ஏற்படுத்தினார்கள்.

முன்னேறித்தாக்கும் போது ஒரு படையணியையும், கைப்பற்றிய பகுதிகளை பாதுகாக்க இன்னொரு படையணியையும் படையினர் பயன்படுத்தினர்.

அதனால் படையணிகளுக்கு போதிய ஓய்வு கிடைத்தது.

ஆனால், படையினர் முன்னேறித் தாக்கும் போது தடுத்து சண்டையிடும் புலிகள் தான் பின்னர் காவல் பணியிலும் ஈடுபட்டனர்.

இதனால் சண்டை நீண்டபோது ஓய்வின்மை, நித்திரையின்மை போன்றவற்றால் புலிகளிடம் களைப்பு ஏற்பட்டது.

ஓய்வாக இருந்து உணவு உண்பதற்கோ, மாற்றுடைகளை அணிவதற்கோ நேரமும் கிடைக்கவில்லை.

### படைபலம்

ஆகாய கடல்வெளி நடவடிக்கையில் பலியான படையினரது எண்ணிக்கை 400ற்கு மேல் என்று புலிகள் கூறினார்கள்.

இதில் கடல் வெளிச் சமரில் 250 படையினரும், ஊடறுப்பு தாக்குதல்களில் நூறுபேரும் கொல்லப்பட்டனர்.

ஆனையிறவு தளம் மீதான தாக்குதலில் 50 படையினர் மட்டுமே பலியானார்கள்.

படையினரின் பலத்தில் படைக்கல பலம் குறிப்பிடத்தக்கது.

புலிகள் தங்கள் ரவைகளையோ ஷெல்களையோ சிக்கனமா கவே உபயோகித்தனர். ஆனால் படையினர் தாராளமாக பயன்படுத்தினார்கள்.

புலிகளது ஒரு ரவைக்கு பதிலாக படையினர் 25 ரவைகளைப் பயன்படுத்தினர். ரவைகள் பயன்பாடு புலிகளுக்கும் படையினருக்கும் 1:25 என்ற விகிதத்தில் இருந்தது.

அதேபோல எறிகணைகள், பீரங்கிக் குண்டுகள், விமானக் குண்டுகள் போன்றவையும் மிகத் தாராளமாக பயன்படுத்தப் பட்டன.

### காயமடைந்தோர்

ஆகாய கடல் வெளிச் சமரில் புலிகள் தரப்பில் 1500 பேர் காயமடைந்தனர். இதில் ஆயிரம் புலிகள் குண்டுச் சிதறல்களால் காயமடைந்தனர். பீரங்கிக் குண்டு அல்லது விமானக்குண்டு ஆகியவற்றால்தான் காயமடைந்தனர்.

சுமார் 480 புலிகள் துப்பாக்கி சூட்டுக் காயங்களுக்கு உள்ளானார்கள்.

கடல்வெளியில் நடைபெற்ற சண்டைகளில் 885 படையினர் காயமடைந்தனர். இவர்களில் 720 புலிகள் துப்பாக்கி சூட்டுக் காயங்களுக்கு உள்ளானார்கள்.

ஆனால் கடல் வெளியில் நடைபெற்ற சண்டையில் 480 புலிகள்தான் காயமடைந்தனர்.

புலிகள் 2000 பேரும், படையினர் 8 ஆயிரம் பேரும் மோதிய கடல்வெளிச் சமரில் புலிகள் தரப்பை விட ஆள் இழப்பிலும், காயமடைந்ததிலும் படையினரது எண்ணிக்கையே அதிகமாயிருந்தது.

ஆனையிறவு தள முற்றுகையை தகர்க்க படையினர் தரை இறக்கம் ஒன்றை மேற்கொள்வர் என்று புலிகள் எதிர்பார்த்தனர். ஆனால் சில நூறு படையினர் தான் தரை இறங்க அனுப்பப்படுவார் என்றே நினைத்தனர்.

எட்டாயிரம் படையினர் தரை இறக்கப்பட்டது மூலம் புலிகளின் எதிர்பார்ப்புக்கு மாறான திட்டத்தை படையினர் வகுத்தனர்.

எனினும் 31 நாட்களாக நடைபெற்ற பாரிய சமரை இரு தரப்பும் எதிர்பார்க்கவில்லை.

வடக்கு-கிழக்கில் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த புலிகள் ஆனையிறவு சமரில் பங்கேற்றனர்.

அதேபோல படையினரிலும் தென்னிலங்கையின் சகல மாவட்டங்களை



கொப்பேகடுவ-'பலவேகய'வுக்குத் தலைமை தாங்கியவர்.

சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

புலிகள் எதிர்பார்த்தது போல ஆனையிறவு தளம் வீழ்ந்திருந்தால் இன்று வன்னிச் சமரின் தலைவிதி வேறு விதமாக இருந்திருக்கும்.

தற்போது குடாநாட்டை படையினர் தக்கவைப்பதற்கும் ஆனையிறவு தளமே பெரும் அரணாக இருக்கிறது.

ஆனையிறவு தளம் இல்லையானால் புலிகளின் வன்னி தளத்துக்கும் குடாநாட்டுக்கும் இடையே தரைவழித் தொடர்பு இருந்திருக்கும்.

தற்போது உள்ளதைவிட குடாநாட்டுக்குள் புலிகளது அணிகள் ஊடுருவ வசதியாக இருந்திருக்கும்.

ஆனையிறவு தளத்தை புலிகளிடம் இருந்து பாதுகாத்தது படையினருக்கு இராணுவ ரீதியில் நீண்டகால சாதகங்களை உருவாக்கியது.



(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# '83 இனப்படுகொலையும் — இன்றைய வடிவங்களும்

## அலசுவது - இராஜதந்திரி

1983 ஜூலை இனப்படுகொலை நிகழ்ந்து 16 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனேயும், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளரும் திட்டமிட்டு அரங்கேற்றிய இனப்படுகொலை நடவடிக்கையே அதுவாகும்.

இனக்கலவரம் என்று இதனைக் கூறமுடியாது. இரு இனங்களுக்கிடையே மோதல்கள், வன்முறைகள் ஏற்பட்டால் அதனை கலவரம் என்று அழைப்பது பொருத்தமாக இருக்கும்.

ஆனால் 1983இலும் அதற்கு முன்னரும் நடைபெற்ற தமிழர்கள்மீதான தாக்குதல்கள் அனைத்துமே இனப்படுகொலைத் திட்டத்தில் ஒரு அங்கமாகவே அமைந்தன.

தமிழர்கள் சிங்கள மக்களை தாக்கவில்லை. அவர்களது உடமைகளை சூறையாடவில்லை. அவர்களது உரிமைகளிலும் பங்கு கேட்கவில்லை. சிங்களக் காடையர்கள் தம்மீது பாய்ந்தபோதும் தமிழர்கள் திருப்பித் தாக்கவில்லை. அபயம் தேடி அகதி முகாம்களிலேயே தஞ்சமடைந்தனர்.



கொழும்பில் எரிந்த தமிழ் வர்த்தக நிறுவனங்கள்

எனவே, நிராயுதபாணிகளாக, நிராதரவாக நின்ற தமிழர்கள்மீது பொலிஸ், இராணுவ மறைமுக உதவியுடன் நடத்தப்பட்ட தாக்குதல்களை இனப்படுகொலை என்று அழைப்பதே முற்றிலும் பொருத்தமாகும்.

1983 ஜூலை இனப்படுகொலை தொடர்பாக ஜோன்.எம்.ரிச்சர்ட்சன், எஸ்.டபிள்யூ.ஆர்.டி.ஏ.சமரசிங்கா ஆகியோர் ஆய்வு ஒன்றை நடத்தியிருந்தனர்.

அந்த ஆய்வில் அவர்கள் வெளியிட்ட புள்ளிவிபரம் இனப்படுகொலை திட்டத்தின் தீவிரத்தை உணர்த்துகிறது.

தமிழர்களுக்கு சொந்தமான 122 தொழிற்சாலைகளும், 2 ஆயிரத்தி 300 வர்த்தக நிறுவனங்களும் அழிக்கப்பட்டன. 20 ஆயிரத்திற்கு அதிகமான வீடுகள் நாசமாக்கப்பட்டன. இவற்றின் பெறுமதி 953 மில்லியன் ரூபாய்களாகும் என்று அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

தமிழர்களை உடல்ரீதியாக மட்டுமன்றி, பொருளாதார ரீதியாகவும் அழித்தொழிக்கும் திட்டமும் ஜூலை இனப்படுகொலையில் உள்ளடங்கி இருந்தது.

1983 ஜூலை படுகொலையில் மட்டுமன்றி அதற்கு முன்னர் இடம்பெற்ற இனப்படுகொலைகளிலும் தமிழர்களது உயிர்களுக்கு மட்டுமன்றி, அவர்களது பொருளாதார இருப்புக்கள்மீதும் குறிவைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் தமிழர்களுக்கு எதிரான முதல் பாரிய இனப்படுகொலை 1958ல் அரங்கேறியது.

அன்றைய பிரதமர் பண்டாரநாயக்காவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியாளரும் வேடிக்கை பார்த்து நிற்க, தென்னிலங்கையில் தமிழர்கள் வேட்டையாடப்பட்டனர். தமிழர்களது வர்த்தக நிறுவனங்களும் அழிக்கப்பட்டன.

அண்மையில் கொழும்பில் ஜூலைப்படுகொலை நினைவாக புதிய கதிரேசன் கோவிலில் பூஜை வழிபாடு நடைபெற்றது. இந்த வழிபாட்டில் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீராவும், பிரதி அமைச்சர் டிலான் பெரேராவும் கலந்துகொண்டனர்.

அரச செய்தி ஊடகங்களிலும் 'ஐ.தே.கட்சி குண்டர்களால் நடத்தப்பட்ட கலவரம்' என்று ஜூலை இனப்படுகொலை தொடர்பாக விபரிக்கப்பட்டது.

அடுத்து வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலை குறிவைத்தே இத்தகைய பிரசாரங்களில் அரச ஊடகங்கள் ஈடுபட்டுள்ளன. தமிழ் மக்களின் வாக்குகள் ஐ.தே.கட்சியினருக்கு செல்லாமல் தடுப்பதற்காகவே ஜூலை இனப்படுகொலையை அரச ஊடகங்கள் நினைவூட்டுகின்றன.

கடந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களது வாக்குகளைக் கவருவதற்கு யாழ் நூலக எரிப்பு விவகாரம் பொ.ஜ.முன்னணியினரால் நினைவூட்டப்பட்டது.

யாழ் நூலக எரிப்பு தொடர்பாக விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட உள்ளதாகவும் அப்போது அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியாக சந்திரிக்கா அம்மையார் பதவிக்கு வந்து நாலரை ஆண்டுகளாகியும் இதுவரை யாழ் நூலக எரிப்பு தொடர்பாக நியமிப்பதாக கூறிய விசாரணைக் கமிஷன் பற்றிய எந்த அறிகுறியையும் காணமுடியவில்லை.

யாழ் நூலகத்தை புனரமைக்கப் போவதாகவும் ஆர்ப்பாட்டமாக அறிவித்து விழாக்கள் நடத்தி வெளியுலகுக்கு ஆரவாரம் காண்பித்தனர். ஆனால் இதுவரை யாழ் நூலகத்தை நிர்மாணிக்க உருப்படியான காரியம் எதனையும் இன்றைய அட்சியாளர்களும் செய்யவில்லை.

எனவே. ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்திய இனப்படுகொலைகளையும், ஒடுக்குமுறை நிகழ்வுகளையும் தமிழரின் வாக்குகள் தேவைப்படும்போதும், வெளியுலகை திருப்திப்படுத்தும் தேவை எழும்போதும் நினைவூட்டி, தமக்கு சாதகமாக பயன்படுத்துவது மட்டுமே இன்றைய ஆட்சியாளரின் உத்தியாக அமைந்து வருகிறது.

அன்றைய தவறுகளுக்கு பரிகாரம் காண்பதோ, இனிமேலும் நடைபெறாது தடுப்பதோ ஆட்சியாளரின் உண்மையான நோக்கமல்ல என்பது நன்கு புலனாகியுள்ளது.

எதிர்காலத்தில் ஐ.தே.கட்சியினர் பதவிக்கு வரும்போது 1958ம் ஆண்டு நடைபெற்ற இனப்படுகொலையின் நினைவுநாளை கொண்டாடக்கூடும்.

இனப்படுகொலைகளுக்கு ஒருவர்மீது ஒருவர் பழியைப் போட்டபடி, அதே கொள்கையை தாமும் தொடர்வதையே அன்றைய ஆட்சியாளர் முதற்கொண்டு, இன்றைய ஆட்சியாளர்வரை செய்து வருகின்றனர்.

தமிழ் மக்களை அச்சுறுத்துவதற்கும், பாடம் புகட்டுவதற்கும், ஆட்சியாளரே இனப்படுகொலையை தூண்டிவிடுவதற்கும் முன்னுதாரணமாக திகழ்ந்தது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கமேயாகும்.

1958 ல் நடைபெற்ற இனப்படுகொலையை பிரதமர் பண்டாரநாயக்கா நினைத்திருந்தால் உடனடியாக முடிவுக்கு கொண்டுவந்திருக்க முடியும்.

அதேசமயத்தில் அன்று எதிர்க்கட்சியாக விளங்கிய ஐ.தே.கட்சியினரும் இனப்படுகொலைக்கு எதிராக கருத்து எதனையும் வெளியிடவில்லை. அவர்களது தொண்டர்கள் பலரும் இனப்படுகொலையில் பங்கெடுத்துக்கொண்டனர்.

அதேபோன்று 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கம் இனப்படுகொலைகளை தூண்டி விட்டிருந்தது.

தென்னிலங்கையில், இனவாதக் காடையர்களும், வடக்கு-கிழக்கில் பொலிசாரும் படையினரும் தமிழ் மக்களை படுகொலை செய்து குவித்தனர்.

அப்போது எதிர்க்கட்சியாக இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் இனப்படுகொலைகளை நிறுத்துமாறு கோருவதற்கு முன்வரவில்லை.

கண்டிக்கவும் இல்லை.

தற்போது ஜூலை படுகொலைகளை நினைவுகூறும் வழிபாடுகளில் கலந்துகொள்ளும் அமைச்சர் மங்கள சமரவீர போன்றோர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தூண்களாவர்.

1983ல் இனப்படுகொலை நிகழ்ந்தபோது தமது தொண்டர்களோடு வீதியில் இறங்கி தமிழ் மக்களை பாதுகாக்க இவர்கள் முன்வந்திருக்கலாம்.

ஐ.தே.கட்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சி போன்றவை தொண்டர்பலம் உள்ள கட்சிகளாகும். இவற்றில் ஒரு கட்சி இனப்படுகொலையை தூண்டி விடும்போது, மறு கட்சி நினைத்திருந்தால் பெருமளவான தமிழர்களை காப்பாற்றியிருக்கலாம். உடமை அழிவுகளை பெருமளவு தடுத்து நிறுத்தியிருக்கலாம்.

இனப்படுகொலைகளின்போது ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் தங்களை பேரினவாதம் சார்ந்த கட்சிகளாகவே இனம் காட்டி வந்துள்ளன.

1958 இனப்படுகொலையை சிறீலங்கா சுதந்திக்கட்சி அரசாங்கம் தூண்டிவிட்டபோதும், ஐ.தே.கட்சி தொண்டர்களும் அதில் தீவிர பங்கேற்றனர்.

அதேபோன்று 1983 இனப்படுகொலை நடவடிக்கையை ஐ.தே.கட்சி அரசாங்கம் தூண்டிவிட்டபோதும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தொண்டர்களும் அதில் கலந்துகொண்டனர்.

எனவே எந்த ஆட்சியினர் இனப் படுகொலையை நடத்தினாலும் அதில் கட்சி வேறுபாடின்றி பிரதான சிங்கள கட்சிகளது தொண்டர்கள் பங்கேற்றே வந்துள்ளனர். அக் கட்சிகளது தலைமைகளும் மௌனம் காத்து தமது தொண்டர்களது பங்கேற்பை மறைமுகமாக ஆதரித்தே வந்துள்ளன.

எனினும் அன்று முதல் இன்றுவரை ஆட்சியில் இருக்கும் கட்சிக்கு இனப்படுகொலைகளோடும், ஒடுக்குமுறைகளோடும் தொடர்பு இல்லை என்பது போன்றும், ஆளும் அணியின் கையையும்மீறி நடந்த காரியங்கள் போன்றுமே சித்தரிக்கப்பட்டு வந்துள்ளன.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா தொடர்ச்சியாக மூன்று இனப்படுகொலைகளை தூண்டிவிட்டிருந்தார். அவ்வாறிருந்தும் அவரது அமைச்சரவையில் சில தமிழர்களும் அங்கம் வகித்திருந்தனர்.

ஜே.ஆர். ஒன்றுமறியாத நல்லவர். வல்லவர். நாணயமானவர். அவரையும் மீறி சிறில் மத்தியூ போன்றோரே இனப் படுகொலைக்கு தூபமிட்டனர் என்று அக் 'தமிழ்' அமைச்சர்கள் நியாயப்படுத்தி தம் நன்றி உணர்ச்சியை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆணைப் பெண்ணாக மாற்றுவது தவிர சகல வித்தைகளையும் செய்யக்கூடிய ஜனாதிபதிப் பதவியில் இருந்தவர் ஜே.ஆர்.

ஒரு வாதத்திற்காக அவருக்கும் இனப்படுகொலைக்கும் தொடர்பில்லை என்று வைத்துக்கொண்டால்கூட, ஆகக் கூடியது 24 மணிநேரத்திற்குள் படுகொலைகளை நிறுத்தியிருக்க முடியும்.

எனவே பண்டாரநாயக்கா முதற்கொண்டு ஜே.ஆர்.வரை தமிழ் மக்களை குனிந்திருக்க வைப்பதற்கான கருவிகளில் ஒன்றாகவே இனப்படுகொலைகளை நோக்கினார்கள். அதனால்தான் இனப்படுகொலைகளை தமது அதிகாரங்களை பயன்படுத்தி தடுக்காது விட்டுப் பிடிக்கும் அணுகுமுறையை மேற்கொண்டனர்.

எனினும் 1983 இனப்படுகொலைக்கு பின்னர் தென்னிலங்கையில் அவ்வாறான நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை.

தமது ஆட்சியில் இனப்படுகொலை நிகழாது தடுத்து வருவதாக இன்றைய ஆட்சியாளர்கள் அடிக்கடி கூறிவருவதையும் கேட்கக்கூடியதாகவுள்ளது.

ஆனால் இவர்களுக்கு முன்னர் பிரேமதாசா ஆட்சிக் காலத்திலும் இனப்படுகொலை நிகழ்வு எதுவும் தென்னிலங்கையில் நடைபெறவில்லை என்பதையும் மறந்துவிடலாகாது.

அதுமட்டுமன்றி பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் தென்னிலங்கையில் இன்றுள்ளதைவிட தமிழ் மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடியதாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1983ம் ஆண்டின் பின்னர் இனப்படுகொலை தென்னிலங்கையில் நிகழாது தடுப்பதில் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஆட்சியாளர்களே தாமாக விரும்பி தூண்டிவிடாதபோது அவர்களை மீறி இனப்படுகொலை வேட்டைகள் தென்னிலங்கையில் அரங்கேறமுடியாது.

முன்னர் பிரேமதாசாவும், இன்று சந்திரிக்கா அம்மையாரின் அரசாங்கமும் இனப்படுகொலைகளை தென்னிலங்கையில் தலைதூக்க விடாது தடுத்து வருவது தமிழர்கள் மீது கொண்ட காதலினால் என்று கருதிவிடலாகாது.

1983 இனப்படுகொலை மூலம் பேரினவாத கட்சிகளும், தலைமைகளும் ஒரு முக்கிய படிப்பினையைப் பெற்றுக்கொண்டன.

நாட்டின் தலைநகரில் தமிழ் மக்களை தாக்குவதும், படுகொலைகளை அரங்கேறுவதும் உலகம் முழுவதற்கும் பேரினவாதத்தை படம்பிடித்துக் காட்டுவது போன்றதேயாகும்.



இதனால் தமிழ் பேசும் தரப்புக்கே அகில உலக அனுதாபம் ஏற்படும். அரசாங்கம் உலக அரங்கில் தனிமைப்பட்டு நிற்கும் நிலையும் உருவாகும்.

1983 இனப்படுகொலையே இந்தியா இலங்கைப் பிரச்சனையில் தலையிடக் காரணமாக அமைந்தது. தமிழ்ப் போராளிகளுக்கு புகலிடம் அளித்தமையும், போர்ப் பயிற்சி வழங்கியதையும் நியாயப்படுத்தவும் தோதாக இருந்தது என்பது பேரினவாதக் காப்பு பெற்றுள்ள படிப்பினையாகும்.

அதுமட்டுமன்றி 1958, 1977, 1981, 1983 போன்ற காலப்பகுதிகளில் தமிழ்பேசும் தரப்பில் பலமான அரசியல் இராணுவ அமைப்பு இருக்கவில்லை. எனவே, போருக்காக பெரும் நிதியை ஒதுக்க வேண்டிய தேவை அன்று இருக்கவில்லை.

1983 இனப்படுகொலையின் பின்னர் தமிழ் பேசும் மக்களது ஆயுதப் போராட்டம் வீறுகொண்டெழுந்தது. ஆட்சியாளருக்கு பெரும் சவாலாக உருவெடுத்தது.

எனவே, போருக்காக பெரும்நிதியை ஒதுக்குவதோடு, அதற்காக வெளியுலகின் முன்பு முன்பைவிட அதிகமாக கைநீட்டி நிற்கும் கட்டாயமும் ஏற்பட்டுவிட்டது.

இதனால், வெளியுலகை திருப்தி செய்வதும், வெளியுலகின் முன்னர் தம்மை நீதியாளர்களாக, மனித உரிமைகளை மதிப்பவர்களாக, தமிழ் பேசும் மக்களை பாதுகாப்பவர்களாக முகமூடிகள் அணிந்துகொள்ள வேண்டிய அவசியமும் ஆட்சியாளருக்கு ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி உல்லாசப் பயணத்துறை மூலம் கணிசமான வருமானத்தையும் பெற்றாக வேண்டிய நிர்ப்பந்தமும் தோன்றியுள்ளது.

இத்தகைய நிலையில் கொழும்பில் இனப்படுகொலை வெறியாட்டம் நிகழுமானால், ஆட்சியில் இருப்போரின் முகமூடிகள் உடனடியாக கழன்று விழுந்துவிடும்.

சர்வதேச அரங்கில் தமிழ் பேசும் தரப்புக்கு அனுதாபமும் ஏற்பட்டுவிடும். வெளி உலக தலையீடுகளுக்கு இடமளிப்பதாகவும் அமைந்துவிடும்.

எனவேதான் கொழும்பில் இனப் படுகொலை வெறியாட்டங்களை தடுப்பதில் 1983 ஜூலையின் பின்னர் ஆட்சியாளர்கள் அவதானமாக இருந்து வருகின்றனர்.

எனவே இனப்படுகொலைக்கான வேறு வடிவங்களை நாட ஆரம்பித்தனர். கொடூரமான முகத்திற்கு பதிலாக இன்முகத்தோடும், இனிப்பான வார்த்தைகளோடும் இனப்படுகொலை திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் நிகழ்ந்த படுகொலைகளும், தற்போது அம்மையார் ஆட்சியில் யாழ் குடாநாட்டு புதைகுழிகளும் இனப்படுகொலை மற்றும் இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளின் வெளிப்பாடுகளேயாகும்.

கடந்தகால ஆட்சியாளரைவிட இன்றைய ஆட்சியாளர்கள் மிகவும் நாசூக்காக இன ஒதுக்கல் கொள்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

1983இலும் அதற்கு முன்னரும் தமிழர்கள் தென்னிலங்கையில்தான் உயிர்களையும், உடமைகளையும் இழந்து நிர்க்கதியானார்கள்.

ஆனால் தற்போது தமிழர்கள் தமது பாரம்பரிய பூமியிலேயே உயிர்களையும், உடமைகளையும், வழிபாட்டு தலங்களையும், கல்விக் கூடங்களையும், வளமான நிலங்களையும் இழந்து நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் வலிகாமம் பகுதியில் சிங்கள குடியேற்ற திட்டத்துக்கான நீண்டகாலத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அங்கு மீளக்குடியமர தமிழ் மக்களுக்கு இன்றைய ஆட்சியாளர்கள் அனுமதி மறுத்துள்ளனர்.

வன்னியில் பல்லாயிரம் மக்கள் இடம்பெயர வைக்கப்பட்டுள்ளனர். பல 'ஆயிரம் வீடுகள் நாசமாகியுள்ளன. தரைமட்டமாக்கப்பட்டுமுள்ளன. வன்னி மக்களை பட்டினி போட்டு பணியவைக்கும் முயற்சிகளும் நடந்து வருகின்றன.

எனவே 1983 ஆம் ஆண்டின் இனப்படுகொலையைவிட இன்றைய இராணுவத் தீர்வு முனைப்பே தமிழ்ப்பேசும் தரப்புக்கு மிக ஆபத்தானதாக மாறியுள்ளது.

1983 படுகொலைகள் கொழும்பில் நடந்தமையால் அகில உலகம் அறிந்து கொண்டது. அநீதி என்று கண்டித்திருந்தது.

அதுமட்டுமன்றி கொழும்பில் இருந்து அகதிகளாக சென்று வாழ்வதற்கு தமிழ் பேசும் மக்களுக்கு என்று பாரம்பரிய பூமி இருந்தது.

அந்த பாரம்பரிய பூமியையும் மெல்ல விழுங்கும் திட்டங்களும், நகர்வுகளுமே தற்போது நடந்து வருகின்றன.

எனவே, உலகின் பார்வையில் தலைநகரில் சகல இன மக்களும் நட்புறவாக வாழ்வதாக சித்தரித்தபடி, வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களை பொருளாதார ரீதியிலும் உளவியல் ரீதியிலும் பலவீனமாக்கி அடிமைகளாக மாற்றும் நகர்வுகளே தற்போது நடந்து வருகின்றன.

வடக்கு-கிழக்கில் இந்த நகர்வுகள் வெற்றியளித்துவிட்டால் நாடெங்கும் உள்ள தமிழ் பேசும் மக்கள் மறுபேச்சின்றி பணிந்துவிடுவர், காலப் போக்கில் இனக் கலப்புக்கு முன்வந்து தனித்துவத்தையும் இழந்துவிடுவர் என்பதே பேரினவாத சக்திகளது நோக்கமாக அமைந்திருக்கிறது.

புலிகளை வெற்றிகொண்ட பின்னர் இனப்பிரச்சனைக்கு அவர்கள் வழங்கப்போவதாக் கூறும் தீர்வும் அதுதான்.

எனவே ஜூலைப் படுகொலைகள் நிகழ்ந்து 16 வருடமாகலாம். ஆனால் அதனைவிட மோசமான இன ஒதுக்கல் நடவடிக்கைகள் அதன்பின்னரே அரங்கேறி வருகின்றன.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

உலக வங்கி பிரதிநிதிகள் கொழும்பு வந்து தமிழ்க் கட்சிகளையும், அரச சார்பற்ற நிறுவனங்களது பிரதிநிதிகளையும் சந்தித்தனர்.

இது தொடர்பாக பத்திரிகைகளுக்கு கூட்டணி சம்பந்தர் கொடுத்த செய்தி பெரிதாக வெளியாகி இருந்தது.

"வடக்கு-கிழக்கில் தற்போது அபிவிருத்திகள் சாத்தியம் இல்லை. பலனும் இல்லை. இரண்டு பெரும்பான்மை இனக் கட்சிகளும் ஏமாற்றுகின்றன" என்று இரா.சம்பந்தர் கூறியதாக பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன தெரியுமா?

குறிப்பிட்ட சந்திப்பின்போது குமார் பொன்னம்பலம், சித்தார்த்தன், இரா.சம்பந்தர், தமிழர் பணிக்குழு விஜயசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். டக்ளஸ் தேவானந்தா ஒரு மணிநேரம் தாமதமாக வந்து கலந்து கொண்டார்.

குமார் பொன்னம்பலம்தான் முதலில் உரையாற்றினார். "எனது கருத்துக்கள் இங்குள்ளோரின் கருத்துக்களுக்கு நேர் எதிராக இருக்கும்" என்று கூறிவிட்டே குமார் உரையாற்றினார்.

"வடக்கு-கிழக்கில் யுத்தம் நடைபெறும் போது அபிவிருத்தி என்பது நடக்க முடியாது. கட்டடங்களை கட்டினால் குண்டு போடும் போது அழிந்துவிடும். புல்டோசர்களாலும் அழிக்கப்படும்.

வடக்கு-கிழக்குக்கு என்று கூறி நிதியை பெற்று ஏனைய பகுதிகளுக்கு பயன்படுத்துகிறார்கள். இதற்கு சில தமிழர்களும் ஒத்துழைக்கிறார்கள்...." என்றெல்லாம் குமார் பொன்னம்பலம் ஒரு பிடி பிடித்திருக்கிறார்.

பின்னர் சம்பந்தர் பேச எழுந்தவுடன் குமார் பொன்னம்பலம் என்ன கூறினாரோ அதனையே திரும்பக் கூறியதோடு, "மிஸ்டர் குமார் பொன்னம்பலத்தின் கருத்துக்களை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். அவற்றோடு உடன்படுகிறேன்" என்று கூறினார்.

குமார் பொன்னம்பலம் விடவில்லை. "அப்படியானால் உலகை ஏமாற்றும் உள்ளூராட்சி தேர்தல் போன்றவற்றில் நீங்கள்தானே அரசுக்கு ஒத்துழைத்தீர்கள்?" என்று கேட்டிருக்கிறார். சம்பந்தர் கப்சிப்!

சந்திப்பு முடிந்ததும் பத்திரிகை செய்தியாளருக்கு தான் மட்டுமே கூறிய கருத்துக்களாக சம்பந்தர் அள்ளிப் போட்டிருக்கிறார்.

### சந்திப்பில் மோதல்கள்

குமார் பொன்னம்பலம் கூறிய கருத்துக்களைவிட சம்பந்தர் மேலதிகமாக கூறிய கருத்து, "ஆளும் தரப்பும், ஐ.தே.கட்சியும் புலிகளுடன் பேசவேண்டும்" என்பதுதான்.

அதனைக் குமார் எதிர்த்திருக்கிறார். "அந்த இரண்டு கட்சியும் மட்டுமல்ல, சிங்கள மக்களிடையே ஜே.வி.பி போன்ற கட்சிகளும் உள்ளன. மொத்தம் எட்டுக் கட்சிகள் உள்ளன. அவற்றுக்குள் இணக்கம் வரவேண்டுமே" என்று குமார் கூறியிருக்கிறார்.

பின்னர் டக்ளஸ் தேவானந்தா தனது உரையில் "தீர்வுப் பொதியில் 70 வீதமானவற்றுடன் நாம் உடன்படுகிறோம். 30 வீதமானவற்றோடுதான் முரண்படுகிறோம். ஆனால் அவைதான் முக்கியமானவை. வடக்கு-கிழக்கு ஒரே நிர்வாக அலகு என்று ஏற்கப்படவில்லை. காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் உட்பட முக்கிய அதிகாரங்கள் இல்லை" என்று கூறினார்.

அப்போது குறுக்கிட்ட குமார் "நீங்கள் கூறுவதன் பிரகாரம் 90 வீதமானவற்றுடன் உங்களுக்கு உடன்பாடில்லை என்பதே சரி. 90 வீதமான பிரச்சனைகளே அவைதானே" என்று கூறினார்.

சித்தார்த்தன் தனது உரையில் "வன்னிக்கு உணவு அனுப்பாமல் அரசு இழுத்தடிக்கிறது. வன்னிதான் தற்போது பிரதான மாவட்டமாக உள்ளது. எனவே வன்னி நிலை குறித்து கவனம் செலுத்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

"யாழ் குடாநாட்டில் பல பகுதிகளில் பகலில் படையினரும், இரவில் புலிகளும் என்ற நிலைதான் உள்ளது" என்று குமார் கூறியபோது சித்தார்த்தன் அதனை மறுத்தார்.

தமிழ்க் கட்சிகள் தவிர பல்வேறு தனிப்பட்ட பிரமுகர்களையும் உலக வங்கிக் குழு சந்தித்து நாடி பிடித்தறிந்துள்ளது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் உட்பட முக்கியமான நிலைப்பாடுகளை இக்குழுவிடம் முன்வைக்க தமிழ்க் கட்சிகள் தவறியுள்ளன.

★★★

ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஐ.தே.கட்சியுடன் நட்புக் கொள்ள ஆரம்பித்துள்ளார்.

ஐ.தே.கட்சி எம்.பி.டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவை சந்தித்து, அவர் மூலம் ஐ.தே. கட்சியின் பொதுச் செயலாளரையும் சந்தித்து, உரையாடியுள்ளார்.

ஆளும் தரப்பு வரதருக்கு சார்பாக இருப்பதால்தான், பிரேமச்சந்திரன் மறுபக்கம் சாய்கிறார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்புக்கு என்று பிரேமச்சந்திரனிடம் அரசாங்கம் கொடுத்து வந்த உதவித் தொகையையும் திடீரென்று நிறுத்திய தகவலையும் சந்தித்த பிரமுகரிடம் கூறி கவலைப்பட்டுள்ளாராம். அடுத்து மீன்பிடி ஆலோசகர் பதவியும் பறிபோகலாம் என்றும் கவலைப்படுகிறார். தமிழ்க் கட்சிகளது கொள்கை உறுதிக்கு இதுவும் ஒரு சான்று.



படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 72

**கடந்தவாரம்**

**அமீனின் மெய்காவலர் படையினரின் அட்டகாசங்கள் அதிகமாகின்றன. நரம்பியல் டாக்டர் ஒருவரின் காரை பறிக்க முயற்சிக்கிறார்கள். டாக்டர் தப்பிச் செல்ல அவரைக் கொல்ல முயன்றார்கள். அதிலிருந்தும் தப்பிய டாக்டர் நாட்டைவிட்டு வெளியேறுகிறான். அந்த டாக்டருக்கு உதவியாக இருந்த தாதியைக் கடத்துகிறார்கள். இனி....**

# இடி அமீன்

**தா**தியைக் கடத்திக்கொண்டு மெய்காவலர்கள் சென்ற இடம் அமீனின் மாளிகை.

அமீனின் மாளிகைக்குப் பின்புறம் மாளிகை பாதுகாப்புக்காக இருந்த முகாமுக்குள்தான் தாதியைக் கொண்டு போனார்கள்.

அவள் கூக்குரலிட்டபோது தாக்கப்பட்டாள். மன்றாடியபோதும் தாக்கப்பட்டாள்.

மூன்று நான்குபேர் அவளைச் சுற்றி நின்று தொடக்கூடாத இடமெங்கும் தொட்டார்கள்.

அவள் கூனிக் குறுகிக் கூசி மடங்கி அமர்ந்தபோது, அப்படியே தரையில் சாய்க்கப்பட்டாள்.

தரையில் சாய்த்த அவள்மீது தன் முழுப்பலத்தையும் செலுத்தி ஒருவன் படுத்துக்கொள்ள அவள் மூச்சுத்திணறி முனகினாள்.

அவளது உடைகள் பிடுங்கப்பட்டன. அவளது அங்கங்கள் பல வெறிநாய்களது கைகளால் தீண்டப்பட்டன.

50ற்கு மேற்பட்ட மெய்காவலர்கள் முன்பாக அவளை நிர்வாணமாக்கி அதே இடத்தில் வைத்தே உறவு கொண்டனர்.

அவள் மூர்ச்சையாகி மரக்கட்டையாகக் கிடந்தபோதும் அவளது உடலை அந்த மிருகங்கள் சுவைத்தன.

20ற்கு மேற்பட்ட மிருகங்களால் உணர்வற்ற அந்த உடல் வதைக்கப்பட்டது.

சதைவதை என்பதின் முழு உதாரணமாக, தரையில் அவள் உடல் பிய்ந்து கிடந்தது.

மதுவெறியில் அவள் உடலை சில மிருகங்கள் கத்தியால் கீறிக் கிழித்து காயங்களை உண்டாக்கினார்கள்.

தங்கள் அதிபர் அமீன் மனித மாமிசம் சாப்பிடுகிறவர் என்பதும், மனித இரத்தத்தை ருசி பார்ப்பவர் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

தங்கள் அதிபர் போலவே இரத்தத்தை ருசிபார்க்கும் ஆவல் ஒருவனுக்கு ஏற்பட்டது. அவனுக்கு நிறைபோதை. உடை ஏதுமின்றி நிர்வாணமாக நின்றான்; அந்த வெறிபிடித்த சனியன்.

தான் என்ன செய்கிறோம் என்பதையே மறந்தவனாக அவளது கழுத்தில் கத்தியால் கீறினான்.

இரத்தம் குபுக் என்று தெறித்தது. அவள் கால்கள் இறுதியாக ஒருமுறை துடித்து அடங்கின.

அந்தச் சனியன் பிடித்தவன் அவளத இரத்தத்தை தனது விரலால் தொட்டு நாவில் வைத்து ருசித்தான்.

"ஆஹா, ஆஹா... நமது தலைவருக்கு பிடித்த ருசியடா இது!" என்று நாக்குழற கூறினான்.

முகாமிலிருந்த சிலர் மூலம் அமீனுக்கு தகவல் கூறப்பட்டது. "ஏனடா இங்கு கொண்டு வந்தீர்கள்? உங்களுக்கு சுகம் கேட்டால் வேறு எங்காவது கொண்டு போய் இருக்கலாமே. பிசாசுகள். மூளையே இல்லாத பிசாசுகள்!" என்று தகவல் சொன்னவனிடம் திட்டினான்.

**"இப்போது அவள் எங்கேயடா?"** என்று கேட்டான்.

மறுமுனை தயங்க, **"என்ன செத்துப் போனாளா?"** என்று கேட்டான்.

"ஆம்!" என்றது முறுமுனை–அச்சத்தோடு.

**"எந்த இனத்தவள்?"** என்று கேட்டான்.

மறுமுனையில் இருந்து இப்போது உற்சாகமாக பதில் வந்தது; "நம் இனத்தவள் அல்ல!"

அமீன் சற்றும் யோசிக்காது, தாமதிக்காது கூறினான்: **"இரவோடு இரவாக அவள் உடலை பெற்றோல் ஊற்றி எரித்து விடுங்கள். அதனையும் இங்கு வைத்து செய்து தொலைக்காதீர்கள்!"**

தாதியின் உடல் அன்றிரவே ஒரு விளையாட்டு மைதானத்தில் வைத்து எரிக்கப்பட்டது.

அவளது உடலைக் கொண்டு சென்றவர்களுக்கு அது மைதானம் என்பது போதையில் தெரியவில்லை.

ஏதோ ஒரு வெட்ட வெளி என்று நினைத்து அங்கு வைத்து பெற்றோல் ஊற்றி எரித்தனர்.

மறுநாள் காலையில் பாதி எரிந்த நிலையில் தாதியின் உடல் மீட்கப்பட்டது.

நாடெங்கும் இச் செய்தி பரவியதும், சகல மருத்துவமனைத் தாதிகளும் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

**"குற்றவாளிகளைப் பிடித்து சட்டத்தின் முன்பாக நிறுத்தும்வரை போராட்டம் தொடரும்!"** என்று அறிவித்தனர்.

உடனடியாக அமீன் ஒரு செய்தி வெளியிட்டான்.

**"நடைபெற்றது ஒரு கொடூர செயல். கேட்டதுமே என் இதயம் பதறிவிட்டது. தாதிகள் ஒன்றும் நாதியற்றவர்கள் அல்ல; உடன் நீதி விசாரணை ஆரம்பமாகிவிட்டது. இரகசியப் பொலிஸ் பிரிவு இதனை நேரடியாக விசாரிக்கும். விரைவில் குற்றவாளிகள் கைதாவார்கள். தாதிமார்கள் வேலைக்குத் திரும்ப வேண்டும்!"** என்று அழைப்பு விட்டிருந்தான்.

அமீனை நம்பமுடியாது என்று தாதிகள் நினைத்தபோதும், தாதிமார் சங்கப் பிரதிநிதிகள் பயந்துவிட்டனர். அதனால் 'அதிபருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்போம். உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மறுபடி வேலை நிறுத்தத்தில் குதிப்போம்!" என்று சமாதானப் படுத்தினார்கள்.

இரகசியப் பொலிஸ் பிரிவில் இருந்து ஒரு குழு சென்று தாதிகளை விசாரித்தது.

பலியான தாதிக்கு தகாத உறவுகள், தொடர்புகள் இருக்கிறதா? காதலர் யாராவது இருக்கிறாரா? என்று தாதிகளிடம் கேட்டனர்.



இரகசியப் பொலிசாரின் கேள்விகளால் தாதிகள் எரிச்சலுற்றனர். குற்றவாளிகளைப் பிடிக்க வக்கில்லை. குற்றத்தை மறைக்க முயற்சிகள் நடக்கின்றன!" என்று தாதிகள் தமது சங்கத்திடம் முறையிட்டனர்.

இதுபற்றி அதிபர் அமீனுடன் பேச உள்ளதாக சங்கம் கூறியது. அதற்கிடையே சங்க தலைமைப்பீட உறுப்பினர்களுக்கு மறைமுக மிரட்டல்கள் வந்தன.

மருத்துவமனைகளில் மருந்துகள் திருட்டுப் போனது தொடர்பாக தாதிகள் சங்க தலைமைப்பீடத்தில் உள்ளவர்களை விசாரிக்கப்போவதாக இரகசியப் பொலிஸ் தலைமைப் பீடத்தில் இருந்து அறிவிக்கப்பட்டது.

மருந்துத் திருட்டுக்களோடு தங்களை முடிச்சுப்போட சதி நடக்கிறது என்பது தெரிந்ததும் தாதிகள் சங்கத்தினர் பயந்து போனார்கள்.



இரண்டாவது மனைவி கேயுடன் அமீன்.

அதன்பின்னர் விசாரணைகள் பற்றி அவர்கள் வாய்திறக்கவில்லை. தாதியின் கொலை விவகாரம் மெல்ல ஆறிப்போனது.

கடைசிவரை யாரும் கைதாகவும் இல்லை; விசாரணைகள் பூர்த்தியாகவும் இல்லை.

## தருவது ரசிகன்

இக் கட்டத்தில் நடைபெற்ற விபத்து ஒன்று பலரையும் திடுக்கிடவைத்தது. உகண்டா மக்கள் அனைவரும் அதனைப் பற்றியே பேசிக்கொண்டனர்.

அமீனின் முதலாவது மனைவி மலயாமு பயணம் செய்த வாகனம் விபத்துக்கு உள்ளாகியது.

காலிலும் கையிலும் எலும்புகள் உடைந்த நிலையில் முலாகோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டாள் மலயாமு.

அந்த மருத்துவ மனையில் இரு பிரிவுகள் இருந்தன. ஒன்றில் பணம் செலுத்த வேண்டும். அங்கு பல வசதிகள் இருந்தன. இன்னொரு பிரிவில் பணம் செலுத்தாது இலவசமாக சிகிச்சை பெறலாம்.

மலயாமு பணம் கட்டி சிகிச்சை பெறும் பிரிவில் சேர்க்கப்பட்டாள்.

மலயாமுவின் விபத்து பற்றி அறிந்த சுகாதார அமைச்சர் சியம்பா அதனை உடனடியாக அமீனுக்கு தெரிவித்தார்.

அமீனிடம் இருந்து வந்த கேள்வி சியம்பாவை தூக்கிவாரிப் போட்டது.

"அவள் இறந்துவிட்டாளா? அல்லது இன்னமும் உயிரோடு இருந்து தொலைக்கிறாளா?" என்று கேட்டான்.

அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு, "இருக்கிறார். அவர் பயணம் செய்த வாகனம் இன்னொரு வாகனத்தால் மோதப்பட்டுள்ளது. உயிரபாயம் இல்லை. சிறப்புப் பிரிவில் வைத்திருக்கிறோம்!" என்றார் சியம்பா.

அதற்கும் அமீன் கேட்ட கேள்வி சியம்பாவுக்கு அமீன்மீது இருந்த கொஞ்ச நஞ்ச நல்ல அபிப்பிராயத்தையும் கொன்றுவிட்டது.

"சிறப்புப் பிரிவில் வைத்திருந்து யார் பணம் கட்டுவது? நீர்தான் கட்டவேண்டியிருக்கும். அது சரி, உமக்கேன் அவள்மீது இத்தனை கரிசனம்?" என்று கேட்டுவிட்டு அமீன் சிரித்த சிரிப்பின் அர்த்தம் சியம்பாவுக்கு புரிந்தது; பயந்துபோனார்.

"சாதாரண பிரிவுக்கு மாற்றுமாறு உத்தரவிடுகிறேன்" என்று திக்கித் திணறி கூறிவிட்டு தொடர்பைத் துண்டித்தார் சியம்பா.

உடனடியாக மலயாமு சாதாரண பிரிவுக்கு மாற்றப்பட்டாள். அங்கு கட்டில் வசதிகூட இருக்கவில்லை. தரையில் பாய்போட்டு படுக்க வைத்தனர்.

'அதிபரின் மனைவிக்கு இந்தக் கதியா? மாளிகையில் உல்லாசமாக வாழ்ந்தவள் கதி இப்படியாகிவிட்டதே!' என்று சியம்பா மனம் வருந்தினார்.

ஆனால் அவரால் அமீனைமீறி என்ன செய்ய முடியும்! உள்ளூர வருந்த மட்டும்தான் முடியும்.

மலயாமு விபத்தில் சிக்கியது சதியாக இருக்கலாம் என்பதை அமீனின் நடவடிக்கைகள் மூலம் ஊகித்துக் கொண்டார் சியம்பா.

1975 மார்ச் 13ம் திகதி மலயாமு விபத்தில் சிக்கினார். இந்த விபத்து தன்னைக் கொல்ல நடந்த சதி என்று மலயாமு பத்திரிகையாளர்களை அழைத்துக் கூறினார்.

இதனையடுத்து அமீனின் அறிக்கை ஒன்று வெளியானது.

'எனது மனைவிகளான மலயாமு, கே, மற்றும் நோறா ஆகிய மூவரையும் நான் எப்போதோ மணவிலக்குச் செய்துவிட்டேன்.

நாலாவது மனைவியான மெடினா இப்போதும் என் மனைவியாக இருக்கிறார்.

மலயாமுவும், நோறாவும் என் பதவியைப் பயன்படுத்தி தனியான வர்த்தக முயற்சிகளில்' ஈடுபட்டனர்.

அதிபரின் மனைவிகளே இப்படி அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்று பலமுறை அவர்களுக்கு விளக்கிக் கூறினேன். செவியில் வாங்கினார்களே தவிர மனதால் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர்.

ஆகவேதான் பொறுப்புள்ள அதிபர் என்ற வகையில் நாட்டின் நலன், என் பதவியின் புனிதத் தன்மை என்பவற்றை முன்னிட்டும், என்மீது நாட்டுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை பாதுகாக்கும் பொருட்டும் அவர்களை மணவிலக்கு செய்கிறேன்.

என் மனைவியரில் ஒருவரான 'கே' பற்றிய குற்றச்சாட்டை நான் வெளியே சொல்ல கூச்சமாக இருக்கிறது. சீசரின் மனைவி மட்டுமல்ல அமீனின் மனைவியும் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும். எனவே அவளையும் மண விலக்குச் செய்துவிட்டேன்.

முன்னரே எனது மணமுறிவுச் செய்தியை வானொலி மூலம் அறிவித்த போதும், இப்போதுதான் அதற்கான காரணத்தை உங்களுக்குக் கூறுவதற்குரிய மனநிலை எனக்கு வந்துள்ளது.

என் முன்னாள் மனைவி மலயாமு ஒரு விபத்தில் சிக்கி அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

என் மனைவி என்று பொய் கூறி அங்கு விசேஷ சலுகைகள்'பெறுவதற்கு முற்பட்டார். இதனை மாண்புமிகு சுகாதார அமைச்சர் வருத்தத்தோடு என்னிடம் தெரிவித்தார். அதனையடுத்து சாதாரண பிரிவுக்கு அவர் மாற்றப்பட்டார். அதனால் என்மீது கோபத்தில் ஏதேதோ கூறுகிறார்" என்று அமீன் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தான்.


அறிக்கையை கண்டு கோபமுற்ற மலயாமு திடுக்கிடும் உண்மைகளை வெளியிட்டாள்.

(இடி தொடரும்)

## புரிதல் தவறானது பிரிதல் முடிவானது

**அ**ஜித்குமார் மறுபடி புகழேணியின் உச்சத்திற்கு போய் இருக்கிறார். நடிகை ஹீராவுடனான தனது காதலுக்கும் நன்றி, வணக்கம் என்று விடைகொடுத்து விட்டார்.

சமீபத்தில் பெண்கள் சஞ்சிகை ஒன்றுக்கு பளீர் பேட்டி கொடுத்துள்ளார். பதில்கள் துணிச்சலானவை.



**கே: ஒரு பெண்ணிடம் முதல் பார்வையில் உங்களைக் கவர்வது?"**

**அஜித்:** நீளமுடி. அலை அலையா அடர்த்தியான கூந்தல் எனக்கு ரொம்ப பிடிக்கும். அப்புறம்... கண்கள். அப்பா... சில கண்களைப் பார்த்தால் பார்த்துக்கொண்டே இருக்கலாம். ஏதோ இரகசியத்தை மறைத்து வைத்திருக்கிற சில பெண்களின் கண்களில் சாந்தம் இருக்கிறது.

**கே: உங்களோடு நடிக்கிற கதாநாயகிகளை நீங்கள் பார்த்திருப்பீர்களா? இரண்டு மூன்றுபேர் உங்களைக் காதலிப்பதாக கூறியுள்ளனரே?**

**அஜித்:** நான் எதையும் வெளிப்படையாக பேசிவிடுவேன். கலகலப்பாக நட்பாக பழகுவது சிலருக்கு பிடித்துப் போய் அவர்களாக என்னை காதலித்தால் அதற்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்?

நீ ஒரு நடிகன். இப்படி இருக்கக் கூடாது. உன்னுடைய உணர்வுகளை இப்படி திறந்த புத்தகமாக்கக்கூடாது என்று நிறையப் பேர் கூறுகிறார்கள். ஏன் அப்படி என்று எனக்கு புரியவில்லை.

கடந்த மூன்று வருட பேட்டிகளில் ஹீரா இல்லாத பேட்டி கிடையாது. 'ஆம், நானும் ஹீராவும் காதலித்தோம் என்று எல்லோரிடமும் கூறினேன். காதல் என்பது உயர்ந்த விஷயம் தானே!

அதன்பின்னர் எங்கள் இருவருக்கும் சில விஷயங்களில் சரிப்பட்டு வரவில்லை. அதனால் பிரிந்துவிடலாம் என்று முடிவு பண்ணினோம்" என்று வெளிப்படையாக பேட்டியளித்துள்ளார் அஜித்குமார்.

"தன்னம்பிக்கையுள்ள, தன்மீது மரியாதை கொண்ட பெண்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும். நீங்கள் மிகவும் நேசிக்கும் ஒருவரிடம் உண்மை மட்டும் பேசிப் பாருங்கள். அந்த அன்பு அற்புதமாக இருக்கும். 'டேய்... நீ ரொம்ப நல்லவனடா' என்று உங்கள்மீதே உங்களுக்கு தனி மாயாதை ஏற்படும். அன்புக்கு பொய் சொல்லத் தெரியாது." என்று கூறியிருக்கிறார்.

## ரேவதி ஆதரவு



**க**டந்த முறை இந்தியாவில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டவர் நடிகை ரேவதி.

இம்முறை நடைபெறப் போகும் தேர்தலில் தனித்து குதிக்கும் எண்ணம் கிடையா. ஒரு முறை பட்டது போதும் என்று நினைத்துவிட்டார்.

பாரதிய ஜனதா, தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய முடிவு செய்துள்ளார். பாரதிய ஜனதா தலைவர் அத்வானியை சந்தித்து இந்த முடிவை அறிவித்துள்ளார்.

சென்ற தேர்தலில் 13 ஆயிரத்தி 206 வாக்குகள் கிடைத்தன. அந்த வாக்குகளை பாரதிய ஜனதா கூட்டணிக்கு பெற்றுக் கொடுக்கப்போகிறார்.

## வித்தியாச பரிசு

**ம**லேசியாவில் உள்ள கேதலிக் டாக்டர்கள் சங்கம் அதன் சார்பில் அடுத்த மாதம் கோல்ஃப் விளையாட்டு போட்டிகள் நடக்கவுள்ளன.



அந்த போட்டியில் ஒரே முயற்சியில் வெற்றி பெறும் ஆண்கள் இருவருக்கு வித்தியாசமான பரிசு காத்திருக்கிறது.

அது என்ன வித்தியாசமான பரிசு? ஒரு ஆண்டு காலத்திற்கு 'வயாக்ரா' செக்ஸ் மாத்திரை இலவசமாக வழங்கப்படும்.

இந்த பரிசை வயாக்ரா தயாரிப்பு நிறுவனமே வழங்கப் போகிறது.

இதனை அறிந்ததும் போட்டியில் பங்கு கொள்ள பலத்த போட்டி, இதுவரை நூற்றுக்கு மேற்பட்டோர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனராம்.

## கலைச் சேவை

**த**மிழ்நாட்டில் சினிமா நடிகைகள் படவாய்ப்புக்கள் குறையும்போது தொலைக்காட்சி நாடகங்களில் நடிக்க முன்வருகிறார்கள்.



சுகன்யா, ஷோபனா, பானுப்பிரியா, சுகாசினி போன்ற நடிகைகள் அவ்வாறுதான் சின்னத்திரையில் நடிக்கின்றனர்.

ஆனால் ஹொலிவுட நடிகை போல்துரோ படவுலகில் உயரத்தில் இருக்கும்போதே சின்னத்திரையில் நடிக்க முன் வந்துள்ளார்.

ஆறு ஒஸ்கார் விருதுகளை இம்முறை அள்ளிச் சென்ற படம் 'ஷேக்ஸ்பியா இன் லவ்'

இந்தப் படத்தில் கதாநாயகியாக நடித்து ஒஸ்கார் விருது பெற்ற நடிகைதான் போல்துரோ. 26 வயதாகும் இவருக்கு ஒரு படத்தில் நடிப்பதற்கு எவ்வளவு ஊதியம் தெரியுமா? 13 கோடி ரூபாய்.

ஷேக்ஸ்பியர் எழுதிய 'அஸ் யூ லைக் இட்' என்ற நாடகத்தில்தான் போல்துரோ நடிக்கப் போகிறார்.

திரையுலகம்போல நாடகத்தில் நடிப்பதற்கு அதிக ஊதியம் கொடுக்க மாட்டார்கள். இருந்தால்தானே கொடுப்பதற்கு. ஆனாலும் ஆன்ம திருப்திக்காக நாடகத்தில் நடிக்க இணங்கியுள்ளார் போல்துரோ. 'கலைச் சேவை' பலவழிகளில் பணம் கறக்கும் நடிகைகள் போல் அல்லாமல், உண்மையாகவே கலைச்சேவைக்காக நடிக்கிறார்.

இந்த நாடகம் அமெரிக்க மசாசூசெட்ஸ் மாநிலத்தில் நடக்க உள்ள நாடக விழாவில் அரங்கேறும். பின்னர் சின்னத்திரை வழியாகவும் வெளியாகுமாம்.



படிப்பகம்

www.padippakam.com

# விளையாட்டு பைத்தியம்



← இவரை பந்து வியாபாரி என்று நினைத்து விடாதீர்கள். சமீபத்தில் இலண்டனில் நடைபெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டியை காணச்சென்ற ரசிகர்தான் இவர். வெறிபிடித்த ரசிகர். நம் நாடுகளில் கிரிக்கெட் என்றால் பைத்தியமாய் அலையும் ஏராளம் பேரை பார்த்திருப்பீர்கள். மேலை நாடுகளில் டென்னிஸ் என்றால்தான் உயிர். இலண்டனிலும் கிரிக்கெட்டைவிட டென்னிஸ் என்றால் வெறிபிடித்த ரசிகர்கள் ஏராளமாக உள்ளனர். அவர்களில் ஒருவர் தான் இவர்.



# தகவல் பெட்டி

## குடைக்குள் பேசலாம்

↗ இவர் என்ன செய்கிறார்? என்று கேட்டால், 'மழைக்கு பிடிக்கிறார் குடை!' என்று விடை சொன்னால் பிழை.

இது சீனாவில் உள்ள பொதுத் தொலைபேசிக் கூண்டு. ஒரு வித்தியாசமாக இப்படி குடை வடிவில் உருவாக்கியுள்ளனர்.

இதற்குள் புகுந்து நின்று தொலைபேசியில் பேசும்போது குடைக்குள் நிற்பது போலவே தெரியும். காதலர்களுக்கும் இது பல வகைகளில் வசதி. எப்படி வசதி என்று நாம்தான் கூற வேண்டுமா?





## தபால் பெட்டியிலிருந்து குப்பைத் தொட்டிக்கு

↑ கடிதங்கள் என்பவை மனித வாழ்வில் மிக முக்கியமான சமாச்சாரம். அதுவும் நீண்ட தூரத்திற்கு அப்பால் உள்ள உறவுகள் கடிதங்களை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருப்பார்கள்.

இங்கு பாருங்கள் குப்பைத் தொட்டியில் கடிதங்கள் குவிந்து கிடக்கின்றன. குவைத் நாட்டு தபால்காரர்களின் பொறுப்பற்ற செயலை படம்பிடித்து அரபுப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

குவைத் நாட்டில் நம் நாட்டவர்களும் பல்லாயிரம்பேர் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு அனுப்பும் கடிதங்கள் பலவும் இப்படித்தான் குப்பைத் தொட்டிக்கு தீனியாகி இருக்கலாம்.

## பலசாலி

→ உலகின் அதி சிறந்த பலசாலி அண்ணர்தான் இவரது பெயர்: பெடன் ஹோர்ட். ருமேனியா நாட்டைச் சேர்ந்த சூராதிசூரர்.


உலகின் பலசாலிகளுக்கான போட்டியில் தொடை தட்டி களம் புகுந்து 135 கிலோ எடையைத் தூக்கி தன் புஜ பலத்தை காட்டிவிட்டார். தற்போது உலகில் அதிக பலசாலி இவர்தானாம். எனினும் கின்னஸில் இடம்பெறுவாரா தெரியவில்லை.

## சிரிப்பு

↓ சிரிப்பு என்பது மனிதர்களுக்கு மட்டுமே உரியதா என்ன? இங்கே பாருங்கள் மனிதர்களைவிட ஜோராக நான்கு சிறுத்தைக் குட்டிகள் ஒரே நேரத்தில் சிரிக்கின்றன.

அச்சில் வார்த்தது போல ஒரே மாதிரியாக உள்ள இந்த சிறுத்தைகள் ஒரே நேரத்தில் ஒரே விதமாக சிரிக்க வைத்து எடுக்கப்பட்ட இப் புகைப்படம் உலகப் புகழ் பெற்றுவிட்டது.

இப் புகைப்படத்தை எடுத்தவர் பெயர்: ஃபிரெட் ஸ்டார்ப். சின்சினாட்டி மிருகக் காட்சிச்சாலையில் இப் புகைப்படம் எடுக்கப்பட்டது.



## புதிய வெப்பமானி



↗ உடலின் வெப்பநிலையைக் கண்டறியும் புதுவிதமான வெப்பமானிதான் (தெர்மாமீட்டர்) இங்குள்ளது.

முதலில் பாதரசம் உள்ள வெப்பமானி பயன்பட்டது. பின்னர் எலக்ரானிக் வெப்பமானி பாவனைக்கு வந்தது. இதனை வாயில் வைத்தோ அல்லது அக்குளில் வைத்தோ பார்க்கலாம்.

இங்குள்ள வெப்பமானி புதியது. இதன் முனைப் பகுதியை காதின் துவாரத்தில் செலுத்தி வெளியே உள்ள கருவியை இயக்கினால், இதன் வழியாக மின்னு கதிர் வீச்சு வெளியேறி நம் காதின் செவிப் பறையில்பட்டு திரும்பிவரும்.

அப்படி திரும்பி வரும்போது கருவியின் வெளிப்பாகத்தில் உள்ள திரையில் நம் உடலின் வெப்பநிலை மிகத் துல்லியமாகத் தெரியும்.

## வித்தியாச வீடுகள்



↑ இயற்கையின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கண்டுபிடிப்புக்கள் உருவாகிவருகின்றன.

படத்தில் இருப்பவை இடியாத வீடுகள். எந்தப் பூகம்பத்திற்கும் இந்த வீடு ஈடுகொடுக்கும்.

ரசிய விஞ்ஞானிகள் இதனை உருவாக்கியுள்ளனர். இவற்றின் அடித்தளம் நகரக்கூடியது. இதனால் பூகம்ப அதிர்ச்சியை தாங்கிக் கொள்கின்றன. இயற்கையின் சதியையும் மதியால் வெல்லலாம்.



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் (113)

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# தமிழ்ப்பட உலக மூட நம்பிக்கை

## இயக்குநராகியுள்ள பழம் நடிகர்

தமிழ்ப்பட உலகில் மூடநம்பிக்கைகளுக்கு பஞ்சமே இல்லை. இதனால் சிறுபிள்ளைத்தனமான சம்பவங்கள் பல நிகழ்வதுண்டு.

மணிவண்ணன், சத்யராஜ் ஆகியோர் சினிமா வருவதற்கு முன்னர் வாய்ப்புத் தேடி அலையோ அலையென்று அலைந்தனர்.

அந்த நேரத்தில் அவர்கள் படுத்துத் தூங்கிய அறையில் தன் மகனும் படுத்துத் தூங்கினால் அவர்களைப்போல பெரியளவில் வருவான் என்று நம்பினார் ஒரு தயாரிப்பாளர்.

அதனால் தன் மகனை அந்த அறையிலேயே பல நாட்கள் தங்கவைத்தார். ஆனால் அவரது மகன் இன்றுவரை நடிகனாக முடியவில்லை.

இதேபோல இன்னொரு சம்பவம் பாண்டியராஜன் நடிக்கும் படம் ஒன்றுக்கு பூஜை போட்டபோது வெங்கடாஜலபதி படம் கைதவறி கீழே விழுந்து உடைந்துவிட்டது.

ஆனால் அந்தப் படம் நூறுநாள் வெற்றிகரமாக ஓடியது.

இதனை இன்னொரு தயாரிப்பாளரிடம் யாரோ கூறிவிட்டார்கள். அவரும் உடனடியாக பாண்டியராஜனை ஒப்பந்தம் செய்தார்.

படப்பூஜையும் நடந்தது. அனைவரும் சென்றபின்னர் வெங்கடாஜலபதி படத்தை எடுத்து கீழே போட்டு உடைத்தார்.

என்ன காரணமோ அந்தப் படமும் நூறுநாள் ஓடியது.

♦♥♠

### காட்சி விளக்கம்

அவர் ஒரு பழம் பெரும் நடிகர். சிவாஜி, எம்.ஜி.ஆர். காலத்தில் இளைஞனாக நடிக்க வந்து பல வெற்றிப்படங்களில் கதாநாயகனாக நடித்தவர். அவரது பெயரில் சந்திரன் இருக்கிறார்.

தற்போது அவரது மகனும் நடிக்க வந்திருக்கிறார். எனினும் மகன் நடித்த படம் ஒன்று முற்றுப் பெறாது நிற்பதால், நடிகர் தனது செலவில் மகனை வைத்து படம் தயாரிக்கிறார். அதனை தானே இயக்குகிறார்.

புதுமுகம் ஒன்றை மகனின் ஜோடியாக நடிக்க வைத்திருக்கிறார். நடிகையாகி பணமும், புகழும் சம்பாதித்துவிடவேண்டும் என்ற துடிப்பில் வரும் புதுமுகங்களை கணக்குப் பண்ணுவதில் நடிகர் கெட்டிக்காரர்.

அந்தக் காலத்தில் பிரபலமாக இருந்தபோதே 'ஜெய' நடிகைமீது பைத்தியமாக அலைந்தவர். 'காஞ்சன' நடிகையுடன் நட்புக் கோர்த்தவர். பின்னர் இன்னொரு நடிகையை மணந்து பிரிந்தவர்.

தற்போது வயதானாலும் பழைய சபலக் குணம் போகவில்லை. அறிமுகம் செய்த புதுமுகத்தை கணக்குப் பண்ணி விட்டார்.

புதுமுகத்திற்கு காட்சிகள் பற்றி சொல்லிக் கொடுப்பதுபோல கன்னத்தை தடவியும் இடுப்பில் கைவைத்து ஒரு சகஜமான நிலைக்கு அவரை தயார் செய்தார் நடிகர்.

புதுமுகம் அவரது இழுப்புக்கு பணிந்ததும் தனது அறைக்கு வரவழைத்து இயக்குநருக்குரிய உரிமையுடன் உல்லாசம் காண ஆரம்பித்து விடுகிறாராம்.

சமீபத்தில் படப்பிடிப்பு முடிந்ததும் நடிகரையும், நடிகையையும் காணாமல் படப்பிடிப்புக் குழுவினர் தேடியிருக்கிறார்கள்.

நடிகையின் அறைக் கதவை தட்டியபோது, உள்ளே இருந்து நடிகர் வெளியே வந்திருக்கிறார். சற்று மிதப்பில் இருந்தவர், 'யாரடா அது நேரகாலம் தெரியாமல்...' என்று எரிந்து விழுந்திருக்கிறார்.

இத்தனையும் மகனுக்கும் தெரியும். என்றாலும் மகன் இல்லாத போதுதான் காட்சி விளக்கங்கள் சொல்லிக் கொடுக்கிறாராம் நடிகர்.

-★-

கவர்ச்சி நடிகையாக வலம் வந்தவர் நடிகை ஷர்மிலி. கவுண்டமணியுடனும் ஜோடியாக நடித்தவர்.

தொழில் அதிபர் ஒருவரை மணந்தார். அந்த தொழில் அதிபருக்கு மோகம் முப்பதுநாள்தான்.

இப்போது ஷர்மிலிக்கு சினிமா வாய்ப்பு இல்லை. அதனால் பணம் சம்பாதிக்க வேறு துறையில் இறங்கிவிட்டார்.

இவரை பெரும் புள்ளிகள் சிலர் முற்றுகையிட்டுள்ளனர். இதனால் பொலிசாரும் இவரை நெருங்க தயங்குகிறார்கள்.

## கும் கும் மும்தாஜ்

டி. ராஜேந்தரின் கையால் செப்பனிடப்பட்ட சிங்காரி மும்தாஜ். 'மோனிஷா என் மோனலிசா' நன்றாக ஓடாவிட்டாலும் மும்தாஜ்மீது பல இயக்குநர்களுக்கு ஒரு கண்.

'மலபார் பொலிஸ்' படத்தில் நடிக்க இயக்குநர் வாசு மும்தாஜை தெரிவு செய்ததும் அப்படித்தான்.

படத்தில் குஷ்புதான் கதாநாயகி. மும்தாஜ் அப்பாசுக்கு ஜோடி. கவர்ச்சிக்காக போட்டிருக்கிறார்கள்.

ராஜேந்தர்தான் முழுக்கவர்ச்சியையும் உரித்துக் காட்டி விட்டாரே இனி எதைக் காட்டுவது? என்று மும்தாஜ் முணுமுணுக்கிறாராம்.

## ரசிகா ஆட்டம்

நடிகை ரசிகா பற்றி விவகாரமான செய்திகள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன. பெண் நண்பிகளை அதிகம் கொண்ட ரசிகாவை ஒரு அரசியல் புள்ளி மடக்கியுள்ளாராம்.

சென்னை மகாலிபலிபுரத்தில் நட்சத்திர விடுதி ஒன்றில் உற்சாகமான மயக்கத்தில் டப்பாங்குத்து ஆட்டம் போட்டாராம் ரசிகா. இந்தச் சங்கதி பத்திரிகைகளில் வந்துவிட்டது.

'நினைத்தாலே', 'கபடி கபடி' போன்ற சில படங்களே ரசிகாவின் கைவசம் உள்ளன. ஆனால் கையிருப்பாக நிறைய சம்பாதித்து விட்டார். எப்படி?

## சின்னப் பையன்

அஜித்குமாருக்கு ஜோடியாக நடிக்க ரம்யா கிருஷ்ணனை நாடினார்கள். 'அஜித்குமார் சின்னப்பையனா இருக்கிறாரே' என்று கூறி மறுத்து விட்டாராம் ரம்யா கிருஷ்ணன்.

இதேபோல கவிஞர் வைரமுத்துவும் ஒரு வாய்ப்பை மறுத்துள்ளார்.

கமலின் 'ஹேராம்' படத்தில் பாரதியாராக நடிக்க அழைத்தார்கள். "வேண்டாம்" என்று மறுத்துவிட்டார் கவிஞர். இப்போது வாலி நடிப்பதாக தகவல்.



ரோஜா
படம்: அழகர் சாமி

"தொட்டால்'துவளும் துள்ளும் துடிக்கும் பட்டுப்போல ரோஜா!"

## ஐஸ்வர்யாமீது பாய்ச்சல்

'தால்' என்ற இந்திப் படத்தில் பாடகியாக நடிக்கிறார் ஐஸ்வர்யா ராய். கனடாவில் ஒரு கிளு கிளு பாடல் காட்சி. குளுகுளு உடையில் கூட்டத்தின் மத்தியில் நடித்துக் கொண்டிருந்தார் ஐஸ்வர்யா ராய்.

கனடா இளைஞர்களுக்கு ஐஸ்வர்யாராயின் உடம்பு வனப்பைக் கண்டதும் பொறுக்க முடியவில்லை. தொட்டுப் பார்க்கும் ஆசையோடு முட்டித் தள்ளியபடி முன்னே வந்தார்கள். ஒரு விதமாக சமாளித்து ஐஸ்வர்யாராயை சேதம் இல்லாமல் மீட்டு வந்தனராம். 'கண்ணோடு காண்பதெல்லாம் கண்களுக்கு சொந்தமில்லை' என்பது கனடா இளைஞர்களுக்கு தெரியாதோ?!

இந்திப் பட உலகின் பிரபல இயக்குநர் சுபாஸ் கைய் இயக்கும் 'தால்' படம் தமிழில் 'தாளம்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட உள்ளது. ஐஸ்வர்யா ராயின் கவர்ச்சியை தமிழ்ப்பட ரசிகர்களும் தரிசிக்கலாம்.



எபி-சிம்ரான்
படம்: கோடீஸ்வரன்





## ரோஜாவும் ஆட்டமும்

சென்னை மாநகராட்சி பள்ளிகளின் நிதிக்கான நட்சத்திர கிரிக்கெட் போட்டியில் ஒரு அணிக்கு சரத்குமார் கப்டன். ரோஜா துணைக்கப்டன்.

விசு தலைமையிலான அணி சரத் அணியுடன் மோதியபோது அருண்பாண்டியன் துடுப்பெடுத்து ஆடினார். அப்போது ரோஜா பந்துவீசினார்.

ரோஜா தன் தலைமுடியை கோதிவிட்டபடி 'நான் பார்க்காத ஆட்டமா? உன் பருப்பு என்கிட்ட வேகாது' என்று கூறுகிறாரோ என வர்ணித்தனர். அதனைக் கேட்ட ரோஜா கடுப்பாகிவிட்டார்.

இரட்டை அர்த்தத்தோடு அப்படி வர்ணித்ததாக ரோஜா கோபப்பட்டார். பின்னர் ஒருமாதிரியாக சமாதானப்படுத்தினார்கள்.

கார்த்திக்குடன் ரோஜா ஜாலியாக இருந்ததாக கிசுகிசுக்கள் வெளியாகியுள்ளன. காதலர் செல்வமணி இருக்கையில் கார்த்திக்கை ரோஜா கைக்குள் போட்டுவிட்டாரே என்று கோடம்பாக்கம் வட்டாரம் முழுக்க கதை அடிபடுகிறது.

இப்படியான நேரத்தில் 'நான் பார்க்காத ஆட்டமா?' என்று ரோஜா சவாலுக்கு நிற்பதாக வர்ணித்தால் ரோஜாவுக்கு கோபம் புக்கும்தானே!

## அப்பாசுக்கு போட்டி

தயாரிப்பாளர் குஞ்சுமோனின் மகன் எபி. 'காதல் தேசம்' படத்தில் அப்பாஸை அறிமுகம் செய்தவர் குஞ்சுமோன்.

கோடீஸ்வரன் படத்திற்கு அப்பாஸை கேட்டபோது பிஸியாக இருப்பதாக அப்பாஸ் கூறினார். அதனால் கோபமடைந்த குஞ்சுமோன் தனது மகனையே கதாநாயகனாக்கினார்.

அப்பாசுக்கு போட்டியாக தன் மகனை மாற்றுவதற்காக சண்டைப் பயிற்சி, நடனம் போன்ற கலைகளையும் கற்பித்தார்.

பல கோடிகளைக் கொட்டி 'கோடீஸ்வரன்' படம் தயாராகியுள்ளது. படவேலைகள் யாவும் முடிவடைந்துவிட்டன. அவ்வாறு இருந்தும் வெளியிடாது தாமதம் செய்கிறார் குஞ்சுமோன்.

ஜோதிடம் பார்த்து நல்ல நாள் குறித்துத்தான் வெளியிடப்போகிறாரோ தெரியவில்லை.

## இலவச திருமணம்

வெளிநாட்டிலிருந்து திரும்பிய ரஜினிகாந்த் செய்துள்ள நல்ல காரியம் 20 ஜோடிகளுக்கு இலவச திருமணம்.

ரஜினியின் ஸ்ரீராகவேந்தர் கல்யாண மண்டபத்தில் இந்த திருமண விழா நடைபெற்றது. ஒவ்வொரு ஜோடிக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா சீர்வரிசையாக வழங்கினார் ரஜினி. லதா ரஜினிகாந்தும் கலந்து கொண்டார்.

கடந்த ஆண்டுகளில் ரஜினி திருமணம் செய்து வைத்த ஜோடிகள் தங்கள் குழந்தைகளோடு இந்தத் திருமணத்தில் கலந்துகொண்டனர்.

ரஜினி ரசிகர் மன்றத்தினர் திருமண ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தனர்.

## கதாநாயகி

ரம்யா கிருஷ்ணன் படையப்பா மூலம் பிரபலமானதும், அவர் தெலுங்கில் நடித்த படங்கள் தமிழில் மொழிமாற்றப் படுகின்றன. அதில் ஒன்று கதாநாயகி.

சினிமா வாய்ப்பு தேடி வரும் பெண் ஒருத்தியை தயாரிப்பாளர்களும், பொலிஸ் அதிகாரிகளும் பங்குபோட்டுக் கொள்கிறார்கள்.

அவர்களை பழிவாங்கப் புறப்படுகிறார் ரம்யா கிருஷ்ணன். இதுதான் கதை. கவர்ச்சியின் எல்லைக்கே சென்று ரம்யா கிருஷ்ணன் நடித்துள்ள படம் இது. 'படையப்பா'வில்லி கதாநாயகியில் கவர்ச்சி வில்லி.

## தனியாக விஜய்

விஜய்-சங்கீதா திருமணம் ஆகஸ்ட் 25ம் திகதி நடைபெறுகிறது. தேனிலவு வெளிநாட்டில்.

அதன்பின்னர் தனிக்குடித்தனம் போகப் போகிறார்கள். இதற்காக சென்னை சாந்தோம் பகுதியில் வீடு பார்த்துள்ளனர்.

விஜய் தனிக்குடித்தனம் போவதை தந்தை சந்திரசேகர் விரும்பவில்லை. ஆனால் விஜய் உறுதியாக இருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# மினி சினி

அடுத்து அவரது மனைவியின் சகோதரர் சுதிஷ் தயாரிக்
நடிக்கவுள்ளார். 'வல்லரசு' எனப் பெயரிடப்பட்டிருக்கும்
மகாராஜன் என்ற புதிய இயக்குநர் இயக்குகிறார்.

வில் ஒன்றாக நடித்த செளந்தர்யாவும், ரம்யா கிருஷ்ணனும்
றாக நடிக்கும் படம் 'பூப்போல மனசு'. அகத்தியன் இயக்க
யகனாக நடிக்கும் இப்படத்தை பிரகாஷ்ராஜ் தயாரிக்கிறார்.

ரே தோன்றினாள்', 'துள்ளாத மனமும்
வாலி' போன்ற வெற்றிப் படங்களில்
புத் திறமையை வெளிப்படுத்தியுள்ள
கு படங்களில் சவீதா என்பவர்
பேசி வருகிறார்.

சுப்பர் ஸ்டார் மோகன்லால்-மீனா இணைந்து நடித்த
டு' என்ற மலையாளப்படம். 'இது ஒரு காதல் கதை'
ரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இப்படத்தை
யக்கியுள்ளார்.

கி நடித்து வரும் 'ஹேராம்' படத்தில் வசுந்தரா என்னும்
த அறிமுகப்படுத்துகிறார். பல முன்னணி நட்சத்திரங்கள்
ப்படத்தில் வசுந்தராவுக்கு ஜோடியாக நடிப்பவர் சாட்சாத்

ாது அதிக சிரமமெடுத்து, வயதான தோற்றத்தில் நடித்து
ம் 'திருநெல்வேலி'. இப்படத்திற்காக அண்மையில் பிரபு,
னேஷுடன் மிக வேகமாகக் கம்புச் சண்டை போட்டு
ார்.

★ அரவிந்தசாமி-இஷா-பிரகாஷ்ராஜ் நடித்து தமிழில் தோல்வியைத் தழுவிய 'என் சுவாசக்காற்றே' படம் தெலுங்கில் மொழிமாற்றப்படுகிறது. தெலுங்குப் படத்திற்கு 'பிரேமந்தே பிரணமிஸ்தா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

★ நகைச்சுவை நடிகர் குமரிமுத்துவின் மகன் மாதவன் முறையாக சங்கீதம் பயின்றவர். தேவா இசையில் 'நினைவிருக்கும் வரை' படத்தில் பாடிய அவர் 'புதுக் குடித்தனம்' படத்திலும் பாடலொன்றைப் பாடியுள்ளார்.

★ முன்னாள் நாட்டிய நடிகை வைஜெயந்தி மாலாவின் மகன் ப்ரவீன் பாலி 'கண்ணோடு காண்பதெல்லாம்' படத்தில் அர்ஜுனுடன் நடித்து வருகிறார். சினிமாவுக்காக ப்ரவீன் பாலி என மாற்றப்பட்ட இவரது நிஜப் பெயர் சுசீந்திரா பாலி.

★ நடிகர் திலகத்துடன் புதுமுகம் அஜய் நடித்து வரும் 'பூப்பறிக்க வருகிறோம்' படம் இன்னும் முடிவடையவில்லை. அதற்குள் இப்படத்தின் தெலுங்கு உரிமை விற்கப்பட்டு விட்டது. தெலுங்கில் தயாராகவுள்ள இப்படத்தை கோடி. ராமகிருஷ்ணா இயக்கவுள்ளார்.

## மறுபடி குஷ்பு ராசி

இயக்குநர் கஸ்தூரி ராஜாவுக்கு குஷ்பு மீது தனிப்பிரியம். அதனால் அவரது வெற்றிப் படங்களில் குஷ்புதான் கதாநாயகி.

குஷ்புவை நம்பி படமெடுக்கிறார் என்று பேசப்பட்டதால் இடையே சில படங்கள் குஷ்பு இல்லாமல் எடுத்துப் பார்த்தார். அந்தப் படங்கள் தோல்வி மேல் தோல்வி. சமீபத்தில் 'கும்மிப்பாட்டு'ம் படுதோல்வி.

தற்போது மறுபடி குஷ்புவை வைத்து 'ஈரக்காத்து' என்றொரு படம் இயக்கப் போகிறார். இப்படத்தில் தேவயானியும் நடிக்கிறார். கதாநாயகன் நெப்போலியன்.

ஏற்கனவே கஸ்தூரிராஜா இயக்கத்தில் நெப்போலியன் குஷ்பு, ஊர்வசி நடித்த படம் 'எட்டுப்பட்டி ராசா'. அது வெற்றிப் படம். அதேபோல இப்போது 'ஈரக்காத்து' படத்திலும் நெப்போலியனுக்கு இரண்டு ஜோடிகள். இசை: இளையராஜா.

## டுவிங்கிளின் காதலன்


இந்திப் பட உலகின் முன்னணி நடிகர்களில் அமீர்கான் இளம் பெண்களின் கனவு நாயகன்.

பல இளம் நடிகைகள் அமீர்கானுடன் இணைத்துப் பேசப்பட்டனர். அந்தப் பட்டியலில் டுவிங்கிள் கன்னாவும் சேர்கிறார்.

இந்திப் படவுலகின் முன்னாள் பெருநடிகர் ராஜேஷ்கன்னாவுக்கும், இந்திப் பட உலகின் நேற்றைய அசத்தல் நாயகி டிம்பிள் கபாடியாவுக்கும் பூத்த மலர்தான் நடிகை டுவிங்கிள் கன்னா.

தாய் டிம்பிள் கபாடியா, தந்தை ராஜேஷ் கன்னா இருவரையும் போலவே டுவிங்கிளும் காதல் லீலைகளில் நாட்டமுள்ளவர். இளம் நடிகர்கள் பலருடன் நட்பு பூண்டுள்ளார்.

"அமீர்கானும், டுவிங்கிளும் காதலிக்கவில்லை. அதெல்லாம் பொய் வார்த்தைகள். அவர்கள் தங்களுக்கு எது தேவையோ அதனை பெற்றுக் கொள்கிறார்கள்" என்று கூறுகின்றன மும்பாய் சஞ்சிகைகள்.




அப்பாஸ்-மும்தாஜ்
படம்: மலபார் போலீஸ்

## ...தமான ரயில் சண்டை
## ...மான் தீவில் அடிமைகள்

ழிகள்', 'செந்தூரப் பூவே' போன்ற பிரமாண்டமான
ாரித்தவர் ஆபாவாணன். இடையே இவரது சில படங்கள்
த்தமிட்டதால் சோர்ந்து போயிருந்தார்.
மறுபடி பிரமாண்டமான படம் ஒன்றை சத்யராஜ் நடிக்க
. படத்தின் பெயர் 'அடிமைகள்.'
.கே.செல்வமணி இயக்க இதே பெயரில் சத்யராஜ் நடிப்பதாக
கைவிடப்பட்டது. இப்போது அந்தப் பெயரையே ஆபாவாணன்
சூட்டியுள்ளார். இப்படத்தை புதிய இயக்குநர் சந்திரா
அந்தமான் சிறையை பின்னணியாகக் கொண்டு காதல்
து விறுவிறுப்பான படமாக வளருகிறது.
ரூபாய் செலவில் ரயில் சண்டைக் காட்சி ஒன்று எடுக்கப்பட்
னவே ஆபாவாணனின் 'செந்தூரப் பூவே' படத்தில் ரயில்
ாதமாக பேசப்பட்டது. அதைவிட பிரமாதமாக 'அடிமைகள்'
ல் சண்டை இடம்பெற்

ராதிகா மற்றும்
ளாக ரிஷி, லட்சுமி
க்கின்றனர்.
ணன்,
வேக்,
தவன்,
ன்.

ம்
ர்
சுமி
ாவின்
ப் படம்.





ரகுமான்-விந்தியா
படம்: சங்கமம்

## காதோடு சொல்லுகிறோம்

நட்சத்திர குடும்பத்தின் தலைவரான 'விஜய' நடிகர் தன் மகனுக்கு வாய்ப்புக் கேட்டு அலைகிறாராம். கார்கில் யுத்த நிதிக்காக நட்சத்திர இரவு நடைபெற்றது. அதற்காக இரண்டெழுத்து நடிகையுடன் ஆடுவதற்கு தன் மகனை போடுமாறு கூறினாராம் விஜய நடிகர். ஆனால் ஏற்பாட்டாளர்கள் அதற்கு உடன்பட மறுத்து படையப்பாவின் மருமகனாக நடித்த இளம் நடிகரைப் போட்டனராம். அம்மா மகள்மார்களுக்கு வாய்ப்புத் தேடுகிறார். அப்பா மகனுக்கு வாய்ப்புத் தேடுகிறார். நல்ல குடும்பமடா என்று தலையில் அடித்துக்கொள்கிறது கோடம்பாக்கம் வட்டாரம்.

நட்சத்திர கிரிக்கெட் போட்டியில் பலர் முன்பாகவே ரயில் 'ரா' நடிகை முன்றெழுத்து 'மு'நடிகரின் இடுப்பில் தொற்றி தன் கால்களால் முரளியின் இடுப்பை இறுக்கிக் கொண்டு உற்சாகமாக கத்தியதைப் பார்த்து பார்வையாளர்களே உணர்ச்சிவசப்பட்டுவிட்டனராம். இத்தனை பேர் முன்பாகவே இப்படி ஏறுகிறாரே அப்படியானால்... என்று பலர் கூறிய அபிப்பிராயங்களை காது கொடுத்து கேட்க முடியவில்லையாம்.

'கா' நடிகருடன் ஒத்துழைக்க மறுத்ததால் 'கவுஸ்' நடிகையின் வாய்ப்பு பறிக்கப்பட்டது. அதனால் கலக்கமடைந்த நடிகை 'கா' நடிகரின் இம்சைகளை பொறுத்துக் கொள்ள துணிந்துவிட்டார். அவரிடம் சரணடைந்து விட்டார்.

தனது காதலரின் தாராள மனதைப் பற்றி பெருமையாக கூறிவருகிறாராம் 'பூ' நடிகை. முன்னைய காதலரான வாரிசு நடிகருக்கு 'பூ' நடிகை மலையாள 'ராம்' நடிகருடன் நெருக்கமாக நடித்தது பிடிக்கவில்லையாம். சந்தேகப்பட்டு உறவை கத்தரித்தாராம். ஆனால் தற்போதைய காதலர் அப்படியில்லையாம். மலையாள 'ராம்' நடிகருடன் மட்டுமல்ல, முன்னாள் காதல் கணவரான 'வாரிசு' நடிகருடன் இணைந்து நடிக்கவும் அனுமதித்துள்ளாராம்.

கார்கில் நிதி திரட்டலில் 'குமார' நடிகர் பிரபலமாக ஆசைப்படுவதாக ஏனைய நடிகர்கள் குமுறுகிறார்கள். மூத்த நடிகர்களை கலந்தாலோசிக்காது முடிவுகளை எடுப்பதாக அவர் மீது பலர் சீற்றப்படுகின்றனர். இதனால் தான் மூன்றெழுத்து இளம் நடிகர் தனியாக வீதிவீதியாக சென்று நிதி திரட்டினாராம். வெற்றி காந்த நடிகர் தனியாகப் போய் தமிழக முதல்வரிடம் 5 இலட்சத்துக்கான காசோலை கொடுத்தாராம்.

அமீர்கான்-டுவிங்கிள் கன்னா

## விவேக்குடன் ஐக்கியம்

"கட்டிப் பிடித்து நடிக்கும் போது கை இரண்டையும் நெஞ்சுக்கு குறுக்காக வைத்துக்கொள்" என்று அம்மா தேவிகா கூறியதை கடைப்பிடித்தார் கனகா.

அதனால் படவாய்ப்புக்கள் குறைந்தன.

தற்போது விவேக் ஜோடியாக 'விரலுக்கேத்த வீக்கம்' படத்தில் நடித்திருக்கிறார். படமும் வந்துவிட்டது. இப்படத்தின் பின்னர் கனகாவும் விவேக்கும் ஐக்கியமாகி ஜோதியில் கலந்துவிட்டனர்.

இதனையறிந்த தேவிகா விவேக்கை தொலைபேசியில் திட்டித் தீர்த்தாராம்.
தனால் தேவிகாவுடன் வருத்தத்தில் இருக்கிறார் கனகா.
விகாவுக்கு தன் மகள் பெரும் புள்ளிகள், பெரும் கதாநாயகர்கள் போன்றோருடன்
இருப்பது மட்டுமே பிடிக்குமாம்.



படிப்பகம்



## ஆக்கிரமிப்பு

அயர்லாந்தை ஆக்கிரமிக்க பிரிட்டிஷ் படைகள் புகுந்தபோது எடுக்கப்பட்ட உலகப் புகழ் பெற்ற புகைப்படம். ஆக்கிரமிப்பு வெறி இந்த படைவீரர்களது முகங்களில் துல்லியமாகத் தெரிவதைப் பாருங்கள். பிறநாடுகளை, பிற இனங்களை ஒடுக்கும் படைகள் உதட்டில் இனிப்பைக் காட்டினாலும், உள்ளத்தில் கொடூர பகை உணர்ச்சியே நிறைந்திருக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அகத்தில் உள்ளது முகத்தில் தெரிந்துவிடுகிறது!

அயர்லாந்தில் கொலைகள், பாலியல் கொடூரங்கள், வதைகள் போன்ற பல ஆக்கிரமிப்பு செயற்பாடுகளை பிரிட்டிஷ் படைகள் அரங்கேற்றின.

## யார் இவர்?

குழந்தையாக காட்சிதரும் இவர் இன்று குமரன். கிரிக்கெட் உலகின் தீரன். தமிழ் நாட்டில் பிறந்த இவர் தற்போது இங்கிலாந்தில் புகழ்பெற்று கலக்கி வருகிறார். கண்டுபிடித்து விட்டு 18ம் பக்கம் புரட்டுங்கள்.



## சிரமத்திற்கு மன்னிக்கவும்...

அடுக்கி சொருகப்பட்ட
அவதிப் பிரயாணத்தில்
அடிக்கடி கேட்கும்
அச்சுறுத்தும் சத்தம்!
•
இறங்கிச் செல்லவும்
அசரீரி ஒலிக்கும்
இறங்கி நடந்தால்
கொஞ்சம் காலுக்கு
நிம்மதி!
•
ஒருவர் பின ஒருவராய்
நேரம் செல்லச் செல்ல
வரிசை மெல்ல நகர
உச்சி வெயிலினிலே
உதிரும் வியர்வையோடு
ஒரு மினிக் குளியல்!
•
பயணப் பொதிக்குள்
ஆழமாய் கிளறப்பட
'அயர்ன்' செய்து
அடுக்கி வைத்த
ஆடைகளுக்கும்
அட்டகாசம்!
•
அக்கிளுட்டும்
தடவல்களுடன்
அடையாள அட்டை
பரிசீலித்து
பெயர் துருவும்
உறுமல்கள்!
•
முகாமின் ஒரு
முனையைவிட்டு–மறு
முனை வரையான
பாத யாத்திரை!
•
ஆளை விழுங்குவது
போன்றதான
பார்வைகள்!
•
அவ்வளவும் முடிந்து
தலை நிமிர்ந்தால்
ஆறுதல் வார்த்தைகள்
அழகு தமிழில்!
•
'சிரமத்திற்கு
மன்னிக்கவும்
ஒத்துழைப்பிற்கு
நன்றி...'

என். சஹாப்தீன்–
ஒட்டமாவடி.

## தேன் கிண்ணம்

## நீ வருவாய் என நான்....

திரவியம் தேட
திரைகடல்
கடந்தவனே!
தீயாய் எரிகிறது
என் மனம்
உன் ஞாபகங்களால்...!
**
வறுமையை போக்கவும்
வளமாய்
வாழவும்
வகைசெய்யுமென
தூர தேசம்
சென்றவனே...!
உன்னைப் பிரிந்ததால்
உறுப்பிழந்த
உடலைப் போல்
ஊனமாய்த் தவிக்கிறேன்...!
**
ஏழ்மையோடு
இருந்திருந்தால்–நீ
என்னோடு இருந்திருப்பாய்...
ஏற்றம் வேண்டும்
என்பதால்–இன்று
உன்னையே
இழந்து நிற்கிறேன்...!
**
தூர தேசம்
சென்று–நீ
என்னை நினைத்து
துயரத்தில்
ஏங்குவாய்
என்றிருந்தேன்–நீயோ
துணையோடு
துதி பாடுகிறாய்
என்றறிந்து
உடைந்து போனேன்...!

ராம். யுவராஜ்–
கண்டி.

## திட்டமென்ன?

என்ன தமிழ்க் கட்சிகளே!
எதிர்காலத் திட்டமென்ன?
சந்நிதிக்கு வருவதுவா,
தலை மடக்கிச் சுருளுவதா?
○○
சொல்லலங் காரங்கள்,
சோடிப்பு, வாய்வீரம்
செல்லுமோ இந்தமுறை...
செம்மை கொடுப்பனவோ?
○○
ஏதோ. விழிப்பாய்ப் போய்
எட்டி முதல் பாருங்கள்!
சாதோ–மிரளுமெனில்
தலையிழுத்துப் பின் வாரீர்!
○○
ஏதும் வெடிப்புளுகில்
இரண்டொன்றை விட்டாலும்
காதுகளில் ஏறிடுமோ....
காற்றில் பறந்திடுமோ?
○○
ஒதுங்கி வழிவிடுதல்
உண்மையிலே நல்லதெனில்
பதுங்கிப் பறந்திடலாம்,
பார்த்தோர் முடிவெடுங்கள்!

'காஞ்சான் கவிராயர்'

## பேனா நண்பர்கள்



**பெயர்:** ஏ.எம். அவ்ப்
**வயது:** 20
**முகவரி:** 63/1, நமடகஹ வத்த, கலேவெல.
**பொழுது போக்கு:** வழமையானவை.



**பெயர்:** கோமிளா வைரவநாதன்.
**வயது:** 21
**முகவரி:** 80, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
**பொழுது போக்கு:** கதைப்புத்தகம், பேனா நட்பு.

## இந்தவாரம் உங்கள் பலன்

**01.08.99 முதல் 07.08.99வரை**

ஜோதிடர் 'கர்னா'

**மேடம்:**
ஜென்ம வீட்டில் பலம் உள்ள பார்வையால் எடுத்த விடயங்கள் ஓரளவு நிறைவு பெறும். மனதில் நம்பிக்கை ஏற்படும். தொழில், பயிர் விருத்தி சிறப்பைக் கொடுக்கும். அச்சுவினி நட்சத்திரருக்கு புதன்கிழமை நல்ல அதிஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 5, 2.

**இடபம்:**
சார அமைப்பில் கிரக பலமாதலால் புதிய முயற்சிகள் எடுக்கப்படும். திருமண முயற்சிகள் கைகூடும். கல்வி ஓரளவு வளர்ச்சியுடன் பரீட்சை பலனும் நன்றாகத் தொடரும். கஷ்டங்கள் குறையும். ரோகினி நட்சத்திரப் பெண்களுக்கு சிறப்பான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இளம் சிவப்பு; எண்: 4.
அதிஷ்ட திகதிகள்: 2, 4.

**மிதுனம்:**
குடும்பஸ்தான அமைப்பு கூடுவதால் தடைப்பட்ட விடயங்கள் நன்றாக அமையும். எடுத்துக்கொண்ட முயற்சிகள், கல்வி பரீட்சைகள் நன்றாக அமையும். வெற்றி கிடைக்கும். தூர இடத்துப் பிரயாணம் நன்மையாக அமையும். திருவாதிரை, புனர்பூச நட்சத்திரருக்கு நன்மை அளிக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மண்நிறம்; எண்: 4.
அதிஷ்ட திகதிகள்: 4, 7.

**கடகம்:**
ஜென்மத்தில் புதன் உள்ளதால் கல்வி- பரீட்சைகள் நன்மை தரும். உறவினர்கள் சந்திப்பார்கள். உடலில் நோய் துன்பங்கள் அதிகரிக்கும். மனதில் கஷ்டமான நிலைதோன்றும். ஆயிலிய நட்சத்திரருக்கு சுபசம்பவங்கள், பண வசதிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள் : 3, 6.

**சிம்மம்:**
9ல் பார்வைபெற்ற சுபக்கிரக அமைப்புக்களால் புதிய விடயங்கள் நடைமுறைக்குவரும். மனதில் மகிழ்ச்சி தோன்றும் பரீட்சைகள், முன்னேற்றங்கள், நன்றாக அமையும். வெளிநாட்டுப் பிரயாணத்திற்கு வழி உண்டு. மக நட்சத்திரருக்கு நன்மையான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: வெண் மஞ்சள்; எண்: 1.
அதிஷ்ட திகதிகள்: 1, 5.

**கன்னி:**
8ல் கிரகப்பார்வை அத்தம், உத்தர நட்சத்திரருக்கு நன்மையாக இல்லை. வசதி வாய்ப்புக்கள் குறைவாக அமையும். சித்திரை நட்சத்திரருக்கு ஓரளவு நன்மையான காலமாக அமையும். பணவசதிகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: சனி, வெள்ளி.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 2.
அதிஷ்ட திகதிகள்: 2, 4.

**துலாம்:**
7ல் களத்திர பலம் கொள்வதால் கல்வி, எடுத்த முயற்சிகள் நன்மையாக அமையும். உறவினர்களின் உதவி கிட்டும். பரீட்சை வெற்றிகளும் நன்றாக காணப்படும். உடல் ஓரளவு அசதியாக அமையும். சுவாதி நட்சத்திரப் பெண்கள் நன்மை பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: றோஸ் வர்ணம்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 5, 6.

**விருச்சிகம்:**
பல விடயங்கள் தாமதம் அடைந்தாலும் எடுத்த ஒரு சில விடயங்கள், கருமங்கள் நன்றாக அமையும். உடலில் சிறு நோய் துன்பங்கள் ஏற்படும். நண்பர்கள், உறவினர்களின் உதவியால் பணவசதிகள் ஏற்படும். கல்வி, தொழில் என்பனவற்றில் சிக்கல்கள் தோன்றும். கேட்டை நட்சத்திரருக்கு பணவசதி ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை; எண்: 6.
அதிஷ்ட திகதிகள் : 2,6.

**தனுசு:**
5ல் கிரகபலம் கொள்வதால் கல்வி, பணவசதிகள் சிறந்து விளங்கும்- உற்சாகமான நேரமாகும். தொழில் வசதிகள் சிறப்பாகக் காணப்படும். பயண முயற்சிகள், திருமண முயற்சி என்பன மூல, பூராட நட்சத்திரருக்குச் சாதகமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், சனி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 3,5.

**மகரம்:**
எடுத்த முயற்சிகள், பயனற்றதாகக் காணப்படும். தொழில், உடல்நிலை என்பவற்றில் சிக்கல்கள் தோன்றும். பண வசதிகள் ஓரளவுதான் அமையும். முயற்சிகள் வார இறுதியில் அவிட்ட நட்சத்திரக்காரருக்கு நன்மையாக அமையும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், சனி.
அதிஷ்ட நிறம்: ஒரேஞ்சு; எண்: 7.
அதிஷ்ட திகதிகள்: 2, 5.

**கும்பம்:**
3ல் உள்ள கிரகப்பற்று பலவிடயங்களைத் தாமதப்படுத்தும். செய்தொழில் நன்மையாக இருக்காது. முயற்சிகள் வெற்றியைக் கொடுக்காது. திருமண முயற்சிகள் தாமதிக்கும். பயிர் விருத்தி, உற்பத்தி குறைவாக அமையும். சதய, அவிட்டக்காரருக்கு, நன்மை இல்லாத நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், செவ்வாய்.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 3, 7.

**மீனம்:**
2ல் கிரகஸ்தானம் குடும்பத்தில் பற்றுக் காணப்படும். கல்வி முயற்சிகள் நன்மையைத் தரும். பரீட்சைகள் வெற்றியுடன் அமையும். குடும்பத்தில் சுப செய்திகள், பணவருமானங்கள் ஏற்படும். உறவினர்களைக் காணும் வாய்ப்பு ஏற்படும். பல நாட்கள் தடைப்பட்ட விடயங்கள் உத்திரட்டாதி நட்சத்திரருக்கு நிறைவு பெறும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 3.
அதிஷ்ட திகதிகள் : 1, 5.

## நில்-கவனி-முன்னேறு

- முயற்சி எனும் கிரியா ஊக்கியை பெற்றிருக்கிறீர்களா? எல்லா நற்குணங்களையும், சிறந்த கொள்கைகளையும், முறையான, பயிற்சியையும் நீங்கள் பெற்றிருந்தாலும் முயற்சியில்லாதவராயிருக்கும் பட்சத்தில் பயன் ஏதுமில்லை.
- கொஞ்சம் முயன்று பார்க்கும் குணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். இழந்தவைகளைப் பற்றிய புலம்பல்கள் இல்லாது அடுத்து நடக்க வேண்டியவைகளுக்கான ஆயத்தங்களில் ஈடுபடுவது பெருமையைத் தரும்.



- உங்களின் மன முயற்சியின் அளவைப் பொறுத்ததே உங்களின் வாழ்க்கை வளர்ச்சி.
- முயற்சி உடையவராய் இருங்கள். அதே சமயத்தில் தன் பலம் மற்றும் பிறர் பலம் உணர்ந்தவராயிருங்கள். உங்களின் சக்திக்கு மீறிய செயல்பாடுகள் தரையில் தன் பலத்தை முயற்சிக்கும் முதலைக்கு ஒப்பானதாகும்.
- முயற்சியின் முழு பலனையும் பெறவிரும்பினால், சோம்பலை அறவே ஒழித்துக் கட்டுங்கள்.
- முழு முயற்சியுடன் செயல்படும் வழக்கத்தைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

சோர்வு, ஞாபகமறதி, போன்றவைகளிலிருந்து முழுமையான நிவாரணம் பெறுவீர்கள்.

- சரியான பயிற்சியுடனான முழுமையான முயற்சிக்கு, மற்றவர்களின் எந்த சூழ்ச்சியும் தடை ஏற்படுத்த முடியாது.
- விதி, நேரம் என்று புலம்புவதில்லை என்ற உறுதியை எடுத்துக் கொள்ளுங்கள். மனத் தளர்ச்சி இல்லாத முயற்சி, விதியையே மாற்றியமைக்கும் சக்தி கொண்டது என்பதிலே சந்தேகமற்றுச் செயல்படுங்கள்.
- துயரங்களால் சோர்ந்து போகாதீர்கள் விடையில்லாத வினாவோ, தீர்வு இல்லாத பிரச்சனை என்றோ எதுவும் இல்லை. விடைக்கான, தீர்வுக்கான உங்களின் முயற்சியை அதிகப்படுத்துங்கள். துயரங்களின் சுவடேயில்லாமல் போய்விடும்
- ஒரு காரியத்திற்காக முயற்சிக்கும்போது இடையூறுகளால் மனத்தளர்ச்சியடையாமல் உறுதியுடன் செயல்படும் மனத்திடம் பெற்றவராயிருங்கள்.
- அனுபவ அறிவு இல்லாத செயல்களில் ஈடுபடும் முன்பு அதைப்பற்றி தெரிந்தவர்களிடம் கலந்தாலோசித்து செயல்படுவது தான் நிலையான வெற்றியைத் தரும்.
- ஒரே நேரத்தில் பல காரியங்களிலும் ஈடுபடாமல் ஒரு செயலில் முழுமையாக முயற்சிப்பதன் மூலம் காலந்தாழ்த்தாமல் வெற்றியடைவீர்கள்.
- எத்தனைதான் சிறப்பாகத் திட்டமிட்டாலும் அதற்கான செயல்பாட்டின்போது தளராத முயற்சிதான் சிறப்படைய வைக்கும்.
- தளராத முயற்சி எனும் அஸ்திவாரத்தின் மேல் தொடங்கும் உங்கள் வாழ்க்கை, கற்பாறையின் மேல் கட்டிய வீட்டைப் போல உறுதியாய் மிளிரும்.

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கைகளை கவனியுங்கள்

பெரும்பாலான பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்வதால் கரங்களின் மிருதுத்தன்மை இழந்து, சொரசொரப்பான, உலர்ந்த கைகளுடன் காட்சியளிப்பார்கள். தினமும் அந்தக் கைகளுக்கு சிறிது சேவை செய்தால் கைகளில் உள்ள தோல் மிருதுவாகி உள்ளங்கைகள் பஞ்சுபோல் மென்மையாகி விடும். பாத்திரம் தேய்த்து முடித்து, இரவு வேலைகளை எல்லாம் முடித்தவுடன் கைகளைச் சுத்தமாக சவர்க்காரம் போட்டுக் கழுவ வேண்டும்.



பிறகு கைகளில் நல்ல தரமான ஈரப்பசை கிறீம் (மாய்ச்சரைசிங் கிறீம்) நன்கு மசாஜ் செய்து தடவ வேண்டும் நகங்களுக்கிடையே அழுக்கு சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நகங்களை வாரம் ஒருமுறையாவது வெட்டி, ஒழுங்குபடுத்துவது நல்லது. அதிக வேலைப் பவால் கைகள் வலி எடுத்தால், ஒரு அகலமான பாத்திரத்தில் கைபொறுக் கும் அளவு சுடுநீர் ஊற்ற வேண்டும்.

அதில் சில சொட்டுக்கள், ஒலிவ் எண்ணெய் அல்லது பாதாம் எண்ணெய் இந்த இரு எண்ணெய்களும் இல்லாவிட்டால், சிறிதளவு தேங்காய் எண்ணெயாவது விட்டுக் கலக்க வேண்டும். நீரில் விரல்களை வைத்தபடி விரல்களை மூடி, பிறகு நன்கு திறந்து மாற்றி, மாற்றி அவ்வாறு செய்ய வேண்டும். இப்படி செய்தால் கைகளுக்கு சோர்வு நீங்கி, வலி குறையும்.

வெளியில் செல்லும்போது முகத்திற்கு மட்டும் மேக்-அப் போட்டால் போதாது. நாம் உபயோகிக்கும் கிறீம், பவுடர் ஆகியவற்றை, முகத்தின் 'பளிச்' வண்ணத்திற்கு சிறிதளவாவது ஒத்துப்போகும்படி கழுத்து மற்றும் கைகளுக்கும் போட்டுக்கொள்வது நல்லது. விரல்களில் இறுக்கமான மோதிரங்களை அணியக் கூடாது. ரொம்ப பெரிதும் இல்லாத ரொம்பவும் சிறிதானதும் இல்லாத, சரியான அளவில் மோதிரங்களை அணிய வேண்டும்.

நகச்சாயம் பூசும்போது, சிறந்த தரமான நகச்சாயங்களைப் பூசவேண்டும். நகச்சாயங்களைப் பூசிவிட்டு அவற்றை நீண்ட நாட்கள் வைத்தி ருக்கக்கூடாது. நகச்சாயங்களை நீண்ட நாட்களுக்கு நகத்திலேயே படிய வைத்திருந்தால் நகங்கள் பாதிக்கப்பட்டு பழுப்பு நிறமடைந்துவிடும்.

அதனால் குறிப்பிட்ட இடைவெளியில் நகச்சாயம் அகற்றும் திரவம் மூலம் நகச்சாயங்களை அகற்றி சுத்தம் செய்து விட்டு, ஒன்றிரண்டு நாட்கள் நகத்தை அப்படியே விட்டு, பிறகுதான் மறுபடியும் நகச்சாயத்தைப் பூசிக்கொள்ளவேண்டும்.

## கர்ப்பிணிகள் பயன்பெற.....

கர்ப்பமுற்றுள்ள மங்கைகளுக்கு சில யோசனைகள்:

வயிற்றில் உள்ள குழந்தையைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். உணவுக் கட்டுப்பாடு, மிதமான உடற்பயிற்சி தேவை. கண்ட கண்ட உணவுகளைச் சாப்பிடக்கூடாது. விட்டமின் மற்றும் தாதுப்பொருட்கள் அடங்கிய உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களை உற்பத்தி செய்ய உதவும் பாலிக் அமிலத்தைக் கொடுக்கும் முட்டைக்கோவா, பசலைக்கீரை, கல்லீரல் மற்றும் எலும்பு வளர்ச்சிக்கு உதவும் கல்சியம் சத்துக்கொண்ட பால் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்களையும், இரும்புச் சத்துள்ள பச்சைக் கீரைகளையும், கடல் உணவுகளையும் உட்கொள்ள வேண்டும்.

தவிர, குழந்தை பிறந்தவுடன் பாலூட்டும் தாய்மார்களுக்கு புரதச்சத்து அவசியம்.

## அடுத்த குழந்தை இடைவேளை தேவை

முதல் குழந்தை இருக்கும் பெற்றோர் இரண்டாவது குழந்தை எப்போது பெற்றுக் கொள்ளலாம்?



இதுபற்றி ஒரு ஆராய்ச்சி செய்தாகிவிட்டது.

"முதல் குழந்தை பிறந்த 2 1/2 வருடத்தில் அடுத்த குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் இந்த இடைவெளி குறைவதும் நல்லதல்ல, கூடுவதும் நல்லதல்ல," என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

முதல் குழந்தை பிறந்த 19 முதல் 23 மாதத்திற்குள் அடுத்த குழந்தைக் கான கர்ப்பம் தரிப்பது நல்லது. அப்படிக் கர்ப்பம் தரித்து குழந்தை பெறும்போது இரண்டு பிரசவத்திற்கும் இடையில் 2 1/2 வருட இடைவெளி ஏற்படும்.

முதல் பிரசவம் முடிந்த 6 மாதத்தில் மீண்டும் கர்ப்பம் தரித்தால் எடை குறைவாக அல்லது முழுவளர்ச்சியடையாத நிலையில் குழந்தைபெறும் நிலை 30-40 சதவீதம் பெருக்கு ஏற்படும்.

10 வருடம் கழித்து கர்ப்பிணியானால் 60 முதல் 80 சதவீதம் எடை குறைவான நிலையில் குழந்தை பிறக்கும். 50 சதவீதம் அளவுக்கு முழு வளர்ச்சியடையாத குழந்தையும் பிறக்கக் கூடும்.

இந்த ஆராய்ச்சி அமெரிக்காவில் நடந்தது.



## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GD

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 01-08-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.





வழங்குவது 01 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

**வெள்ளை மாளிகையை கலக்கிய அழகி மோனிக்காவின் உண்மைக் கதை! உள்ளம் திறந்து அவர் கூறிய கதையுடன் மோனிக்கா பற்றி பல்வேறு செய்தியாளர்கள் சேகரித்த சுவையான தகவல்களையும் உள்ளடக்கியதே இந்தக் கதை**

சின்ன வயதிலேயே கொள்ளை அழகு மோனிக்காவுக்கு..

மோனிகா அப்பா செல்லமா? அம்மா செல்லமா? என்று கேட்டால், 'இரண்டு பேருக்கும் செல்லமாக்கும்!' என்று கொஞ்சும் குரலில் கூறுவதை ஆயிரம் முறை கேட்கலாம்.

அப்பா லிவின்ஸ்சியும், அம்மா மார்சியாவும் ஆரம்பத்தில் அன்பான தம்பதிதான்.

மோனிகா பிறந்தபோது, முக்கும் முழியுமாக பிறந்த தங்கள் செல்லக் குழந்தையை கண்ணில் ஒற்றிக் கொண்டு கூத்தாடினார்கள்; களிப்பில் மிதந்தார்கள்.

மோனிகாவுக்கு பின்னரும் இன்னொரு குழந்தைக்கு இணைந்து முயற்சித்ததில் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு மைக்கேல் என்று பெயர் வைத்தார்கள்.

இரண்டு குழந்தைகளோடு அம்மா மார்சியா தன் பொழுதைக் கழித்ததில் கணவனைக் கவனிக்க நேரம் போதவில்லை.

அப்போதுதான் லிவின்ஸ்சிக்கு சில பெண் நண்பிகள் கிடைத்தார்கள். அவர்களிடம் மார்சியாவிடம் காணாத புதுவித சுகங்களை கண்டார் லிவின்ஸ்கி



சகோதரா மைக்கேலுடன மோனிக்கா

மெல்ல மெல்ல மார்சியாவை புறக்கணிக்க ஆரம்பித்தார். தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. 'வேண்டாத பெண்டாட்டி கைபட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம்?'

மார்சியா என்ன செய்தாலும் லிவின்ஸ்சிக்கு பிடிக்காமல் போனது. மார்சியா என்ன சொன்னாலும் அதற்கு நேர் மாறாகவே விலின்ஸ்சி பேசத் தொடங்கினார்.

மார்சியாவுக்கும் இளமை இருந்தது ஆசை இருந்தது. அனுபவிக்கத் துடிக்கும் வயது இருந்தது. ஆனால் லிவின்ஸ்சி மார்சியாவை கட்டிலிலும் புறக்கணித்தார். ஒருநாள் படுக்கையில் கட்டியணைக்க மார்சியா கைநீட்டியபோது தட்டிவிட்டு எழுந்து போய்விட்டார்.

மார்சியா அடிபட்டவள் போலானாள். மார்சியா அவமானப்பட்டதாய் உணர்ந்தாள். மார்சியா அதன் பின்னர் விலின்ஸ்சியை ஒரு புழுப்போல பார்க்கத் தொடங்கினாள்.

கட்டில்கள் தனியாகின. மனங்களும் துருவங்களாகின. ஒரு வீடு, இரு துருவங்கள்.

இந்தத் துருவங்களை குழந்தைகள் இரண்டும்தான் இணைத்து வைத்திருந்தன. மோனிகா ஒருநாள் கேட்டே விட்டாள்: "ஏன் அம்மா அப்பா கட்டில் தனியாக இருக்கிறது?"

அம்மா ஒருவாறு சமாளிப்பாக பதில் கூறுவாள்.



பல இரவுகள் அப்பா வீட்டுக்கு வருவதில்லை. அவரது படுக்கை காலியாக இருப்பதைப் பார்த்துவிட்டு குழந்தை மோனிக்கா தன் தத்துப்பித்துக் குரலில் கேட்டாள்: "அப்பா எங்கே அம்மா?"

"எவளோடு படுத்துக்கிடக்கிறாரோ! எவள் அவரை படுத்துகிறாளோ? யார் கண்டது?" என்றுதான் அம்மா சொல்லத் துடிப்பாள். பாவம் குழந்தையின் மனது காயப்பட்டு விடுமே என்று, "அப்பாவுக்கு இன்று இரவு வேலை!" என்று பொய் கூறி தூங்கவைப்பாள்.

### உடைந்தது

மைக்கேல் படுசுட்டி, கையில் எது கிடைத்தாலும் தூக்கிப் போட்டு உடைத்துவிடுவான்.

அப்படித்தான் ஒருநாள் அப்பா, அம்மா இருவரும் சேர்ந்து நின்று எடுத்துக் கொண்ட திருமண போட்டோவை தூக்கி ஒரே போடு.

## கண்ட காட்சிகள்

சுக்கு நூறாக உடைந்து போனது.

அம்மா அந்தப் படத்தையே சில நொடிகள் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். பின்னர் தன்னையறியாமலேயே அவள் உதடுகள் முணுமுணுத்தன. "எல்லாமேதான் உடைந்து விட்டன!"



1986ல் தாய் தந்தையர் சகோதரருடன் மோனிக்கா

உடைந்து போன அந்தப் படத்தைப் பார்த்த போதுதான் மோனிக்காவின் அம்மாவுக்கு அந்த யோசனை வந்திருக்க வேண்டும்.

'லிவின்ஸ்சியை விவாகரத்து செய்வதைத் தவிர வேறு வழியில்லை!'

மார்சியாவின் அந்த யோசனையை சிறிது காலம் குழந்தைகள் வளரும்வரையாவது ஒத்திப் போடுமாறு குடும்ப நண்பர்கள் பலர் ஆலோசனை கூறினார்கள்.

மார்சியாவும் அதன்படி நடந்தாள். அம்மாவும் அப்பாவும் ஏட்டிக்கு பேட்டியாக நடந்து கொள்வதை குழந்தை மோனிக்கா கண்டுபிடிக்கவில்லை.

குழந்தைப் பருவம் மறைந்து சிறுமியாகி, பருவம் அடைந்து குமரியாக துள்ளித் திரிந்த போது, தன் பெற்றோரின் தினச் சண்டைகளால் மனம் உடைந்து போனாள் மோனிக்கா.

அவளுக்கு எதுவுமே பிடிக்கவில்லை. விளையாடப் பிடிக்கவில்லை. நண்பிகளுடன் அரட்டை அடிக்கப் பிடிக்கவில்லை. தம்பியுடன் தான் எப்போதாவது விளையாட்டு.

வண்ணத்துப்பூச்சியின் சிறகுகளை கத்தரித்துப் போட்டது போல அவளது சந்தோசங்களை வீட்டுச் சூழல் வெட்டிப் போட்டு விட்டது.

### உடம்பு பெருத்தது

சாப்பிட்டுவிட்டு பாடசாலைக்கு போய்வருவதோடு சரி. வீட்டுக்குள் அடங்கிக் கிடப்பாள். கண்டதையும் தின்பாள்.

உணவு உண்ணுவதற்கு குறிப்பிட்ட நேர ஒழுங்கு அவசியம். பசிக்கும் போது புசித்தால் தான் உடலுக்கு ஆரோக்கியம். அதற்கேற்ப நேர ஒழுங்கை கடைப்பிடித்தால் தானாகப் பசிக்கும்.

மோனிக்கா பசித்தபோது புசித்ததை விட நினைத்தபோதெல்லாம் புசித்துவிட்டு வீட்டுக்குள் கிடந்தாள்.

குச்சி குச்சி மோனிக்கா குண்டு குண்டு மோனிக்காவாக மாறினாள். குண்டுக் கால்கள். குண்டுக் கைகள். குண்டுக் கன்னம் என்று எல்லாமே குண்டுதான்.

ஆரம்பத்தில் அவளுக்கு தன் உடம்பு மீது எந்தக் காதலும் கிடையாது. அதனால் உடம்பு பெருத்தது அவள் மனதை வருத்தவில்லை.

கல்லூரியில் கண்முன்பாக கண்ட காட்சிகள்தான் படிப்படியாக மோனிக்காவின் மனதில் மூடிக்கிடந்த சில பகுதிகளை தட்டித் திறந்தன.

அவளது நண்பிகள் பலருக்கு ஆண் நண்பர்கள் இருந்தனர். அவர்கள் தங்கள் நண்பர்களோடு கல்லூரியின் மூலை முடுக்குகளில் குளிருக்கு ஒதுங்கும் புறாக்கள் மாதிரி ஒதுங்கிக் கொள்வதையும், ஒருவருக்குள் ஒருவர் ஒடுங்கிக்கொள்வதையும் மோனிக்காவின் கண்கள் படம் பிடித்து அவள் மூளைக்கு அனுப்பிவைத்தன.

தன் நண்பி ஒருத்தியை அவளது காதலன் மர நிழலில், மரமறைவில் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்ததையும், அவனது கைகள் நண்பியின் உடலில் சுதந்திரமாக தாவியதையும் ஒருநாள் பார்த்துவிட்டாள்.

மோனிக்காவுக்கு அந்தக் காட்சியை மறக்க முடியவில்லை. உடம்பு சூடாகி விட்டது. ஒரு போத்தல் குளிர்ந்த நீரை உள்ளே தள்ளியும் தாகம் தணியவில்லை.

இவள் தங்களைப் பார்க்கிறாள் என்பது தெரிந்தும்கூட கல்லூரி காதல் ஜோடிகள் விவஸ்தையே இல்லாமல் தப்புக் காரியங்களில் ஈடுபடுவதை தொடர்ந்து கவனித்தாள்.

மோனிக்காவுக்கு அக் காட்சிகள் முதலில் திகைப்பூட்டின. பின்னர் அவள் உள்ளத்தில் கிளுகிளுப்பூட்டின. அதன் பின்னர் இரகசிய அவஸ்தையை ஊட்டின. அதற்கும் பின்னர் அவற்றைக் காண்பதில் தனி இன்பத்தை ஊட்டின. இறுதியாக நாட்டத்தை தூண்டின.

மோனிக்காவின் மனதில் அந்த கேள்வி பிறந்தது?

"எனக்கும் ஒரு ஆண் நண்பன் கிடைக்க மாட்டானா?"

தேடினாள். தேடினாள். கல்லூரிக்குள் தன் நீல விழிகளால் வலை வீசித் தேடினாள்.

(வருவாள்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**கல்கிசை வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி ச.ச. சிவம், 13/1 பழைய கல்குளி வீதி, கல்கிசை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com



# பாப்பா முரசு



> சக்தி தனக்கே எமது வயிறு-அது
> சாம்பாரையும் நல்லவுண வாக்கும்-சிவ
> சக்தி தனக்கே எமது வயிறு-அது
> சக்தி பெற உடலினைக் காக்கும்!
>
> -சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# நரியின் பேராசை

ஏரியின் ஒரு கரையில் உள்ள புதர் ஒன்றில் நரி ஒன்று வசித்து வந்தது. அதற்கு எப்போதும் ஆசை அதிகம். தனக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடையாது.

அதன் பார்வை பெரும்பாலும் மறுகரையை நோக்கியே இருக்கும். காரணம் அங்கு மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களின் வலையில் இருந்து சிறிய மீன்கள் துள்ளி தரையில் விழும். அவற்றை மீனவர்கள் எடுத்துச் செல்லமாட்டார்கள்.

தான் அங்கு இருந்தால் அந்த மீன்களை எல்லாம் கஷ்டப்படாமல் சுவைத்துச் சாப்பிடலாம் என்று எண்ணிக்கொள்ளும்.

ஏரியின் மறுகரை சற்றுத் தொலைவில் இருப்பதால் அங்கு நீந்திச் செல்ல முடியாததால் அந்த நரி அமைதியாக இருந்தது.

நரி இருக்கும் கரையில் இருந்து மறுகரைக்கு விவசாயி ஒருவர் தினமும் சென்று வருவதை அறிந்திருந்த நரி, அந்தப் படகில் மறுகரைக்குச் செல்லத் திட்டமிட்டது.

இதற்காக நரி மறுநாள் அதிகாலையில் எழுந்து, படகில் வைக்கோல் நிரப்பப்பட்டிருந்த பகுதியில் சென்று மறைந்து கொண்டது. இதை அறியாத விவசாயி படகை மறுகரைக்கு ஓட்டிச் சென்றார். படகு மறுகரைக்குச் சென்றதும் நரி படகில் இருந்து தாவி ஓடி, ஒரு புதரில் மறைந்துகொண்டது.

மறுநாள் மீனவர்கள் மீன்பிடித்து கரைக்கு வந்து வலையை விரித்தனர். அப்போது வலையில் இருந்து சிறிய மீன்கள் தரையில் விழ, நரி அவற்றைப் பிடித்துத் தின்றது. இப்படி பல நாட்கள் நரி, சிறிய மீன்களை உண்டு வந்தது.

பேராசை எண்ணம் பிடித்த நரிக்கு சிறிய மீன்கள் போதவில்லை. அது வலையில் இருந்த மீன்களைத் தின்ன ஆசைப்பட்டது.



ஆனால் பெரிய மீன்களை எப்படித் தின்பது என்று யோசித்தது.

இறுதியாக அது மீனவர்களின் வலையின் உள்ளே ஒளிந்து கொண்டு, வலையோடு ஏரிக்குள் சென்று பெரிய மீன்களைச் சாப்பிடலாம் என்று முடிவு செய்தது.

அதன்படி அது மீனவர்களுக்குத் தெரியாமல் ஒரு வலையினுள் பதுங்கிக் கொண்டது.

நரி பதுங்கி இருந்த வலையைத் தூக்கி மீனவர்கள் ஏரிக்குள் வீசினர். அந்த வலை ஏரியின் அடிப்பகுதியை நோக்கி விரைந்து சென்றது.

வலையில் பெரிய மீன்கள் மாட்டிக்கொண்டன. அதில் ஒரு பெரிய மீனை நரி கவ்விக்கொண்டது.

வலையை மீனவர்கள் கரைக்கு இழுத்தனர். அதில் பெரிய மீனைக் கவ்வியபடி நரி இருப்பதை மீனவர்கள் பார்த்தனர். உடனே தடிகளை எடுத்து நரியை மீனவர்கள் நையப்புடைத்தனர்.

நரி பேராசையால் மீனவர்களிடம் மாட்டிக்கொண்டு அடிபட்டு உயிரை விட்டது.

# அதிசயம் - ஆனால் உண்மை!



▲ கொங்கோ பழங்குடியினர் தலைவர் நைய்மி 230 இறாத்தல் நிறைகொண்ட ஆடை அலங்காரங்களை அணிவார். மத்திய காலத்திய வீரர் அணியும் கவசங்களை விட இவற்றின் நிறை மும்மடங்கானது.



▲ வாஸாடை ஹராசீரோ என்ற ஜப்பானிய வீரர் க்யோடோ என்ற இடத்தில் 24 மணிநேரம் தொடர்ந்து அம்புகளை எய்தார். 396 அடி தூரத்திலிருந்து அவர் எய்த 13,053 அம்புகளில் 8,133 அம்புகள் இலக்குகளைத் துளைத்தன.



▲ சான்ஃபிரான்ஸிஸ்கோவில் வாழ்ந்த ஆமை ஒன்றின் தலையில் 30 என்ற இலக்கம் அமைந்துள்ளது.

# யானை நீர் விலங்கா?

நிலத்தில் வாழும் உயிரினங்களில் மிகவும் விரைவாக நீந்தக்கூடியது யானை. இது நீந்தும் போது, தும்பிக்கையை மட்டும் தண்ணீருக்கு மேல் தூக்கி வைத்துக் கொள்ளும். மேலும் இது தண்ணீருககடியில் பல மைல் தூரத்தை நீந்திக் கடக்கக் கூடியது.



யானைகளின் முதாதையர்கள் நீர்வாழ் விலங்குகளாகத்தான் இருந்திருக்க வேண்டும். யானையும் நீர் வாழ் விலங்கு வகையைச் சேர்ந்ததுதான்.

"வரலாற்றுக் காலத்திற்கு முன்பு யானைகள் தமது துதிக்கைகளால் மூச்சு விட்டுக் கொண்டே நீரில் வாழ்ந்தன" என்று அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# அம்பர் கற்கள்



வீதிகளில் எச்சரிக்கை விளக்குக் கம்பங்களில் சிவப்பு, மஞ்சள், பச்சை நிற விளக்குகள் இருக்கும்.

இவற்றில் மஞ்சள் நிறத்தை ஆங்கிலத்தில் 'அம்பர்' என்று குறிப்பிடுவார்கள்.

இந்த 'அம்பர்' நிறத்தில் ஒரு கல் கிடைக்கின்றது. வைரத்திற்கு ஒப்பான மதிப்பு மிக்க இந்தக் கல் பால்டிக் கடற்பகுதியிலிருந்தே கிடைக்கிறது.

கடற்பாசியிலிருந்து இந்த அம்பர் கல் உருவாகின்றது. நவரத்தினக்கற்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு சக்தி இருப்பதாகவும் அதனை உடலில் அணிபவர்களுக்கு அதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கும் என்று நம்புவது போலவே இந்த அம்பர் கற்களுக்கும் அப்படியான சக்தி உண்டென ரோமானியர்கள் நம்பினார்கள்.

இந்த கற்கள் பதித்த ஆபரணங்களை அணிந்தால் கெட்ட ஆவிகள், பேய்கள், பிசாசுகள் அண்டாது என்று நம்பும் ரோமானியப் பெண்கள், இன்றும் அம்பரை ஓர் ஆபரணமாக அணிகிறார்கள்.

# பெயர் வந்த விதம்

பாராளுமன்றம் என்பதை ஆங்கிலத்தில் 'பார்லிமெண்ட் (PARLIAMENT) என்று கூறுவோம். 'பார்லிமெண்ட்' என்றால் 'கூடிப் பேசும் இடம்' என்பது தொடக்க காலப் பொருள் ஆகும்.



இங்கிலாந்தின் ஆதிக்கத்தில் இருந்த நாடுகள் சார்பாக, அந்நாடுகளில் இருந்து இங்கிலாந்து நாட்டுக்குச் சென்று, அங்குள்ள தலைவர்களுடன் கூடிப் பேசுவார்கள். அதன்படி அவர்கள் சேர்ந்து பேசும் இடத்தை 'பார்லிமெண்ட்' என்று அழைத்தனர்.

இங்கிலாந்தின் ஆதிக்கத்தில் இருந்த நாடுகள் விடுதலை பெற்றதும் பாராளுமன்றத்தை 'பார்லிமெண்ட்' என்றே அழைக்கின்றனர்.

# செயற்கைக் கடல்




ஜப்பான் நாட்டில் செயற்கைக் கடல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. 10 ஆயிரம் பேர் ஒரே நேரத்தில் குளித்து மகிழும் விதமாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கடல் ஜப்பானின் தலைநகரான டோக்கியோவின் தென்மேற்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்கைக் கடலுக்கு 'டொம் பெருங்கடல்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்கைக் கடலில் 15 ஆயிரத்து 826 தொன் நிறையுள்ள தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளது.

இதில் நிரப்பப்பட்டிருக்கும் நீர் மனித உடலுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத வகையில் குளோரின் கலக்கப்பட்டு மாசு நீக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்கைக் கடலில் பாறைகளும், மரங்களும் செயற்கையாக அமைக்கப்பட்டு உள்ளன. இவை பார்ப்பதற்கு மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ருபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.08.1999.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **307**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 305

**பரிசுக்குரியவர்:**
பே.தினேஸ்குமார்,
கமு/கோளாவில் விநாயகர் மகாவித்தியாலயம், அக்கரைப்பற்று.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| வி.குகர்ஷன், இரஜவெல்ல மத்திய கல்லூரி, இரஜவெல்ல. | எம்.என்.எம்.அஷ்ரப், குரிவல ஹமீதியா கல்லூரி, உக்குவளை. |
| ந.திருச்செந்தூரன், நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | மோகன் பிரியதர்ஷினி, ப.த.ம.ம.வித்தியாலயம், பண்டாரவளை. |
| கு.அனுஹாசினி, தமிழ் மகாவித்தியாலயம், தலவாக்கலை. | ஷெரோமி விஜேக்குமார், மெதடிஸ்த கல்லூரி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03. |
| ரா.அனுசா, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. | பாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |
| மாணிக்கராசா ஜசோதரன், விபுலானந்தர் த.ம.வி., திருகோணமலை. | ஸ்ரீஸ்கந்தராஜா வினோதன், தி/இ.கி.ச.ஸ்ரீ.கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |

# இயற்கை விநோதங்கள்

## அதிசயமான நீரூற்று:

பிரான்ஸில் பான்டெஸ்டோர்ப் என்னுமிடத்தில் அமைந்துள்ள ஒரு குகையில் ஒரு நீரூற்று உள்ளது. அந்த ஊற்றில் 36 நிமிடம், 36 விநாடிகள் நீர் ஊறும். அடுத்த 32 நிமிடம் 30 விநாடிகள் நீர் சுரக்காது. பிறகு மேற்சொன்ன கால அளவில் நீர் சுரப்பது நிற்கும். இப்படியாக மாறி மாறி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அங்கு நீர் ஊறிக்கொண்டிருக்கிறது.

## இனிக்கும் -உவர்க்கும் ஏரி:

இந்தியாவில் உள்ள ஜெய்ப்பூரில் சம்பார் என்னும் ஏரி ஒன்று உள்ளது. 128 சதுர அடி பரப்புள்ள இந்த ஏரி நீர் சில மாதங்களில் உப்பாகவும், சில மாதங்களில் இனிப்பாகவும், சில மாதங்களில் உவர்ப்பாகவும் இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் முதல் மே மாதம் வரையிலான 8 மாதங்களில் இந்த ஏரியில் இருந்து உப்பு எடுக்கப்படுகிறது. ஏனைய 4 மாதங்களில் இந்த ஏரி நீர் சுவையான தன்மையுள்ளதாக மாறிவிடுகிறது. இந்த அதிசய மாற்றம் நூற்றுக்கணக்கான வருடங்களாக நடந்து வருகிறது.

## கண்ணீர் வடிக்கும் கல்தூண்:

துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகரில் புனித சோபியா மசூதியில் உள்ள ஒரு தூணில் 500 ஆண்டுகளுக்கு மேலாகக் கண்ணீர் வடிப்பது போல சிறுகச் சிறுக நீர் வடிந்து கொண்டே இருக்கிறது. இஸ்தான்புல் நகரம் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்டவுடனே இத்தூணில் இருந்து தண்ணீர் வரத் தொடங்கியதாம். இன்றும் அத்தூணில் இருந்து தண்ணீர் வந்து கொண்டே இருக்கிறது.

## நதியில் தீ:

அமெரிக்காவின் தொழில் நகரமான கிளைவ்லாண்டில் குயா கோஹா என்னும் நதி ஓடுகின்றது. இந்த நதியில் அதிக அளவு இரசாயனக் கழிவு கலந்ததன் விளைவாக 1969ம் ஆண்டு திடீரெனத் தீப்பிடித்து எரிந்தது.



படிப்பகம்

www.padippakam.com

**இதுவரை**

பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனைக் காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது.

இதேவேளை, சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலையாகிறாள். பொலிஸ் விசாரிக்கிறது.

**இனி...**

# கையில் சிக்கிய மின்னல் 14

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

வர்ணா ரோட்டைக் கடந்து பார்கவியின் வீட்டுக்கு முன்னால் பரவியிருந்த ஜனக்கும்பலை இரண்டு கைகளாலும் விலக்கிக் கொண்டு உள்ளே போக, வாசற்படியில் நின்றிருந்த ஒரு இன்ஸ்பெக்டர் லத்தியை நீட்டி மறித்தார்.

"நீ எங்கேம்மா போறே..?"

"ஸார்... நான் எதிர் வீட்ல குடியிருக்கேன். பார்கவியை நான் பார்க்கணும்..."

"உள்ளே யாரும் போக முடியாதம்மா...! டாக்டர் வந்து பார்த்துட்டிருக்கார்..."

"தேங்க் யூ ஸார்..."

வர்ணா வீட்டுக்குள் நுழைந்தாள். கெரஸின் வாசனையோடு ரோமம், சதை கருகிய நாற்றமும் கலந்து அறையில் பரவியிருந்த காற்றைக் கெடுத்து வைத்திருந்தன.

எண்ணெய் தடவிய பெரிய வாழை மிலையில் எழுபது சதவீதம் கரிக்கட்டையாய் மாறியிருந்த பார்கவி படுக்க வைக்கப்பட்டிருந்தாள். அவளுக்கு தலை மாட்டிலும் கால் மாட்டிலும் இரண்டு கான்ஸ்டபிள்கள் தெரிய டாக்டர் ஒருவர் ஸ்டூலில் உட்கார்ந்து பார்கவியிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

"சொல்லும்மா... நீ அப்படி தற்கொலை பண்ணிகிட்டதுக்கு யார் காரணம்...?"

"......"

"தைரியமா சொல்லும்மா...."

"......"

பார்கவியின் கண்கள் 'பரபர'வென்று சுழன்றன. பேச முடியாமல் வாய் ஒரு பக்கம் கோணிக்கொண்டது.

"சொல்லும்மா... உன் புருஷன் உன்னைக் கொடுமைப்படுத்தினாரா?

பார்கவி பதில் சொல்ல முயன்று விழிகளை உயர்த்த அவளுடைய பார்வைக்கு வர்ணா கிடைத்தாள். பார்வை அப்படியே நிலைத்தது. உதடுகளில் மட்டும் சின்னதாய் ஒரு அசைவு நிகழ்ந்தது.

டாக்டர் திரும்பி வர்ணாவைப் பார்த்தார்.

"நீ யாரம்மா?"

"டாக்டர்... என் பேர் வர்ணா. எதிர் வீட்ல தான் குடியிருக்கேன். பார்கவியோடு எனக்கு நல்ல பழக்கம் உண்டு."

"பார்கவியின் பார்வை இன்னமும் வர்ணாவின் மேலேயே அழுத்தமாய் ஒட்டியிருந்தது. பார்கவியின் பார்வையைக் கவனித்த டாக்டர் வர்ணாவிடம் சொன்னார்:

"பார்கவி உன் கிட்ட ஏதோ சொல்லணும்னு பிரியப்படறா போலிருக்கு. நீ பேசிப் பாரம்மா... தற்கொலை ஏன் பண்ணிகிட்டேன்னு கேளு..."

வர்ணாவின் மனசுக்குள் சின்னதாய் ஒரு மகிழ்ச்சிப் பூ சட்டென்று பூத்தது.

"பார்கவி உயிரோடு இருக்காளா ஸார்?"

"உயிர் லேசா ஒட்டிக்கிட்டு இருக்கு... ஹாஸ்பிடல் கொண்டு போறதுக்குள்ளே உயிர் போயிடும். மரண வாக்குமூலம் வாங்கறதுக்காகத்தான் டாக்டரை வரவழைச்சிருக்கோம்..."

"ஸார்... உள்ளே போய் பார்கவி உயிரோடு இருக்கும் போதே அவளை ஒரு தடவை பார்த்துடறேன் ஸார்.. ப்ளீஸ்."

வர்ணாவின் கெஞ்சலில் சட்டென்று மனம் இளகிய இன்ஸ்பெக்டர் தலையசைத்தார்.

"உள்ளே போய் ஒரமா நின்று பார்த்துட்டு உடனே வந்துடணும்..."



வர்ணா தயக்க நடை போட்டுக் கொண்டு பார்கவியை நெருங்கினாள். பக்கத்தில் போய் மண்டியிட்டு உட்கார்ந்தாள்.

"பா..ர்..க..வி...."

பார்கவியின் பார்வை வர்ணா முகத்தின் மேல் இன்னமும் விடாப் பிடியாய் ஒட்டிக்கொண்டிருக்கத் தீயின் நாக்குகளுக்குத் தப்பிய அவளுடைய வலது கை மெல்ல, உயர்ந்து வர்ணாவை நோக்கி நீள, வர்ணா அந்தக் கையை ஆதரவாய்ப் பற்றிக் கொண்டாள். கண்களில் நீர் கோர்த்துக் கொள்ளக் கேட்டாள்.

"பார்கவி...! நீ எதுக்காக இப்படி ஒரு காரியம் பண்ணினே...? ரொம்ப தைரியசாலி மாதிரி என்கிட்ட பேசுவியே..?"

பார்கவியின் உதடுகள் மெல்லப் பிளந்து பல்வரிசையைக் காட்டியது. எழுத்துக்கள் தொண்டைக்குள்ளிருந்து தத்தி தத்தி வெளியே வந்தது.

"வ...ர்...ணா..."

டாக்டரின் முகம் பெரியதொரு மகிழ்ச்சிக்குப் போயிற்று. வர்ணாவை ஏறிட்டார்.

"அப்படியே பேச்சுக் கொடும்மா...! ஏன் தற்கொலை பண்ணிக்கிட்டேன்னு கேள்."

வர்ணா மறுபடியும் பார்கவியிடம் குனிந்தாள்.

"பார்கவி...! தற்கொலை பண்ணிக்கிற முடிவுக்கு நீ ஏன் வந்தே?"

"நா... நா... நான்... தற்கொலை... .... .... பண்ணிக்கலை...."

"பின்னே...?"

"......"

"சொல்லு பார்கவி...! உனக்கு என்ன நடந்தது?"

பார்கவி பதில் சொல்லத் திணறிக் கொண்டிருக்கும் போதே டாக்டர் கேட்டார்.

"நீ தற்கொலை பண்ணிக்கிற முடிவுக்கு போகலைன்னா உன் மேலே மண்ணெண்ணெயை ஊத்தி தீ வெச்சது யாரு...?"

"அது... வந்து... வந்து...."

"உன் புருஷனா? சொல்லு..." டாக்டர் குரலை உயர்த்திக் கேட்க பார்கவியின் தலை 'இல்லை' என்பது போல் மெல்ல ஆடியது.

"பின்னே... யாரு... சொல்லு...?"

பார்கவி சில விநாடிகள் மூச்சிரைத்து விட்டு சொன்னாள்: "நா.. நான் வர்ணா.. கி.. கிட்ட த..த.. தனியா... பே... பேசணும்..."

★★★

மிதுனின் பெயரைக் கேட்டதுமே டெலிஃபோன் ஆபரேட்டர் பாலச்சந்திரனின் முகம் ஒரு கோணலுக்கு உட்பட்டதையும் நெற்றிக்கு இட்டிருந்த சந்தனமும் குங்குமமும் சட்டென்று பூத்த வியர்வையில் கரைந்து போனதையும் கவனித்து விட்ட இன்ஸ்பெக்டர் பலராமன் தன் உதட்டுப் புன்னகையை அகலப்படுத்தினார்.

"ஸோ... உங்களுக்கு மிதுனைத் தெரியும்..?"

"தெரியும்..."

"யாரவன்?"

"ஸார்...! மிதுன் ஒரு பெரிய அரசியல் புள்ளியோட கையாள். போன மாதத்தில் நான்கைந்து தடவை இந்த கம்பெனிக்கு வந்தான். ஏக ரகளை செய்து விட்டுப் போனான்."

"எதுக்கு ரகளை..?"

"ரகளைக்கான முழு விபரம் எனக்குத் தெரியாது ஸார். அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீஸர் குருமூர்த்திகிட்டே கேட்டா உங்களுக்கு சரியான விபரம் கிடைக்கும் ஸார்..."

"குருமூர்த்தி உள்ளே இருக்காரா?"

"இருக்கார் ஸார்..."

பலராமன் உள்ளே போனார். அலுவலகம் வெறிச்சோடிப் போயிருந்தது... குருமூர்த்தி தன் கேபினுக்குள் உட்கார்ந்து வாயில் சிகரெட்டோடு ஒரு ஃபைலைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். பலராமனைப் பார்த்ததும் வாயில் இருந்த சிகரெட்டை ஆஷ்ட்ரேக்கு கொடுத்துவிட்டு ஒரு அவசரப் புன்னகை பூத்து, "வாங்க... இன்ஸ்பெக்டர்" என்றார்.

நாற்காலியில் சாய்ந்து கொண்ட பலராமன் மெல்லிய குரலில் கேட்டார்.

"என்ன மிஸ்டர் குருமூர்த்தி ஆபீஸில் ஸ்டாஃப் யாரையும் காணோம்...?"

"பூவிழியோட மரணத்துக்காக இன்னிக்கு ஆபீஸ் லீவ். இன்னிக்கு ஒரு முக்கியமான ஃபைலை ஆடிட்டிங் ஆபீஸுக்கு கொடுக்க வேண்டியிருந்தது. அதுக்காகத்தான் நான் ஆபீஸுக்கு வந்தேன். வெளியே இருந்து ஆபீஸுக்கு வரக்கூடிய டெலிஃபோன் கால் களை அட்டெண்ட் பண்றதுக்காக டெலிஃபோன் ஆபரேட்டர் வந்திருக்கார். பை...த..பை...பூவிழியின் மர்டர் சம்பந்தமா புதுத் தகவல் ஏதாவது கிடைச்சுதா ஸார்?"

"எஸ்... உயிர் பிரியும் தறுவாயில் இருந்த பூவிழிகிட்ட 'உன்னை இப்படி தாக்கினது யார்ன்னு கேட்ட கேள்விக்கு முழுசா பேரைச் சொல்ல ட்ரை பண்ணி, முடியாமே 'மி'ங்கிற எழுத்தை மட்டும் உச்சரித்தாள். அந்த 'மி'ங்கிற எழுத்துக்கு சொந்தக்காரன் யார்ன்னு இப்போ தெரிஞ்சு போச்சு..."

குருமூர்த்தியின் நெற்றிப் பரப்பில் இப்போது வியர்வை.

"யா...யார்... ஸார்?"

"மிதுன்..."

குருமூர்த்தி நெற்றி வியர்வையை கர்ச்சீப்பால் ஒற்றிக்கொண்டு மௌனிக்க பலராமன் ஒரு சின்னச் சிரிப்போடு கேட்டார்.

"என்ன ஏ.ஓ.ஸார்... பதிலையே காணோம்? அவசரப்பட்டு மிதுனா.. யாரது? எனக்கு தெரியவே தெரியாதுன்னு சொல்லிடாதீங்க. ஏன்னா போன மாசத்துல மிதுன் நாலைஞ்சு தடவை உங்க ஆபீஸுக்கு வந்து ரகளை பண்ணிட்டு போயிருக்கான்னு உங்க டெலிஃபோன் ஆபரேட்டர் சொல்லிட்டார்... எனக்கு இப்ப வேண்டியதெல்லாம் அந்த மிதுன் எதுக்காக இங்கே வந்து ரகளை பண்ணினான்? பூவிழிக்கும் அவனுக்கும் பர்சனலா ஏதாவது தகராறு இருந்ததா? இந்தக் கேள்விகளுக்கான சரியான பதில்கள் எனக்குக் கிடைச்சா கேஸை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துடலாம்..."

குருமூர்த்தி தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டார்.

"ஓ.கே.மிஸ்டர் இன்ஸ்பெக்டர். நீங்க மிதுனை ஸ்மெல் பண்ணிட்டீங்க. இனி மேலும் பூவிழியைப் பத்தின ஒரு உண்மையை உங்ககிட்டயிருந்து மறைக்க நான் விரும்பலை..."

"பூவிழியைப் பத்தின ஒரு உண்மையா... என்ன உண்மை...?"

"கொஞ்சம் அதிர்ச்சியாயிருக்கும்...! பரவாயில்லையா..?"

(தொடர்ந்து வரும்)

---

# 05 அஜ்மீர் அரண்மனை இரகசியங்கள்

**இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் இருக்கிறது அஜ்மீர். அங்கு இருந்து ஆட்சி புரிந்த மகாராஜாக்களது அந்தப்புரக் கதைகள் சுவாரசியமானவை. அவைதான் இங்கு அரங்கேறுகின்றன.**

அரண்மனையிலிருந்த ஆயிரக்கணக்கான பணிப் பெண்களில் ஒருத்தி குறைந்தாள் என்று சர்வ சாதாரணமாக விட முடியுமா?

ஒரு ராணியின் அந்தரங்கச் சேடியாயிற்றே. ஆகவே மேற்படி பெண் எவ்வாறு குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டு இறந்தாள் என்பது விசாரணைக்கு வந்தது. 'அந்தப் பெண்ணின் நடத்தையில் சந்தேகம் கொண்ட அவள் புருஷன் அவளைக் குரூரமான முறையில் கொலை செய்து பாழுங் கிணற்றில் போட்டுவிட்டான்' என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

♥ ♠

மகாராஜாவின் ராணிகளில் ஒரு ராணிக்கு ரொம்பக் கூச்சம். அவளுடைய அழகில் மகாராஜாவுக்கு ஒரு தனிக் கிறக்கம் உண்டு.

ஆகவே அவளை நாடுவது அதிகமாக இருக்கும்.

அந்த ராணி மிக அழகாக இருப்பாளே தவிர, மேல் நாட்டு நாகரிகமெல்லாம் பழக்கமில்லாதவள்.

அவளுடைய மேனி பூராவும் விதவிதப் பட்டாடைகளாலும் ஆபரணங்களாலும் மூடப்பட்டிருக்கும்.

இரவு நேரம் படுக்கைக்கு மகாராஜா வந்தால் சல்லாபிக்கப்போகும் போது சுலபமான நைட்டி போன்ற ஆடைதான் அணிய வேண்டும் என்பதெல்லாம் அந்த ராணிக்கு தெரியாது.

அப்படி அணியவும் அவள் விரும்புவதில்லை.

மகாராஜா சுபோதய சிங் அவளைப் பொறுத்த வரையில் மிகவும் பொறுமையாகவே இருப்பார்.

ஒரு தினம் அவரது உணர்ச்சிகள் மிகுந்த கிளர்ச்சியிலிருந்தன.

குறிப்பிட்ட ராணியின் அந்தப்புரத்துக்கு விரைந்தார்.

ராணி ஆடைகளைக் களைய வெகு நேரமாயிற்று.

புது ரவிக்கைக்கு நிறையக் கொக்கிகள் வைத்துத் தைக்க உத்தரவிட்டிருந்தாள்.

ரவிக்கையின் கொக்கிகளை அகற்ற மிகுந்த சிரமப்பட வேண்டியிருந்தது.



பொறுமை இழந்து கோபமுற்ற மகா ராஜா, ரவிக்கையை வெறித்தனமாக இழுத்தார்.

அப்படியும் கொக்கி கழறவில்லை. ரவிக்கைதான் கிழிந்தது.

புது ரவிக்கை கிழிவது அபசகுனம் என்று அடுத்த தினம் அரண்மனையில் விசேஷ பூஜை செய்யப்பட்டது.

ராணியின் ரவிக்கைக்கு அளவுக்கு மீறிக் கொக்கி வைத்துத் தைத்த அரண்மனைத் தையல்காரர் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

மகாராஜா சுபோதய சிங்கின் ராணிகளில் சண்டீபாய் என்ற ஓர் ராணி தெய்வ பக்தி மிகுந்தவள்.

அதேசமயம் மூர்க்கமான முரட்டு சுபாவம் கொண்டவள். ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் துர்க்கையின் கோவிலுக்கு ராணியம்மா நடந்தே செல்வாள்.

அரண்மனைக்கும் துர்க்கை கோவிலுக்கும் ஒரு மைல் தூரத்துக்கும் அதிகமாக இருக்கும்.

ராணி தன் தோழிகளுடன் மாலையில் கிளம்புவாள். தோழிகளின் கைகளில் பூஜைச் சாமான்கள், மலர்கள் அடங்கிய தட்டுக்கள் இருக்கும்.

ராணியில் கையில்?

தங்கம், வைரம் இழைத்த கைப்பிடியுடன் ஒரு நீண்ட சவுக்கு (நீளம் பதினைந்து அடி) இருக்கும்.

அதைச் சுருட்டிக் கையில் வைத்துக் கொண்டு நடப்பாள்.

ராணி கோயிலுக்குப் போகிற சமயம் சகல ரோடுகளிலும் ஆண் நடமாட்டம் அறவே இருக்கக்கூடாது. யாராவது அப்போது ரோடில் நடந்தால் தோழிப்பட்டாளம் விரைந்து போய் அந்த ஆசாமியை இழுத்து வரும்.

ராணி தன் கையிலுள்ள சவுக்கால் அவனைத் தெருவிலேயே விளாசு விளாசு என்று விளாசுவாள்.

சவுக்கடி கொடுப்பதற்கென்று விசேஷப் பயிற்சி பெற்றவள் ராணி சண்டீபாய்.

சவுக்கடிக்குப் பயந்து கொண்டு செவ்வாய் மதியத்திலிருந்தே ராணிவரும் ராஜ பாட்டையிலோ அவள் பார்வை படும் ரஸ்தாக்களிலோ ஆண்கள் நடக்கமாட்டார்கள்.

♡ ♥ ♡

மகாராஜா சுபோதய சிங் அடிக்கடி இரகசியத் திருமணங்கள் செய்து கொள்வார்.

ஒருத்தருக்கு நிறைய மனைவிகள் இருந்தால் அவரது ஆயுள் விருத்தியாகும். இளமை நீடிக்கும் என்று மகாராஜாவுக்கு ஒரு நேபாள சோதிடர் கூறியிருந்ததே அத்தகைய திருமணங்களுக்குக் காரணம்.

கன்னி கழியாத இளம் பெண்ணாகத்தான் மகாராஜா மணப்பார். அரண்மனைக்கு வந்த பின்தான் மேற்படி பெண்கள் புஷ்பவதி ஆவார்கள். மகாராஜா மணந்த மணப்பெண் புஷ்பவதி ஆகிவிட்டாள் என்ற செய்தியை அவருக்குத் தெரிவிக்கும் தாதிக்கு மகாராஜா ஒரு முத்து மாலையோ தங்க செயினோ பரிசளிப்பது அரண்மனை வழக்கம்.

வயசுக்கு வந்த புது மனைவியுடன் மகாராஜா சுகம் அனுபவித்துவிட்டுச் சென்றபின், அந்த மனைவி படுக்கைஅறை உடைகளை அவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவற்றை அந்தரங்கமான ராணிகளிடம் அவர் கொண்டுபோய்க் காட்டுவார். இரத்தக் கறை படிந்திருக்கும் அந்த உடைகளை பழைய ராணிகள் பார்த்து அவரை மெச்ச வேண்டும் என்று எதிர்பார்ப்பார்.

'நான் ஒரு கைபடாத ரோஜாவையே மணந்திருக்கிறேன். இவளால் அந்தபுரத்துக்கு இழுக்கு இல்லை' என்று அவர்களுக்குத் தெரிவிப்பது அவர் நோக்கம்.

(இரகசியம் தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

# கோகிலா என்ன செய்து விட்டாள்? 13

**மு.க.சுருக்கம்**

அனந்தராமன் ஒரு பத்திரிகையாளன். அவனது மனைவி கோகிலா. இருவருக்கும் இடையே மன ஒற்றுமை நிலவவில்லை. இருவருக்கு இடையேயும் மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. கோகிலாவின் பால்ய நண்பன் அவளை சந்திப்பதும் அனந்தராமனுக்கு பிடிக்கவில்லை. அவனது சந்தேகங்களால் கோகிலா வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். பின்னர் தற்செயலாக கடைத்தெருவில் சந்திக்கின்றனர். மறுபடி வீட்டுக்கு வருகிறாள் கோகிலா.

இனி...

**தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.**

## ஜெயகாந்தன்

அவள் சாவியை எடுத்துக் கொள்வதைக் கூடக் கவனியாமல் அவன் 'ஃப்ளாட்'டிலிருந்த தேநீரை இரண்டு கப்புகளில் ஊற்றினான்.

மௌனமாகத் தான் சாவியை எடுத்துக் கொண்டது குறித்து அவன் ஏதேனும் தவறாக முடிவு செய்துவிடக்கூடாது என்ற ஜாக்கிரதை உணர்வுடன் அவள் கேட்டாள். "நீங்க எப்ப டெல்லிக்குப் போகப் போறீங்க?" அவன் டீயை அருந்தியவாறு விழிகளை மட்டும் உயர்த்தி அவளைப் பார்த்துச் சொன்னான்: "வியாழக்கிழமை. இன்னும் நான்கு நாட்கள்! நீ எதைக் குறித்தும் பயப்பட வேண்டாம். இன்னும் நான்கு நாட்கள். இனிமேல் நீ யாரோ; நான் யாரோதான்!" என்று அவள் மனத்தைப் புரிந்துகொண்டு அவன் அவளுக்கு உறுதி அளித்தான்.

அந்த வீட்டின் மாடிப் போர்ஷனுக்குப் போகிற வழியில் உள்ள அந்தச் சிறு மாடப் பிறையில் ஓர் அகல் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

அனந்தராமன் இரண்டு நாட்களாக ஆபீசுக்குப் போகவில்லை. ஆனால் அவன் வீட்டிலும் இல்லை. அவன் டெல்லிக்கு மாற்றலாகிப் போவதற்கு முன் செய்ய வேண்டிய ஏற்பாடுகளில் இரண்டு நாட்களாக முனைந்திருந்தான். அவனது ஆபீசில் இன்று அவனுக்கு நடைபெற்ற பிரிவுபசார விருந்தில் கலந்து கொண்டு அவன் வீடு திரும்புகையில் வாசலிலேயே அவனைச் சந்திக்க நேர்ந்த வீட்டுக்கார அம்மாள், திடுதிடுவென்று உள்ளே ஓடினாள். அதைத் தொடர்ந்து அவள் உள்ளே இருந்து "நீங்க போய்ச் சொல்லுங்களேன்" என்று பின்னாலிருந்து தள்ளிய நிர்ப்பந்தத்தால் ரொம்பவும் சங்கோஜத்துடன் வெளியில் வந்து நின்ற அவளது கணவர், மாடிப்படி ஏறிக்கொண்டிருக்கும் அனந்தராமனைப் பின்னாலிருந்து பார்த்து, "அவர் போயிட்டாரேடி" என்று கூறினார். திரும்பி 'கூப்பிடுங்கோளேன்' என்று முகத்தில் இடிப்பது மாதிரி பல்லைக் கடித்துக் கொண்டு கையை நீட்டி வீட்டுக்கார அம்மாள் பயமுறுத்தவும் ஏதோ தர்ம சங்கடத்தில் சிக்கித் தவிப்பவர்போல் ஒரு முறை குரலைச் செருமி, "ஸார்" என்று பயந்து பயந்து கூப்பிட்டார். அனந்தராமன் மாடிப்படியிலிருந்து திரும்பிப் பார்த்தான். பதினாறு வயசுப் பெண் மாதிரி உடம்பை நாணிக்கோணிக் கொண்டு நிற்கும் அவரைப் பார்த்து அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவர் உட்புறம் திரும்பி "அவரே வரார்!" என்று கூறி 'அடுத்துத் தான் என்ன சொல்வது?' என்பதற்கு அவள் உத்தரவை எதிர் பார்த்தார்.

"ரொம்ப நன்னாயிருக்கு... நாளைக்கி எங்காத்திலே உங்களுக்கு விருந்து. நீங்க வரணும்னு சொல்லுங்களேன். வாயிலே என்ன கொழுக்கட்டையா?" என்று அவரது அசட்டுத்தனத்தின் மீது வந்த ஆத்திரத்தில் அவள் முணுமுணுப்பதும் புரியாமல் முழி முழியென்று முழித்தவாறு அனந்தராமனின் பக்கம் திரும்பி, "மாமி என்னமோ சொல்றா, வாங்கோ!" என்று உள்ளே போய் நாற்காலியை இழுத்துப் போட்டார் வீட்டுக்காரர்.

"சொல்றா... சொரைக்காய்க்கு உப்பில்லேன்னு, காலையிலேந்து உக்காந்து பிளான் போட்டுட்டு-போங்கோ... போய்க் கதவிடுக்கிலே ஒளிஞ்சுக்குங்கோ... எதிர்க்க வேறே நிக்கறேளே... இந்தாத்திலே நான்தான் புருஷாள். அவரை நான் கூப்பிட்டுட்டேன். அவர் கிட்டே நீங்க ஒருவார்த்தை சொல்லுங்கோன்னா... மாமி கூப்பிட்டாளாம்... மாமி" என்று தன் புருஷனை ஒரு பாட்டம் பாடி விட்டு, "நீங்க நிக்கறேளே உட்காருங்கோ" என்று அனந்தராமனை வரவேற்றாள் வீட்டுக்கார அம்மாள்.

"நீங்க வேறே எங்கேயாவது ஒத்துண்டிருக்கப்படாதேன்னு பயந்திண்டிருந்தேன்."

"இல்லை; மத்த பார்ட்டியெல்லாம் இன்னியோட முடிச்சுட்டேன். நாளைக்கு முழுக்கவும் டிரெயினுக்குப் போறவரைக்கும் வீட்டிலேயே இருக்கிறதாகத்தான் பிளான். ஃபர்னிச்சரெல்லாம் டிஸ்போஸ் பண்ணிட்டேன். ஆனாலும் இன்னும் மூட்டை கட்டவேண்டிய வேலை நிறைய இருக்கு!" என்று கூறி அங்க உட்காராமல் அவசர அவசரமாக மாடிக்குப் போனான் அனந்தராமன்.

அவன் தலை மறைந்ததும் வீட்டுக்கார அம்மாளின் கணவர் மிகவும் குதூகலமாகச் சொன்னார். "பாத்தியா எவ்வளவு ஸிம்பிளா முடிஞ்சு போச்சி! இதுக்குப் போயி ஆளைப் போட்டு மெரட்டிண்டிருந்தியே."

"போதும் சமத்து வழிய வாண்டாம்" என்று வீட்டுக்கார அம்மாள் தன் புருஷனை மட்டந்தட்டிக் கொண்டிருப்பதைக் கேட்டுச் சிரித்தவாறே படி ஏறிக் கொண்டிருந்தான் அனந்தராமன். வீட்டின் முன் ஹாலில் நுழைந்ததும் அவன் முகத்தில் தவழ்ந்த அந்தச் சிரிப்பு எங்கோ மறைந்து போயிற்று.

இந்த மூன்று நாட்களாக அந்த வீட்டில் வழக்கமாய் நிலவிய களையும் அங்கு எப்போதுமே வழக்கத்திலில்லாத அமைதியும் குடிகொண்டிருந்தது. அந்த வீட்டில் அவள் இருக்கிறாள் என்பதை அவன் உணர்ந்தானே தவிர அவள் எந்த மூலையில் ஒதுங்கிக் கிடக்கிறாள் என்று அவன் பார்க்கக்கூட இல்லை.

எப்பொழுதும்போல அதிகாலையில் அவன் தலைமாட்டில் காபி இருந்தது. எப்படியோ அவன் எழுந்திருக்கும் நேரமறிந்து அது சூடு ஆறிப்போகாமல் இருந்தது. பாத்ரூமில் உள்ள தண்ணீர்தொட்டி அவன் வருகையை எதிர்பார்த்து நிறைந்திருந்தது. டவலும் சோப்பும் பிரஷின் மீது பேஸ்டும் அவனுக்காகக் காத்திருந்தன. அவன் குளித்து விட்டு வருவதற்குள் அவனது உடைகள் அலமாரிக்குள்ளிருந்துக் குதித்து வெளியே வந்திருந்தன. சரியாக ஒன்பதரை மணிக்கு டைனிங் டேபிளின் மேல் தட்டும் உணவு வகைகளும் அவனும் காத்திருக்கையில்கூட, 'அவள் இருக்கிறாள்' என்பதை மட்டுமே அவன் உணர்ந்திருக்கிறான்; அவளை அவன் தலை நிமிர்ந்து பார்த்ததுகூட இல்லை.

ஒரு நாளின் முற்பகுதியை இவ்வாறு கழித்தபோதிலும் மாலையும், அந்தியும், இரவும் மனித மனங்களை எப்படித்தான் பேதுறச் செய்து பித்துறச் செய்து நோயுறச் செய்து அலைக்கழித்து விடுகின்றன. அவர்கள் இருவருமே தத்தமது வேதனைகளைத் தனித்தனியே அனுபவித்தார்கள்.

தான்மட்டுமே அவ்விதம் அனுபவிப்பதாக அவன் நினைத்துக் கொண்டது போலவே அவளும் நினைத்துக் கொண்டதால் அவர்கள் இருவரும் தங்கள் மனோ உணர்ச்சிகளை ஒருவரிடமிருந்தொருவர் மறைத்துக் கொண்டார்கள். அவர்களது மௌனத்தில் ஒரு பிடிவாதமே கனத்துக் கிடந்தது.

ஒரு வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இரண்டு உலகங்களே வாழ முடியும் என்பதை இந்த மூன்று நாட்களில் அனந்தராமன் புரிந்துகொண்டிருந்தான்.

அனந்தராமன் தன் அறையினுட் சென்று உடைகளைக் களைந்து கொண்டிருந்தபோது அடுக்களையிலிருந்து வந்த கோகிலா. இந்த, மூன்று நாட்களில் அவனிடம் முதன் முறையாகப் பேசினாள்;

"நாளைக்கு அவாத்திலே நமக்கு விருந்தாம், வீட்டுக்கார மாமி சொல்லச் சொன்னாள்."

"ம்... எங்கிட்டேயும் சொன்னா" அவள் தன்னைப் பார்க்காமல் எங்கோ பார்தவாறுதான் சொல்லியிருந்தாள் என்ற நினைப்பினால் அவனும் அவளைப் பார்க்காமல் எங்கோ பார்த்தவாறு பதில் சொன்னான்.

தாங்கள் இருவருமே ஏன் இவ்விதம் பகைமையும் வெறுப்பும் கொண்டவர்கள் போல நடந்து கொள்ள வேண்டும் என்று ஒரு விநாடி யோசித்த அவள் இந்த இறுக்க நிலையை தளர்த்த வேண்டி - இந்த மூன்று நாட்களாகக் காபியும் டிபனும் கொண்டு வந்து வைத்துவிட்டு மௌனமாகச் சென்று விடுவாளே அது போல் செய்யாமல். டிபன் கொண்டு வரவா?" என்று சாதாரணமாகக் கேட்டாள்.

பத்து வருஷமாகக் கேட்டுக்கொண்டிருந்த கேள்விதான். இப்போது எவ்வளவு புதுமையாய் ஒலிக்கிறது! அவள் திடீரென்று தன்னிடம் இப்படிப் பேச்சுக் கொடுப்பாள் என்று எதிர்பார்க்காததால் அவன் சற்றுத் திகைத்திருந்தான். தனது கேள்விக்கு ஏனோ அவன் அதிகமாக அர்த்தம் கற்பித்துக்கற்றுக் கொண்டானோ என்று எண்ணிய அவள் ஒரு சிறு விளக்கத்தின் மூலம் அவன் திகைப்பைப் போக்கினாள்:


"இன்னிக்கு உங்களுக்கு ஆபீசிலே பார்ட்டியாச்சேன்னு கேட்டேன்!"

"ஆமாம், காபி மட்டும்" என்று சொல்லிக்கொண்டே அவன் பாத்ரூமை நோக்கி நடந்தான்.

அவன் போவதைச் சற்று நின்று ஏதோ சிந்தனையோடு பார்த்துக் கொண்டிருந்தாள் கோகிலா. இந்த நிலைமை அவளுக்குச் சகிக்கவொண்ணா வேதனை தருவதாயிருந்தது.

'இன்னும் ஒரு நாள்-பத்து வருஷமாக நான் அனுபவித்த வேதனையைவிட இது அதிகமில்லை' என்று ஒரு பெருமூச்சுடன் தன்னுள் முனகியவாறு அவள் அடுக்களைக்குப் போனாள்.

(கோகிலா.... தொடரும்)



---

# அரங்கம் அந்தரங்கம் 21

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

## கவியரசு கண்ணதாசன்

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

—கண்ணதாசன்—

வரதராஜன் உரிமையோடு, அடுப்படி வரையிலே போய் இடுப்பைக் கட்டி விளையாட ஆரம்பித்தார்.

வீடு பெரியது என்பதால் பக்கத்து வீட்டுக்காரர்கள் அதைப் பார்ப்பதற்கு வசதியில்லை; ஆனால் அதை டெலிவிஷன் பார்ப்பதுபோல் தன் வீட்டில் பார்த்துக் கொண்டிருந்தாள் வனஜாட்சி.

ஆம்! 'வரதராஜன் அங்கேதான் போயிருப்பார்' என்று அவளுக்கு எப்படியோ தோன்றிற்று.

'ஏதோ ஒரு பெண்ணோடு, கணவன் போனான், வந்தான்!' என்றால், எந்த மனைவியும் ஓரளவுக்கு, வருத்தப்பட்டுப் பிறகு அலட்சியப்படுத்தி விடுவாள்; ஆனால் 'ஒரே இடத்தில் விழுந்து கிடக்கிறான்' என்றால் ஆத்திரம் பன்மடங்கு பெருகி விடும்.

வரதராஜன், ரங்கநாயகியோடு சல்லாபித்துக் கொண்டிருந்தபோது, 'காலிங்பெல்' அடித்தது.

சட்டையில்லாத மேனியோடும், லுங்கியோடும், தள்ளாடும் போதையோடும், "யார்?" என்றபடி கதவைத் திறந்தார் வரதராஜன்.

அங்கே சாட்சாத் மகாகாளியாக நின்றாள், அவரது மனைவி வனஜாட்சி.

"தெரியுமே எனக்கு" என்றபடி உள்ளே வந்த வனஜாட்சி, அடுப்படி வரையிலே போய் கையிலே கிடைத்ததை எடுத்து ரங்கநாயகியை 'வாங்க' ஆரம்பித்தாள்.

தடுக்கப்போன வரதராஜனைப் பிடித்து தள்ளினாள் வனஜாட்சி.

ரங்கநாயகியின் முடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு, வெளியே வந்து அவள் போட்ட சத்தத்தில் தோட்டக்காரனும், காவல்காரனும் விழித்துக் கொண்டார்கள்.

வனஜாட்சி நாமாவளி பாடினாள்; லட்சார்ச்சனை செய்தாள்; ரங்கநாயகியின் சேலையை உரிந்து விட்டாள்.

அக்கம் பக்கத்து வீடுகளில் எல்லாம் விளக்குகள் எரிய ஆரம்பித்தன.

பக்கத்து வீட்டுப் பெண்கள் சமாதானத்துக்கு வந்தார்கள்.

அவர்களிடமெல்லாம் சரித்திரத்தை விரித்து வைத்தாள் வனஜாட்சி.

உள் பாவாடையோடு நின்ற ரங்கநாயகி அழுது கொண்டே வீட்டுக்குள் ஓடினாள்.

ஆத்திரத்தோடு வெளியே வந்த வரதராஜன், மனைவியை வாங்கு வாங்கென்று வாங்க ஆரம்பித்தார்.

பிறகு பக்கத்து வீட்டுக்காரர்கள் அதையும் சமாதானப்படுத்த ஆரம்பித்தார்கள்.

சமாதானம் செய்வதைவிட இந்தச் சண்டையை வேடிக்கை பார்ப்பதில் அவர்களுக்கு 'குஷி' அதிகம்.

வரதராஜன் தன் மனைவியைக் காரில் பிடித்துத் தள்ளித்தானே காரை ஓட்ட ஆரம்பித்தார்.

காரில் போகும் போதே அர்ச்சனை பலமாக நடந்து கொண்டிருந்தது; வாக்கு வாதம் முற்றியது.

நடுரோட்டில் காரை நிறுத்தி மனைவியைப் பிடித்து கீழே தள்ளிய வரதராஜன், காரின் கதவை 'க்' கென்று சாத்திக் கொண்டு போயே போய்விட்டார்.

எழுந்து நின்றாள் வனஜாட்சி. அப்போது டாக்சி ஒன்றும் கிடைக்கவில்லை; ஆனால் அவள் விழுந்து கிடந்த இடம் நாராயணசாமியின் இல்லத்துக்கு அருகே இருந்தது.

அங்கே போய்க் கார் கேட்கலாம் என்று வனஜாட்சி நடந்து உள்ளே சென்றாள்.

வீட்டுக்கு வெளியே அதிகாரி கமலநாதனின் கார் நின்று கொண்டிருந்தது.

கற்பகம் கதவைத் திறந்தாள். அழுது கொண்டிருந்த வனஜாட்சியைக் கற்பகம் பார்த்தாள்; பீதியடைந்த கற்பகத்தை வனஜாட்சி பார்த்தாள்.

**வா**ழ்க்கைக்குச் சில நியதிகள் உண்டு.

இத்தனை மணிக்கு எழுவது, குளிப்பது, இவ்வளவு தான் சாப்பிடுவது; இன்னின்ன கடமைகள் செய்வது என்று வகுத்துக் கொண்டவர்கள் பலர்.

காலை ஆறுமணிக்கு எழுவது அவர்கள் பழக்கமானால் எத்தனை மணிக்குப் படுத்தாலும் சரியாக ஆறு மணிக்குக் கண்கள் தாமாகத் திறந்து கொள்ளும். அது ஒரு பயிற்சி-முறையான வாழ்வு-பகவான் கீதையிலே சொன்னபடி, அந்தக் குணத்துக்குப் பெயர் சாத்விகம்.

ஆனால் கால நேரத்தைப் பற்றி கணக்கில்லாது வாழ்வது ஒரு பழக்கம்; அதன் பெயர் தாமஸம்.



காலையிலேயே குடிக்கத் தொடங்குவார்கள் சிலர்- கண்டதையெல்லாம் சாப்பிடுவார்கள். இரவு மூன்று மணிக்குப் படுத்து மதியம் பன்னிரண்டு மணிக்குக் கண் விழிப்பார்கள் சிலர். இந்த ஹிப்பியிஸத்திற்குப் பெயரே நவீன நாகரிகம்.

ஒரு பெண்ணோடு ஒரு நாள் உறவு கொண்டால் பதினைந்து நாட்களுக்கு அந்தச் சிந்தனை வரக்கூடாது என்பது பழைய கால தர்மம்- அவள் மனைவியாய் இருந்தாலும்கூட.

'மாதர்போகம் மாதம் இருமுறை' என்பது பழமொழி.

உடம்பிலிருந்து வெளியேறிய உயிர் அணுக்கள் மீண்டும் தெளிவாக உருவாகும் வரை, உடல் உறவு வைத்துக் கொள்ளாமல் இருப்பதுதான் ஆரோக்கியம்.

ஆனால் காம உணர்ச்சியின் கட்டுப்பாடற்ற தன்மை, கண்ட கண்ட நேரங்களிலெல்லாம் உறவு கொள்ளச் சொல்லும். அதனால் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி கால நேரம் தெரியாமல் தூங்க வைக்கும்; எந்த வேலையையும் ஒழுங்காகப் பார்க்க முடியாது.

'விந்து விட்டவன் நொந்து கெடுவான்' என்பது பழமொழி.

பரபரப்பான நாகரிகத்தில் இதையெல்லாம் யார் கவனித்தார்கள்?

**பெ**ங்களூரில் இருந்து கல்கத்தா வரை காமத்திலேயே லயித்துக் கிடந்த குமாரசாமியும், லலிதாவும் இளம் பருவத்து வெறித்தனம் முழுவதையும் காட்டிக் கொண்டார்கள்.

ஆசைகள் தீர்ந்து போய் விட்டால் பிறகு ஆண்-பெண் நட்பிலே ஒரு அலுப்பு ஏற்படும்.

அந்த அலுப்பு இன்னும் அவர்களுக்கு வரவில்லையென்பதால், உடல் உறவைவிட ஊர் சுற்றுவது சுகம் என்ற நினைப்பு வந்துவிட்டது. அதற்கு அவர்கள் திட்டமிட்டுப் புறப்பட்டபோதுதான், விஜயா வேதாசலம் உள்ளே நுழைந்தாள்.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# தண்டனை

ஆனந்தமூர்த்தி அதிபரை நினைத்தால் 'ஆ' என்று அசர வைக்கும் இரண்டு விஷயங்கள். ஒன்று அவருடைய நேர்மை. மற்றது கட்டுப்பாடு (Diciplime).

அண்ணாந்து பார்க்கும் உயரம் அதற்கேற்ற பருமன், காந்த சக்தியுள்ள கண்கள், மரியாதைக்குரியவர் என்று நம்ப வைக்கும் தோற்றம். அவருக்குப் பதின்மூன்று வயதில்



ஒரு மகன். அவன் பெயர் விவேக். அவர் மனைவி கிரிஜா மூளைப் புற்று நோய் கண்டு இறந்துபோனாள்.

ஆனந்த மூர்த்தியின் கல்லூரியில் படிப்பவன்தான் விவேக். தன்னுடைய ஒரே வாரிசு தன்னைப்போல் வரவேண்டுமென்பதில் ஆனந்தமூர்த்தி பிடிவாதமாயிருந்தார். அவனுடைய எதிர்காலமே அவர் இலட்சியம்.

ஆடம்பரமற்ற அவர் வீட்டின் பின்புறத்தில் அழகான பூந்தோட்டம் ஒன்று அமைத்திருந்தார் ஆனந்தமூர்த்தி. பூக்களுடன் உறவாடிப் பொழுதைக் கழிப்பார். எல்லா மரங்களுக்கும் தானே நீரூற்றி மகிழ்வார்.

அன்று தோட்டத்தின் மத்தியில் போடப்பட்டிருந்த சீமெந்து பெஞ்சில் ஆனந்தமூர்த்தி இருந்து விவேக்கைப் பற்றிய நினைவில் மிதந்தார். தாயில்லாமலேயே தன் மகனைத் தக்கபடி வளர்த்து விட்ட பெருமிதம் மெல்ல அவர் உதடுகளில் புன்னகையாய் நெளிந்தது. வளர்ப்பில்தான் ஒரு பிள்ளையின் எதிர்காலம் தங்கியிருக்கிறது என்பதில் உறுதியாயிருப்பவர் ஆனந்தமூர்த்தி.

பறவைகள் சடசடவென்று இறக்கையடித்துப் பறந்து ஒலி எழுப்புவதை அண்ணாந்து பார்த்தார். மனிதனுக்கு இரண்டு காலிருந்தும் அவனால் பறக்க முடியவதில்லை. இறக்கைகள் எவ்வளவு முக்கியம் என்று எண்ணியதும் அவரால் சிரிக்காமலிருக்க முடியவில்லை. "சார்...!"

பவ்வியமாக அழைத்தவர் அவருடைய கல்லூரி ஆசிரியர் அரவிந்த்.

"வாங்கோ மாஸ்டர்.." என்று அவரை அழைத்துக்கொண்டு கூடத்தில் போய் அமர்ந்தார்.

"நீங்கள் என்ன குடிப்பீர்கள். ரீயா? காப்பியா?"

"ஒன்றும் வேண்டாம் சார். இப்போதுதான் குடித்துவிட்டு வந்தேன்." அரவிந்த் மாஸ்டர் அமைதியாகப் பதிலளித்தார்.

"மாஸ்டர் நீங்கள் வந்த விஷயம்...?"

"ஒன்றுமில்லை சார்!" சொல்லிவிட்டுத் தலை கவிழ்ந்த மாஸ்டர் எதையோ சொல்ல வந்திருக்கிறார் என்பதை ஆனந்தமூர்த்தி புரிந்துகொண்டார்.

"இது கல்லூரியல்ல நான் இங்கே பிறின்சிப்பலுமில்லை. இது வீடு. நான் உங்களை நண்பராகவே பார்க்கிறேன். பிளீஸ் எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள்."

"உங்கள் மகன் விவேக்கைப் பற்றி..." மாஸ்டரின் வாயில் வார்த்தைகள் சிக்கின.

ஆனந்தமூர்த்தியின் முகம் மாறியது புருவங்கள் வளைந்து கேள்விகள் ஆகின.

மாஸ்டர் மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டார்.

"சார் உங்க மகனுக்குச் சிகரட் பழக்கமிருக்கு. சில பெடியங்களுக்கும் கொண்டு வந்து விற்கிறார். இதைத் தங்களிடம் கல்லூரியில் சொல்ல விரும்பல்ல... வீட்ல வந்து அவரைக் கண்டித்து வைக்கும்படி உங்களிடம் சொல்ல நினைத்தேன்." மாஸ்டரின் வார்த்தைகள் தயங்கியபடி வெளியேறின.

ஆனந்தமூர்த்தி மௌனத்திலாழ்ந்தார். அவருடைய முகம் அமைதியாய் இருந்ததைக் கண்ட மாஸ்டர் ஆச்சரியத்தில் உறைந்து போனார். அந்தக் கூடத்துக் கடிகாரத்தின் டிக் டிக் ஓசை மட்டும் துல்லியமாய்க் கேட்டது.

ஆனந்தமூர்த்தி எதுவித பதற்றமும் இன்றி எழுந்து உள்ளே சென்றார். மாஸ்டரின் மனம் படபடத்தது. தனது அதிபரின் கண்டிப்பை அவர் அசைபோட்டுப் பார்த்தார்.

நெற்றியில் பொட்டுப் பொட்டாய் பூத்திருந்த வியர்வைத் துளிகளைத் தன் உள்ளங்கையால் அழுந்தத் துடைத்தார். சில நிமிஷங்கள் ஆகியிருக்காது.

ஆனந்த மூர்த்தி ஒரு கையில் தகதகவென்று எரியும் விறகுக் கட்டையைப் பிடித்துக்கொண்டு மறுகையால் விவேக்கை இழுத்துக்கொண்டு வருவதைக் கண்ட அரவிந்த் மாஸ்டர் இருக்கையை விட்டெழுந்து "சார்!" என்று அலறினார். "விவேக்கை ஒண்ணும் பண்ணிடாதீங்க." என்று பரிதாபமாய் அவர் நாக்குழறியது. பயத்தால் அவர் ஆடிப் போனார்.

ஆனந்தமூர்த்தி தன் மகனிடம் அரவிந்த் மாஸ்டர் சொன்ன விஷயத்தை ஒப்புவித்தார்.

"மாஸ்டர் பொய் பேச மாட்டார் என்று நம்புகிறேன்!" நிதானமாகச் சொன்னார் ஆனந்தமூர்த்தி.

விவேக்கின் கண்களிலிருந்து நீர் வடிந்தது: மாஸ்டரையும் தன் தந்தையையும் பார்த்து, "உண்மை!" என்றான்.

என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று மாஸ்டர் எண்ணிய கணத்தில் ஆனந்த மூர்த்தி எரி கட்டையால் சுரீர் என்று தன் கையைப் பொசுக்கிக்கொண்டார்.

"இப்படி ஒரு மகனைப் பெற்று வளர்த்ததுக்கு... எனக்கு இதுதான் தண்டனை..." ஆனந்தமூர்த்தி அமைதியாகச் சொன்னார்.

**ரூபராணி**

# ரொம்பக் கஷ்டம்...!

25 ஆண்டு காலப் பழமை வாய்ந்த நட்பு. சுமார் 10 ஆண்டுகளாய் அவர் ஒரு பெரும் புள்ளியாகியிருந்தார். சில மாதங்களுக்குப் பின் இன்றுதான் அவரைப் போய்ச் சந்தித்தேன். வீட்டின்... வீடா அது..? பங்களா! பங்களாவின் பிரமாண்டத்தில், சொத்துப் பெறுமதி, வாழ்க்கை வசதி எல்லாம் தெரிந்தது.

அவர் உட்கார்ந்திருந்த நாற்காலியைச் சுற்றிச் சுற்றி வந்து, கோமாளிக்குறும்பு செய்யும் பேரனையும் சமாளித்துக்கொண்டே,



நான் சொல்வதையும் கேட்டுக்கொண்டார்.

அவரது கவனம் முழுவதையும் என்னால் கவர முடியவில்லையாயினும், நான் சொல்வதை நிறுத்தாமல் தொடர்ந்து சொல்லிக்கொண்டேயிருந்தேன்.

"என் வீழ்ச்சி நான் இம்மியும் எதிர்பார்க்காதது. அது சடுதியாக ஏற்பட்டதால், அதை ஒரு 'விபத்து' என்றே கருதினேன். எனது அசையும் சொத்து, அசையாச் சொத்து என்று இருந்த எல்லாவற்றையுமே விற்காமல் நான் மீள முடியாது என்ற நிலை வந்தபோது... என்ன செய்ய...! விற்றேன். அந்த விற்பனையின்போதும், எல்லாருமே தவித்த முயல் அடித்தார்கள். 'ஒஹோ!' என்று செல்வச் செழிப்பில் நான் மிதந்தபோது...சுற்றமென்றும் உறவென்றும் என்னைத் தழுவி நின்றவர்கள் எல்லாரும் இப்போது, செத்த மாட்டிலிருந்து உண்ணி கழருவதுபோல என்பார்களே... கழன்றுவிட்டார்கள். நட்புகளை நாடினேன். கஷ்டம் வந்தபோது நட்புப் பாராட்டுவது என்பது, ஒரு பாவப்பட்ட செயல் என்று, ஒதுக்கிவிட்டார்கள் அல்லது ஒதுங்கிக்கொண்டார்கள்.

இப்போது, நண்பரது கவனம் முழுமையாகவே பேரனின் குறும்பை அனுபவிப்பதில்தான் என்பது புரிந்தபோது, நான் வாயை மூடிக்கொண்டேன்.

தாய் வந்து சிறுவனைக் குளிப்பாட்ட இழுத்துச் சென்ற பின்பு, அவர் என்னிடம்:

"என்னுடைய நிலைமை இப்போ ரொம்பக் கஷ்டம். போன மாசந்தான் என் மூத்த மகன் 'டிஷ் அன்ரனா' ஏஜென்ஸி எடுக்கிறதுக்கு ஒரு புது ஜப்பான் கம்பெனியோட ஒப்பந்தத்துக்கு 7 மில்லியன் ரூபா கட்டவேண்டியிருந்தது. அதுக்கே 2 மில்லியன் வெளியிலதான் கஷ்டப்பட்டுத்தான் கொஞ்சங் கொஞ்சமா புரட்ட வேண்டியிருந்தது. அதால... இப்ப எனக்கு.. எல்லாமே கஷ்டம்..." என்றார்.

அவர் பேச்சிலிருந்து, நான் சொன்னவற்றை நிதானமாய் உள்வாங்கியிருந்தார் என்பது எனக்குப் புரிந்தது.

"என்னட்ட கேட்டிருந்தா 2 மில்லியன் கஷ்டமில்லாமல் எடுத்திருக்கலாமே...! நீங்கள்தான் ஏப்பவுமே என்னை எதுவுமே கேட்கிறதில்லையே" என்றேன்.

"அதுதான்... இப்ப நீங்கள் ரொம்ப வீழ்ச்சியாப்போய் ரொம்பவும் கஷ்டத்தில இருக்கிறதாச் சொன்னீங்களே!?"

"ஓ...! அது நான் புதுசா எழுதிற நாவல்ல ஒரு சுவாரஸ்யமான கட்டம்! எழுதினதை வாசிக்கிற மாதிரி உங்களிட்ட சொல்லிப் பாத்தன்...! நீங்கள்தான் பழம் பெரும் வாசகனாச்சே! விமர்சன அபிப்பிராயமா ஏதாவது சொல்லுவீங்களோ எண்டுதான்...! அதுசரி... அதாலதான் உங்களுக்கு இப்போ... இந்த 'ரொம்பக் கஷ்டம்' வந்துதா..?"

மனிதரின் குணத்தில் ஒன்று நாணம். அது அவருக்கும் வந்தது.

**கா. அருளானந்தம்**

# தொ(ல்)லை பேசி

"தொலைபேசி மணி அடித்தது."

"ஹலோ யார் பேசுறது?"

"சாந்தி இருக்கிறாங்களா?"

எரிச்சலோடு ஃபோனை வைத்துவிட்டு நிமிர்ந்தார் அருணாசலத்தார். இது ஒரு புதுக்கரைச்சல். யாரோ ஒருசில பெடியள், "சாந்தி இருக்கிறாங்களா?" என்று அடிக்கடி தொல்லை பண்ணுவார்கள். அவருடைய கடைசி மகள்தான் சாந்தி. இதிலே ஒரு ஆச்சரியம் என்னென்றால் சிலவேளை சாந்தியை தவிர்ந்த யாராவது தொலைபேசியை எடுத்தால் தொடர்பு துண்டிக்கப்படுவது தான்.



**உத்திரன்**

"இஞ்சரப்பா யாரோடை கதைக்கிறாள்? என்று ஒருக்கால் கேளுங்கோப்பா. நான் கேட்டால் சினேகிதப் பெட்டைகளோடை தான் எண்டுறாள். உங்கை ஒருக்காக பாருங்கோ அவளின்ரை சிரிப்பும், நெளிப்பும், எனக்கெண்டால் இது நல்லதாய்ப் படேல்லை." இது மனைவியின் நச்சரிப்பு.

போதாக்குறைக்கு கடைசி மகன் கரன். அவனுக்கு நேரம்காலம் தெரியாமலே ரெலிஃபோன் வரும். மற்றது எடுத்ததுக்கெல்லாம் ரெலிஃபோனை தூக்கிற மூத்தவன் திவாகர். ரெலிஃபோனிலை அரட்டை அரங்கம் நடத்தி முடிக்கிற மனிசிக்காரி.

சீ யார் கேட்டது இப்படி ஒன்றை. எந்த நேரமும் தீயணைக்கிற வண்டி வாற மாதிரி ஒரு சத்தம். பகலெல்லாம் வம்புக்கதை. நள்ளிரவானால் சாவுச் செய்தி. இப்பெல்லாம் வீட்டில சந்தோசமாய் ஒருத்தரோடை ஒருவர் பேசிக்கொள்வதென்பது கூட குறைவு தான்.

"அப்பா கட்டாயம் ஒரு ரெலிஃபோன் எடுங்கோ." என்று கனடாவில் இருக்கிற மூத்தவள் ஒரே கரைச்சல். 'கொமினிகேசனி'லை போய் காவல் நிற்க ஏலாதப்பா." என்று மனிசியின் நச்சரிப்பு. பேரப்பிள்ளையளோடை அடிக்கடி கதைக் வேணும் என்று அவருக்கும் கொஞ்சம் விருப்பம்தான். இப்படியாக அனைவரதும் வேண்டுகோளுக்கு இணங்க தொலைபேசி வீட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இப்ப என்னெண்டு கேட்டால்?

"கரன் ஃபோனை வை. கிரிக்கெட்டை கதைக்கிறதிற்கு உனக்கு ரெலிஃபோனே கிடைச்சது?"

"நீ மட்டும் என்ன வீட்டிலை ஒருதரும் இல்லாட்டி மணித்தியாலக் கணக்காய் பேசுவியே?"

"சரி சரி அக்காவும் தம்பியும் நிப்பாட்டுங்கோ." தருணத்திலை அவர்களுக்கிடையிலை சமாதானமும் பிடிக்க வேண்டி இருந்தது.

ரெலிஃபோன் சிணுங்கியது. கையில் எடுத்தார் அருணாசலத்தார். முன்னர் என்றால் நான் முந்தி, நீ முந்தி என்று தூக்குவார்கள். இப்போ அவர்தான் அடிக்கடி எழும்பி இருக்க வேண்டி இருந்தது.

"ஹலோ யார் பேசுறது?"

"சாந்தி இருக்கிறாங்களா மாமா?"

"மாமாவோ வையடா ஃபோனை."

தொலைபேசியை நிறுத்திவிடவேண்டியது தான். ஒரு முடிவோடு சேட்டை கையில் எடுத்தார். மீண்டும் தொலைபேசி சிணுங்கியது. கையில் எடுத்தார்.

"யாரடா நீ?"

"தாத்தா நான் ராகுலன். கனடாவிலை இருந்து பேசுறன்." அது அவருடைய பேரனின் குரல். ஒருதடவை உச்சிமுதல் உள்ளங்கால்வரை குளிர்ந்தது. தொலைபேசியின் அவசியத்தை மீண்டும் உணர்ந்தவராக பேரனோடு கதைக்கத் தொடங்கினார்.

# உருவகக் கதை

## பிழைப்பு

அந்த முருங்கை மரத்தின் கிளையில் அண்டங் காகம் ஒன்று சோகமாக உட்கார்ந்திருந்தது.

அவ்வழியாக வந்து கொண்டிருந்த நாய், தனிமையில் சோகத்தோடு உட்கார்ந்திருந்த காகத்தை பார்த்து குறும்புத்தனமாக சிரித்தது.

காகம் சிரிக்கவில்லை! சோகமாகவே இருந்தது.

நாய், கேட்டது "காகமே! காகமே! ஏன் சோகமாக இருக்கின்றாய்?"

"இந்த மனிதர்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை! அதைப்பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்!" என்றது காகம்.

"அப்படி என்ன புதிதாக மனிதர்களைப் பற்றி சிந்திக்கின்றாய்?" நாய் எதிர் கேள்வி கேட்டது.

"ஆறறிவு படைத்த இந்த மனிதர்கள் உன்னைப்போய் நன்றியுள்ள பிராணி என்கின்றார்களே! இவர்கள் எவ்வளவு விபரம் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள்? சாப்பாடு போடுபவனின் காலை சுற்றுகிறவன் தானே நீ! வீட்டுக்காறன் சாப்பாடு போடும்போது நீ வாலை குழைந்து கொண்டு சுத்தி சுத்தி வருவாய், இரவில் திருடன் வந்து அதைவிட ருசியாக இறைச்சி வகையான சாப்பாட்டை தந்தால் சாப்பாட்டிற்காக சந்தர்ப்பவாதியாகவும் மாறிவிடுவாய். உன்னை நன்றியுள்ளவன் என்கின்றார்கள்! எங்களைப்பார் கிடைக்கும் உணவு கொஞ்சமாக இருந்தாலும் எங்கள் உறவுகள் எல்லோரையும் அழைத்து பகிர்ந்துண்டு மகிழ்வோம். உங்கள் இனம் அப்படியா? எவ்வளவுதான் மிதமிஞ்சி உணவு இருந்தாலும் இன்னும் ஒரு நாயைக் கூட பக்கத்தில் வர விடமாட்டீர்களே! நீங்களா நன்றியுள்ளவர்கள்? ஆனால் இந்த மனிதர்கள் எங்களை மட்டும் தங்கள் அருகில் அண்டக்கூட விடுகின்றார்கள் இல்லை" என்று ஒரு பிரசங்கமே வைத்தது காகம்.

நாய்க்கோ பொல்லாத கோபம் வந்தது. "ஏய் காகமே! உன்னை யார்தான் அண்டுவார்கள்! நீ ஏமாந்தால் தட்டிப்பறிப்பாய் முன்பொரு முறை பாவம் ஒரு வயதான பாட்டியிடம் உன் இனம் ஒன்று வடையை களவாடியதை மனிதர்கள் இன்னமும் மறந்து விடவில்லை" என்றது நாய்.

உடனே காகம் சொன்னது "எங்கள் இனத்தில் ஒருவன் கிழவியிடம் வடையை எடுத்தது உண்மைதான்! ஏன் எடுத்தான்?



அதைபற்றி ஆராயாமல் சின்னக் குழந்தைகளுக்கெல்லாம் கதையாக சொல்லிக் கொடுக்கின்றார்கள் இந்த மனிதர்கள். காகம் கிழவியிடம் வடையை களவாடியது என்கின்றார்கள், பின்பு அந்த காகத்தை ஏமாற்றி நரி வடையை பறித்தது என்கின்றார்கள். மனிதர்கள் சின்ன வயதிலேயே குழந்தைகளிடம் எங்களைப்பற்றி தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்றார்கள். உண்மையில் என்ன நடந்தது என்பதையல்லவா சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும்."

"ஆமாம்! ஏன் கிழவியிடம் வடையை களவாடினீர்கள்?" நாய் புரியாமல் கேட்டது.

"நாங்கள் வடையை களவெடுக்கவில்லை பறித்தெடுத்தோம்! ஏன்? உலகத்தில் எதுவும் சரிவர பகிர்ந்தளிக்கப்படாவிட்டால் இல்லாதவர்கள் இருப்பவர்களிடம் அடித்து பறித்துக்கொள்வார்கள், என்பதை உலகத்திற்கு தெரியப்படுத்துவதற்காகத்தான் வடை பறிக்கப்பட்டது அதுதான் உண்மை. இந்த தத்துவத்தை விளக்குவதற்காக நாம் செய்து காட்டிய அச் செயலை மனிதர்கள் மறைத்து களவு, ஏமாற்றுதல் என்று கதை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அநியாயம்." என்றது காகம்.

நாய்க்கு காகம் கூறிய தத்துவம் புரியவில்லை. இருந்தாலும் மனிதர்கள் மேல் தனக்கு உள்ள விசுவாசத்தை விட்டுக்கொடுக்க மனமில்லாததால் காகத்தை பார்த்து "வள், வள்" என்று குரைத்தது.

**நந்தினி**

நாய் வேகமாகவும் சத்தமாகவும் குரைத்ததால் காகத்தின் குரல் நாயின் சத்தத்தில் அடங்கிப்போனது.

காகம் தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டது "குரைக்கத் தெரிந்தால் பிழைத்துக் கொள்ளலாம்."


படிப்பகம்

www.padippakam.com

# பூக்காடு

தருவது ரசிகன்

இலக்கிய நயம்



"படையெடுத்து வருகிறார்கள்
பகைவர்கள்!
உடைவாள் உருவுங்கள்
வீரர்காள்!"

முரசு அறைந்து
அழைப்பு விடுத்தது,
சிரசு குனியாத
பல்லவ அரசு!

இதயச் சந்திரன்
அழைப்பை ஏற்றான்!

கங்க நாட்டவர்
தங்கத் தமிழ் நாட்டை
பங்கம் செய்வதற்கு
கங்கணம் கட்டிவிட்டார்!

பொங்கு தமிழ் வீரம்
மங்கவில்லை என்று
சிங்கத் தமிழ் இளைஞர்
எங்கும் எழுந்திடுவீர்!

இதயச் சந்திரன்
வீதி வீதியாக
பிரசார பீரங்கியாய்
சுற்றினான்!

"கங்கர் படைகளை
நாங்கள் எதிர்ப்பதா?
விபரீதம் நிகழும்
வீண் அழிவு நேரும்!"

கங்கரின் கையாட்கள்
கைநீட்டி வாங்கிய
வெள்ளிக் காசுகளுக்காக
எள்ளி நகையாடினார்கள்!

"கங்கர் ஆட்சியில்
பொங்கும் சலுகைகள்!
பால் ஆறு ஓடும்!
தேன் ஆறு பாயும்!

பல்லவ அரசின் கீழ்
வாழ்ந்தது போதும்!
கங்கருக்கு வணங்கி
பங்கமின்றி வாழலாம்!

போரிட்டால் அழிவு வரும்
கும்பிட்டால் வாழ்வு வரும்!"

கங்கரின் அடிமைகள்
கதையளந்து திரிந்தன!

"பல்லவ நாடு
பணிந்து போகாது!
பகைக்கு பயந்து
குனிந்து நிற்காது!"

கங்கரின் அடிமைகளுக்கு
தர்ம அடி விழுந்தது!

"எங்கள் மண்ணில்
வீசும் தென்றலும்
எதிரிக்கு மட்டும்
தீயாய்த்தான் வீசும்!

எங்கள் மண்ணில்
பாயும் அருவியும்
எதிரிக்கு மட்டும்
காட்டாறாய் மாறும்!

எங்கள் மண்ணில்
கத்தும் குயிலும்
எதிரியின் செவியில்
கோட்டானாய் கூவும்!

எங்கள் மண்ணின்
ஒவ்வொரு புல்லும்
எதிரிக்கு முன்னால்
முள்ளாய்த்தான் மாறும்!

எங்கள் மண்ணின்
ஒவ்வொரு மரமும்
எதிரிக்கு எதிரான
அரணாய்த்தான் நிற்கும்!

ஆனால் நீங்கள் மட்டும்
எதிரிக்கு துணையான
உதிரிகள் ஆனீர்;

புல்லைவிட பூண்டைவிட
கல்லைவிட, முள்ளைவிட
உணர்ச்சிகள் அற்ற
உன்மத்தர் ஆனீர்!

தாயக உரிமைகளை
கூவி விற்கும்
பேய்களாய் மாறினீர்!
நாயாக மிதிப்பினும்
'நாயகரே' என்று வாழ்த்தி
எதிரியின் காலடியில்
சுருண்டு கிடக்கிறீர்!

எதிரியின் கையில்
பொம்மையாய்
இருப்பதை விட,
எங்கள் கையில் நீர்
துரும்பாக இருப்பினும்
பெரும் கௌரவம்!"

மக்கள் விளக்கியும்
கங்கரின் கையாட்கள்
மனம் மாறவில்லை!

இறுதியில் பல்லவ அரசு
கையாட்கள் அனைவரையும்
கைது செய்தது!
பலருக்கு சிறைவாசம்
சிலருக்கு சிரச்சேதம்!

மக்களின் கண்கள்
கலங்கவே இல்லை!

வெடித்தது யுத்தம்
விரிந்தது களம்!

கங்கர் படைகள்
வெள்ளமாய் புகுந்தன!

பல்லவர் படை
வெள்ளமாய் இல்லைத்தான்,
ஆனால் அவர்கள்
உள்ளத்தில் உரம் அதிகம்!

"நீதி நம்பக்கம்
மோதி வென்றிடலாம்!
வெற்றி வெற்றி என
மந்திரம் ஓதிடலாம்"
பல்லவ மன்னன்
ப்ரமேஸ்வரவர்மன் முழங்கினான்!

பல்லவ படையின்
முன்னணி தளபதி
வல்லவன் இதயச்சந்திரன்
எதிரணி அம்பினால்
உயிரினை இழந்தான்!

செய்தி கேட்டதும்
பல்லவ தேசம்
சோகத்தில் சுருண்டது!

பரமேஸ்வர மன்னரின்
உர நெஞ்சும் கசிந்தது!

களத்தில் இருந்து
புகழுடம்பு மீண்டது!
இறுதி அஞ்சலிக்காக
பல்லவம் திரண்டது!

மக்கள் அழுதனர்
மன்னனும் அழுதான்!

எதற்கும் அஞ்சாத
சிங்கம் மன்னன்!
அவனே அழுவதா?
மந்திரிகள் கலங்கினர்!

"வீரனே! தீரனே!
எங்கள் வெற்றிக்கு
வித்தான முத்தே!

'மானம் எங்கள்
உயிர்!' என்று
கானம் இசைத்தவனே!

உன் வித்தில்
பலர் வருவர்!
எம் வெற்றி
அவர் பெறுவர்!
நம் நெற்றி
ஒருபோதும்
பகைவர் கால்மீது
ஒற்றாது! தாளாது!
இது உறுதி!"

பரமேஸ்வர வர்மன்
வீரவணக்கம் செய்தான்!
விழிகள் அருவியாகின!

அப்போது எழுந்த
புலவர் சொன்னார்.

"தன் உயிரை
அவன் தந்தான்!
தன் மக்கள்
தன் தலைவன்
விழிகளிலே
அருவியினை வரவைத்தான்!
இதைவிடப் பேறு
வேறுண்டோ?!
இரந்து பெறத்தக்க
பேறு இதுவன்றோ!

உத்தமர்கள் விழிகள்
உகுக்கின்ற கண்ணீரால்
சாக்காடும்
பூக்காடு ஆகுமன்றோ!
அவன் மரணமும்
அழியாத சாசனமாய்"
ஆகுமன்றோ!

"புரந்தார் கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்து கோள் தக்கது உடைத்து!"

அதிகாரம்: 78, குறள்: 780

---

## சிந்தியா பதில்கள்

★ சிந்தியா! தமிழ்க் கட்சிகள் சலுகை ஆசை காட்டி தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்களே?

ஏ. கேசவன், யாழ்ப்பாணம்.

கிருபானந்த வாரியார் கூறிய குட்டிக் கதை:

ஒரு கணவனும் மனைவியும் காசிக்கு யாத்திரை போனார்கள். கணவன் மகா கருமி. காசியில் பூஜை நடத்திய பூசாரி அந்தக் கணவனிடம், "காசிக்கு வருபவர்கள் ஏதாவது ஒன்றை விட்டுவிடுவதாக விரதம் கொள்ள வேண்டும். அது தியாகத்துக்கு ஆதாரம். நீர் எதைவிடப்போகிறீர்?" என்று கேட்டார்.

அவனுக்கு தன்னிடமுள்ள எதையும் விடுவதற்கு மனமில்லை.

"நீங்கள் வழக்கமாய் சாப்பிடும் எதையாவது கைவிடலாம். கொத்தவரங்காய் வழக்கமாக யாரும் சாப்பிடமாட்டார்கள். அதனை விடுங்களேன்!" என்றார் பூசாரி.

"ஐயோ! அது மலிவாகக் கிடைப்பது. அதை எப்படி விடுவது?" என்றான் அவன்.

"புடலங்காய்?"

"ஐயோ! அது என் தோட்டத்தில் விளைகிறது. இலவசமாகக் கிடைப்பதை எப்படி விடுவது?"

"சரி, உம்மால் எதைவிட முடியுமோ அதனைக் கைவிடும்!" என்றார் பூசாரி.

கொஞ்சம் நேரம் யோசித்த கணவன்: "என்னால் நஷ்டமில்லாது விடக்கூடியது மானம்தான். அது எதுக்கு? விட்டுவிடுகிறேன்!" என்றான்.

பூசாரி அவன் மனைவியிடம்: "அம்மா! நீங்கள் எதனைக் கைவிடுகிறீர்கள்?" என்று கேட்டார்.

மனைவி கூறினாள்: "மனிதனுக்கு அடிப்படையே மானம்தான். அதையே விட்டுவிட்ட என் கணவனையே விட்டு விடுகிறேன்!" என்றாள்.

இதில் கணவன்தான் தமிழ்க் கட்சிகள். அந்த மனைவிபோல நடந்துகொள்ள வேண்டியவர்கள் தமிழ் மக்கள்.

✦✦✦

★ வன்னிப் பாதை இழுபறி தீருமா?

எஸ். பாண்டியன், வவுனியா.

சில தமிழ்க் கட்சிகளும், தம்மை நடுநிலையாளர்கள் என்று எதிலும் நழுவும் சில விமர்சகர்களும்தான் 'இழுபறி' என்று கூறி வருகிறார்கள்.

இரு பக்கமும் ஒன்றையொன்று வீம்பு பண்ணினால்தான் இழுபறி!

படையினர் தமது இராணுவ நலனின் அடிப்படையில் அணுகும் சமாச்சாரம் இது. அரசாங்கம் படையினருக்கு இதில் தீர்மானிக்கும் அதிகாரம் கொடுத்ததை முதலில் கண்டிக்க வேண்டும்.

பாதைத் திறப்பு என்று போரை ஆரம்பித்த படையினர், பாதையை மூடி வைத்துக் கொண்டு, புலிகளுடன் பேச்சுநடத்துவதாக காலம் கடத்தி மக்களை முடியுமானவரை பட்டினி போடப் பார்க்கிறார்கள்.

இதனை நேரடியாகச் சுட்டிக்காட்ட தமிழ்க் கட்சிகளுக்குத்தான் வக்கில்லை என்றால், அவற்றை விமர்சித்து தள்ளும் சில தமிழ் விமர்சகர்கள், பத்திரிகையாளர்கள்கூட நழுவல் போக்காக கருத்துக் கூறி வருவது துரதிஷ்டவசமானது.

✦✦✦

★ தேடியது கிடைக்காவிட்டால்...?

செல்வி கே. தேவி, மாத்தளை.

கிடைப்பதை வைத்துத் திருப்திப்பட வேண்டும்.

மனநோய் வைத்தியரிடம் ஓர் இளம் பெண் வந்து, "எனக்கு வாழ்க்கையே வெறுப்பாக இருக்கிறது. என் கணவருடைய முதன் மனைவி இறந்துவிட்டாள். நான் இரண்டாவது மனைவி. இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட்டிருப்பதால் எல்லோரும் என்னைக் கேலி செய்கிறார்கள்!" என்று புலம்பினாள்.

அதற்கு மனநோய் வைத்தியர்: 'உன் கணவருக்கு நீ முதல் மனைவியாக இல்லாமல் இரண்டாவது மனைவியாக இருப்பதற்கு சந்தோஷப்படு. நீ முதல் மனைவியாக இருந்தால் பரலோகம் போய் சேர்ந்திருப்பாய்!" என்றார்.

✦✦✦

★ சிந்தியா! வாழ்க்கையில் முன்னேற என்ன செய்ய வேண்டும்?

செ. கணேசமூர்த்தி, மட்டக்களப்பு.

பின்வரும் ஆறு குணங்களை உடன் இழக்கவேண்டும்:

1. அதிக தூக்கம்
2. மது மயக்கம்
3. பயம் 4. கோபம்
5. சோம்பல்
6. தாமதம்.

✦✦✦

★ சக்தியில் தமிழை விழுங்கி விழுங்கி செய்தி வாசிக்கிறாரே ஒரு பெண்மணி?

ஜோ. காந்திமதி, திருமலை.

அவர் மட்டுமா விழுங்குகின்றார்? அறிவிப்பாளர்களுக்குப் பயிற்சி கொடுக்க கவனம் எடுப்பது குறைவு. அதனால் தமிழை ஆளாளுக்கு சொதப்பித் துப்புகிறார்கள். வாயில் வாளோடு தோன்றியவர்கள் தமிழை மெல்ல அல்ல வேகமாகவே கொல்லுகிறார்கள்.

✦✦✦

★ மீனாவுக்கு போட்டியாக வந்துள்ள விந்தியா பிரகாசிப்பாரா?

பி. சிறிதரன், கொழும்பு-13.

பார்!

✦✦✦



'சங்கமம்' படத்தில் விந்தியா

★ கார்த்திக் ஜோடியாக பொருத்தமானவர்கள் ரம்பாவா? ரோஜாவா?

கே. திலகன், தெகிவளை.

அவருடன் யார் ஜோடி சேர்ந்தாலும் வம்பாமே!

✦✦✦



'உனக்காக எல்லாம் உனக்காக' படத்தில் கார்த்திக்-ரம்பா

★ சந்தர்ப்பவாதம் என்றால் என்ன?

க. சிவரஞ்சன், திருமலை.

'ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக' என்று நேற்று முழங்கிய தமிழ்க் கட்சிகள் இன்று அம்மையாருக்கு தக்கபடி தத்தித்தோம் போடுவது! இப்படி பல உதாரணங்கள் சம காலத்தில் உண்டே!

✦✦✦

★ இனப் பிரச்சனை தீர்ந்தால்தான் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கலாம் என்று கூறுகின்றனரே;

பொ. சற்குணராசா, மட்டக்களப்பு.

ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு முடிவே கிடையாது என்பதை இதனைவிடத் தெளிவாகக் கூற முடியாது!

✦✦✦

★ 'தளபதி கோட்டை' பார்த்தீர்களா?

கா. வீரையா, பதுளை.

பூலானின் கதையைத் தழுவி ஒப்பேற்றியுள்ளார்கள். மோசம் என்றில்லை!

✦✦✦

★ சிந்தியா! மண்டை காய்வது போல ஒரு கதை?

எம். சசிரேகா, கல்கிசை.

"நீ என்னைக் கல்யாணம் செய்து கொள்வாயா என்று நான் உன்னிடம் கேட்டால், ஆமாம் என்று நீ சொல்வாயா?' என்று அவன் கேட்டான். "நீ என்னைக் கல்யாணம் செய்து கொள்வாயா? என்று நீ என்னைக் கேட்டு, அதற்கு நான் ஆமாம் என்று சொன்னால், நீ என்னைக் கல்யாணம் செய்து கொள்வாயா?' என்று அவள் பதில் கேள்வி கேட்டாள்.

✦✦✦

★ கணேஷ்-வசந்த் தொடர் பார்த்தீர்களா?

ச. செல்வி, கொழும்பு-09.

சன் தொலைக்காட்சியில் தற்போது பல அறுவைத் தொடர்கள். நேரம் விரயம்! கணேஷ்-வசந்த் சற்று மாறுதல். முதல் வாரமே நன்றாக இருந்தது! சுஜாதா எழுதிய 'இதையும் ஒருமுறை' என்ற கதைதான் முதலில் எடுக்கப்படுகிறது! கணேஷ் பாத்திரத்திற்கு சுரேஸ் நல்ல தெரிவு! சுகாசினியின் இளமை ஆச்சரியம்!

✦✦✦

★ கோவணத்தோடு செல்லுமாறு மீனவர்களுக்கு உத்தரவு விடப்பட்டதை தமிழ்க் கட்சிகள் கண்டிக்காத காரணம் யாது?

ம. ரவிக்குமார், யாழ்ப்பாணம்.

கோவணத்தையும் உருவாமல் விட்டது தவறு என்று படையினரைக் கண்டிக்காமல் விட்டார்களே! அதுவே போதும் ரவி.

✦✦✦

★ தமிழ்க் கட்சிகளுக்குள் இன்றுள்ள முக்கிய வேறுபாடு என்ன?

அ. ஜாயிஸ், நீர்கொழும்பு.

தலைமையில் உள்ளவர்களது முகங்கள்! மற்றப்படி அகங்கள் ஒன்றுதான்!

✦✦✦

★ சமீபத்தில் இரசித்த புதுக்கவிதை?

பி. இக்பால், புத்தளம்.

**சவப்பெட்டி**

"மனிதா! இறந்தது
நீதானே!
என்னையும் ஏன்
புதைக்கிறார்கள்?"

---

## ஸ்போர்ட்ஸ்

### போல் ரீபிள் ஓய்வு

அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் போல் ரீபிள் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இருப்பினும் தற்போது விளையாடிவரும் அவுஸ்திரேலியாவில் உள்ள விக்டோரியா கிளப்பிற்காக தொடர்ந்து விளையாடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் நடைபெறவிருக்கும் முத்தரப்புப் போட்டியில் விளையாடும் அவுஸ்திரேலிய அணியில் போல் ரீபிள் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 33 வயதான இவர் இந்த உலகக் கோப்பைப் போட்டிகளில் 7 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இதுவரை 35 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள போல் ரீபிள் 104 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். சிறப்பான பந்து வீச்சு 71 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்கள். துடுப்பாட்டத்தில் 955 ஓட்டங்களை எடுத்துள்ளார். அதிகபட்ச ஓட்டம் ஆட்டமிழக்காமல் 76.

ஒருநாள் போட்டிகளில், 98 ஆட்டங்களில் பங்கேற்று 106 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். சிறப்பான பந்து வீச்சு 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்கள். இவை தவிர 134 முதல்தர டெஸ்ட் போட்டிகளில் 425 விக்கெட்டுக்களையும், 2739 ஓட்டங்களையும் எடுத்துள்ளார்.

### இந்தியா விளையாடும் போட்டிகள்

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்குப் பின் இந்திய அணி பல்வேறு நாடுகளுக்குச் சென்று போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளது. ஒகஸ்ட் 22 இலங்கை வந்து முத்தரப்பு போட்டிகளில் விளையாடுகிறது. இது முடிந்ததும் சிங்கப்பூர் செல்கிறது. சிங்கப்பூர் போட்டிகள் முடிவடைந்ததும் கென்யா செல்லவுள்ளது.

சிங்கப்பூரில் மேற்கிந்தியத் தீவுகள், ஸிம்பாப்வே ஆகிய அணிகளுடன் முத்தரப்பு போட்டிகளில் இந்தியா விளையாடவுள்ளது. இப்போட்டிகள் செப்டெம்பர் 2ம் திகதி முதல் 7ம் திகதி வரை நடைபெறவுள்ளது. ஒவ்வொரு அணிகளும் ஏனைய அணிகளுடன் ஒவ்வொரு முறை மோதும். இதன்பின் புள்ளிகள் அடிப்படையில் முதலிரு இடங்களைப்பெறும் அணிகள் இறுதிப்போட்டியில் மோதும்.

சிங்கப்பூர் போட்டிகள் முடிவடைந்ததும் இந்தியா, கென்யா செல்கிறது. அங்கு இந்தியா, ஸிம்பாப்வே, கென்யா, தென்னாபிரிக்கா ஆகிய 4 நாடுகள் கலந்துகொள்ளும் போட்டிகளில் விளையாடவுள்ளது. இப்போட்டிகள் செப்டெம்பர் 24ம் திகதி முதல் ஒக்டோபர் 1ம் திகதி வரை நடைபெறவுள்ளன.

சிங்கப்பூரில் நடைபெறும் முத்தரப்பு மற்றும் கென்யாவில் நடைபெறும் 4 நாடுகள் போட்டிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

**முத்தரப்பு போட்டி விவரம்:**

செப்டெம்பர் 02- மேற்கிந்தியத்தீவுகள் எதிர் ஸிம்பாப்வே
செப்டெம்பர் 04- இந்தியா எதிர் ஸிம்பாப்வே
செப்டெம்பர் 05- இந்தியா எதிர் மேற்கிந்தியத்தீவுகள்
செப்டெம்பர் 07- இறுதிப்போட்டி.

**4 நாடுகள் பங்குபற்றும் போட்டி விவரம்:**

செப்டெம்பர் 24- கென்யா எதிர் ஸிம்பாப்வே
செப்டெம்பர் 25- கென்யா எதிர் இந்தியா
செப்டெம்பர் 26- இந்தியா எதிர் தென்னாபிரிக்கா
செப்டெம்பர் 27- தென்னாபிரிக்கா எதிர் ஸிம்பாப்வே
செப்டெம்பர் 28- இந்தியா எதிர் ஸிம்பாப்வே
செப்டெம்பர் 29- கென்யா எதிர் தென்னாபிரிக்கா
செப்டெம்பர் 01- இறுதிப்போட்டி

### கப்டனுக்கு காயம்

இங்கிலாந்துடன் நியூஸிலாந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்டில் இங்கிலாந்தும், இரண்டாவது டெஸ்டில் நியூஸிலாந்தும் வெற்றி பெற்று 1-1 என்ற சமநிலையில் உள்ளன.

இரண்டாவது டெஸ்டின்போது இங்கிலாந்து அணியின் கப்டன் நஸீர் ஹுஸைனுக்கு காயம் ஏற்பட்டது. நியூஸிலாந்து வீரர் அடம் பரோரே அடித்த பந்தை தடுக்க முனைந்த நஸீர் ஹுஸைனின் கைவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

நஸீர் ஹுஸைன் இன்னும் 3 வாரங்கள் ஓய்வில் இருக்க வேண்டும் என மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதனால் நியூஸிலாந்துடன் நடக்கவிருக்கும் 3 வது டெஸ்டில் இவர் கலந்துகொள்ள மாட்டார். இவருக்குப் பதிலாக கிரஹாம் தோர்ப் இங்கிலாந்து அணிக்குத் தலைமை தாங்குகிறார்.

### இவர்தான் அவர்



நஸீர் ஹுஸைன்



படிப்பகம்

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 11

# புதுமைகள் பல புரிந்த புனிதர்



ஆண்டவரிட்ட கட்டளைப்படி யூத இனமக்களை வழிநடத்தும் பொருட்டு அவதரித்த இயேசுபிரான், அவருடைய போதனைகள், உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானவையாகவே இருக்கவேண்டும் என்றே கருதினார். அதனால்தான் அன்று அவர் அருளிய வாக்குகள் அத்தனையும் என்றும் அழியா மொழியாக விளங்குகின்றன.

இயேசுபிரானின் ஆணைக்குக் கட்டுப்பட்ட பேய்கள் பன்றிகளில் புகுந்து, பின்னர் பன்றியுடன் கடலுள் வீழ்ந்து மறைந்தொழிந்தன. இக்காட்சியைக் கண்ணாரக் கண்ட பன்றி மேய்ப்போர், ஊருக்குள் சென்று தாம் கண்ட காட்சிகளை ஊர் மக்களிடம் விவரித்தனர். இதன் காரணமாக அயலூர்களிலிருந்தெல்லாம் மக்கள் திரண்டு வந்து இயேசுபிரானை மொய்த்துக்கொண்டனர்.

தமது சீடர்களும், பெருவாரியான மக்களும் புடைசூழ இயேசுபிரான் அடுத்த ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார். அப்போது அந்த ஊரின் நுழைவாயிலிலிருந்த சுங்கச்சாவடி யில் மத்தேயு அமர்ந்திருந்தார். இயேசு பெருமானுடைய பெருமைகளை இயல்பாகவே ஏற்கனவே அறிந்திருந்தவர் மத்தேயு. இவரும் ஒரு திருத்தூதரே என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவர்.

இயேசுபிரானை மத்தேயுவும் அன்றுதான் முதன் முதலாகக் காண்கிறார். இருப்பினும் இருவருக்குமிடையில் தெய்வீகமானதொரு தொடர்பு இருந்துள்ளது புலனாகின்றது. இயேசுவைக் கண்டதும் மத்தேயு பயபக்தியுடன் எழுந்து வணங்கினார். புன்முறுவல் பூத்தவராக இயேசு, மத்தேயுவைப் பார்த்து, "என்னைப் பின்பற்றி வாரும்!" என்றார். மந்திரத்தால் கட்டுண்டவர் போல மத்தேயு பின் தொடர்ந்தார். அன்று மட்டுமல்ல, மத்தேயு என்றுமே இயேசுபிரானை எப்பொழுதும் தொடர்ந்திருக்கிறார் என்றே கூறத் தோன்றுகிறது. இதனால்தான் இயேசுபிரானுடைய அருட்பொழிவுகளைத் தொகுத்து நூலாக்கி, என்றென்றும் நிலைக்க வைத்திருக்க முடிகிறது.

மத்தேயு, இயேசுபிரானையும் சீடர்களையும் தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்று விருந்தளித்தார். இவ்விருந்தில், இயேசுவைப் பின்பற்றிவந்த பலரும் கலந்துகொண்டனர். வரி அறவிடுவோரும் பல கொடுமைகளைப் புரிந்த பாவிகள் சிலரும் இயேசுபெருமானுடன் சமபந்தியில் அமர்ந்து உணவினை உண்டனர். இதனைப் பார்த்த பரிசேயர்களுக்குப் பொறுக்கவில்லை.

### மருத்துவம் யாருக்கு?

இயேசுபெருமானுடைய காதில் படும்படியாக, அவருடைய சீடர் ஒருவரிடம், "உங்கள் போதகர் இத்தகையோருடன் சரிசமமாக அமர்ந்து உணவு கொள்கிறது சரியா?" என்று வினவினர்.

இயேசுபெருமான் பரிசேயர்களைப் பார்த்து, "நேர்மையாக நடப்பவர்களை நான் வழிநடத்த வேண்டிய அவசியம் எதுவுமில்லையே! பாவிகளுக்குத்தான் மருத்துவமும் மருந்தும் தேவைப்படும். நோயற்றவர்களுக்கு யார் மருந்து கொடுக்கப் போகிறார்கள்? இதன் அர்த்தத்தை இனிமேலாவது புரிந்து கொள்ளுங்கள்!" என்றார்.

*ஆட்சியிலமர்ந்தவர்களுக்காக வரி வசூலிப்போர் பெரும்பாலும் சற்று முரட்டுத்தனமாகவே அக்காலத்தில் நடந்துகொண்டிருப்பார்கள் என்றே கருத வேண்டியிருக்கிறது. அதனால்தான் அவர்கள் மக்கள் மத்தியில் ஓரளவு தரக்குறைவாகக் கணிக்கப்பட்டுள்ளனர் என்று கருதவேண்டியுள்ளது. அன்று மட்டுமல்ல, இன்றும் வரி அறவிட நமது வாசலுக்கு வரும் நகரசபை வரி அறவிடும் ஊழியரை வெறுப்போரையும் நாம் காண்கிறோம்.*

இயேசுபிரானிடம் பரிசேயர்களும் ஏனையோரும் வந்து, தாங்கள் அடிக்கடி நோன்பு நோற்பதாகவும் இயேசுபிரானின் சீடர்கள் அவ்வாறு நோன்பு இருக்காமைக்கான காரணம் என்னவென்று வினவினர். மிக அருமையான உவமைகள் மூலமாக இயேசுபிரான் அவர்களுக்கு விளக்கமளித்தார். அது மட்டுமல்லாமல் தாம் விரைவில் பிரிந்துசெல்ல வேண்டிய காலம் வந்துவிட்டதாகவும் மறைமுகமாக எடுத்துரைக்கிறார்.

*"மணமகன் தங்களுடன் இருக்கும்போது மணவிருந்துக்காக வந்திருப்பவர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் காலம் வரும்; அப்போது அவர்களும் நோன்பிருக்க வேண்டி வரும். மேலும் எவருடைய பழைய ஆடை கிழிந்துவிட்டால் அதில் புதிய ஆடையைப் பொருத்தி ஒட்டுப்போடுவதில்லை. அவ்வாறு செய்தால் புதிய ஆடையும் கிழிந்து போய்விடும்! அதேபோன்று பழைய தோற்பைகளில் புதிய திராட்சை ரசத்தை ஊற்றிவைப்பதில்லை. அவ்வாறு ஊற்றினால் அப்புதுப்பை வெடித்துவிடும். புதிய திராட்சை ரசத்தைப் புதிய தோற்பைகளில்தான் ஊற்றிவைப்பார்கள். அப்போது இரண்டுமே வீணாகப்போவதில்லை."*

மிக எளிய உவமைகளைக் கூறியே எந்தச் சந்தேகத்தையும் தெளிவாக்கும் சிறப்பினை இயேசுபிரானுடைய திருவாக்கியங்களில் காணலாம்.

## இராஜகுமாரன்

### இறந்தவள் எழுந்தாள்

ஒரு தொழுகைக் கூடத்தின் முன்புறத்தில்தான் இயேசுபிரான் அப்போது இருந்தார். அத்தொழுகைக் கூடத்தின் தலைவர் அழுது புலம்பியவண்ணம் இயேசுவிடம் ஓடிவந்தார். தனது மகள் அப்போதுதான் இறந்துவிட்டதாகவும், இயேசுபிரான் அவளுடைய உடம்பில் கைவைத்தாலே மரணமான தன் மகள் உயிர் பெற்று விடுவாள் என்று தான் நம்புவதாகக் கூறி, தன்னுடன் தன் வீட்டுக்கு வந்து மகளை உயிர்ப்பித்துத் தருமாறும் வேண்டிக்கொண்டார்.

இயேசுபிரான் அத்தலைவருடன் அவர் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் ஒரு பெண் அவரை நோக்கி ஓடோடி வந்தாள். இயேசுபிரானின் முன்னிலையில் தரையில் வீழ்ந்து வணங்கி, அவருடைய அங்கியைத் தொட்டாள். களைத்து, மெலிந்து குற்றுயிர்ப் பெண்ணைப்போல ஓடி வந்த அப்பெண், இயேசுபிரானின் அங்கியைத் தொட்டதும் புத்துயிர் பெற்றவள்போல் எழுந்து நின்றாள். அப்பெண் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து இரத்தப்பெருக்கு நோயினால் அவதியுற்றிருந்தாள். இயேசுபிரானின் அற்புதச் செயல்களைக் கேள்வியுற்று, அவருடைய ஆடையைத் தொட்டால்போதும்; தன்னுடைய கொடியே நோய் அகன்றுவிடும், என்று பெரு நம்பிக்கையோடு இருந்தவள்.

இயேசு அப்பெண்ணைப் பார்த்து, "மகளே! துணிவோடு இரு! உனது நம்பிக்கை வீண்போகவில்லை! நீ குணமடைந்துவிட்டாய்!" என்றார். உண்மையில் அதே கணத்தில் அவளுடைய பன்னிரண்டு ஆண்டுகால நோய் அகன்றது.

தொழுகைக் கூடத் தலைவரின் வீட்டில் இறந்த பெண்ணின் சடலத்தை இடுகாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. குழல் ஊதுவோர், பறை மேளம் கொட்டுவோர் ஆகியோர் இறுதி யாத்திரைக்கான ஆயத்தங்களைச் செய்வோரும் அங்கு திரளாக நின்றிருந்ததைக் கண்ட இயேசுபிரான், அவர்களை விலக்கிக்கொண்டு தலைவரின் வீட்டுக்குள் சென்றார். அங்கு நின்றவர்களிடம், "விலகிப்போங்கள்! சிறுமி இறக்கவில்லை; உறங்குகிறாள்!" என்றார்.

இயேசுபிரானின் வார்த்தைகளைக் கேட்டவர்கள் அனைவரும் நகைத்தனர். அவர்கள் அனைவரையும் கலைந்து செல்லுமாறு மீண்டும் கேட்டுவிட்டு, வீட்டினுள் சென்று படுக்கையில் கிடந்த சிறுமியின் கையைப் பற்றினார். தூக்கத்திலிருந்து அப்போதுதான் கண்விழிப்பது போன்று அச்சிறுமி உயிர்பெற்றெழுந்தாள். தொழுகைக் கூடத் தலைவரும் அவர் மனைவி மற்றும் உறவினரும் பெரு மகிழ்ச்சியடைந்தனர். இந்தச் செய்தி காட்டுத் தீபோல் எங்கும் பரவியது.

### பார்வை பெற்றனர்

கண் பார்வையற்ற இருவர் தட்டுத்தடுமாறி இயேசுபிரானின் அருகே வந்து சேர்ந்தனர். தாவீதின் திருக்குமாரரே எங்கள் மீது இரக்கம் காட்டும்." என்று பிரலாபித்தனர். அவர்களைப் பார்த்து, "உங்களுடைய பார்வையை என்னால் மீட்டுத்தர முடியும் என்று நம்புகிறீர்களா?" என்று வினவினார். அவர்கள், "ஆம் ஐயா!" என்று உறுதியாகக் கூறினர். அவர்களுடைய கண்களைத் தனது கையால் தொட்ட இயேசுபிரான், "பயப்படாதீர்கள்! உங்கள் நம்பிக்கை வீண்போகாது!" என்றார். அவர்கள் இருவருடைய கண்களும் உடனடியாகவே பார்வை பெற்றன. குழந்தைகள் போல் துள்ளிக்குதித்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

### பன்னிரு திருத்தூதர்

இயேசுபிரான் முதலாவதாக, ஓடத்திலிருந்த வண்ணம் மீன் பிடித்துக்கொண்டிருந்த பேதுரு என்ற சீமோனையும் அவர் சகோதரர் அந்திரேயாவையும் தன்னைப் பின்பற்றி வருமாறு கூறி, சீடர்களாக்கினார். பின்னர் யாக்கோபு, அவருடைய சகோதரர் யோவான், பிலிப்பு, பர்த்தலமேயு, தோமா, மத்தேயு, அல்பேயுவின் மகனான யாக்கோபு ததேயு, சீமோன் மற்றும் யூதாசு இஸ்காரியோத்து ஆகியோரையும் சீடர்களாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார். இறுதியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட யூதாசு இஸ்காரியோத்து என்பவரே இலஞ்சம் வாங்கிக்கொண்டு இயேசுபெருமானை அவருடைய எதிரிகளிடம் காட்டிக்கொடுத்தான். தன்னைக் காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தை யூதாசு செய்வான் என்பதை முன்னதாகவே இயேசு தெரிந்து வைத்திருந்தார் என்பதில் சந்தேகமே இல்லை.

தமது சீடர்களைத் தம்மிடம் அழைத்து சீடர்களுக்கு தனியான போதனைகளை அளித்தார். துன்பத்தில் உழல்பவர்களுக்கு நல்வழி காட்டவும், நோயுற்றவர்களுக்குச் சுகமளிக்கவும், பேய் பிசாசுகளின் தொல்லைகளால் அல்லல் படுவோருக்கு, அவர்களைப் பிடித்த பேய் பிசாசுகளை ஓட்டவும் உரிய வழிமுறைகளைச் சொல்லித் தந்தார். இஸ்ரயேல் மக்கள் எங்கெங்கெல்லாம் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் சென்று, வழி தவறிப்போன ஆடுகளை வழிப்படுத்துவதுபோல அவர்களுக்கு நற்போதனைகளை ஊட்டுமாறு தமது சீடர்களைச் செல்லுமாறு இயேசுபிரான் கூறினார்.

அயலிலுள்ள நாடுகளுக்கும் நகர்ப்புறங்களுக்கும் நல்ல செய்திகளைக் கூறப்புறப்பட்ட சீடர்கள் பன்னிருவருக்கும் பல போதனைகளையும் போதித்து அனுப்பிய இயேசுபிரான், அவர்களுக்கு நேரும் இடர்ப்பாடுகள் பற்றியும் முன்னெச்சரிக்கை செய்திருந்தார். இடர்களை எவ்வாறு களையவேண்டும் என்பதற்கான ஆலோசனைகளையும் கூறினார். ஆண்டவருடைய கட்டளைகளை ஏற்க மறுப்பவர்கள் எவ்வாறு தண்டிக்கப்படுவார்கள் என்பதனையும், ஏற்றுக்கொள்பவர்கள் எத்தகைய நன்மைகளை அடைவார்கள் என்பதனையும் எடுத்துரைத்தார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 08 விடை: மத்தேயு**

**பரிசு பெறுவோர்:**

1. **பி.வி. ஆனந்த்,** 49, ஜெயசூரிய மாவத்த, கந்தானை.
2. **பி. ஞானகுமார்,** லபுக்கெலை மே/பி, லபுக்கெலை-நு.எலிய.
3. **ஆர். லெட்சுமி,** யகல்ல வீதி, 2-ம் ஒழுங்கை, கெகிராவ.
4. **ம. மதிவண்ணன்,** 5/3ஏ, அடப்பங்குளம், செட்டிக்குளம், வவுனியா.
5. **கே. அரசேஸ்வரன்,** கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

**திருமறை [பு.ஆ] 11 வினா :-** இயேசு பிரான் தேர்ந்தெடுத்த இறுதிச் சீடர் யார்?

ஆகஸ்ட் 07 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.11 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# பயோடேட்டா

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜனாதிபதி ஆட்சிமுறை |
| தந்தை பெயர் | : | ஜே. ஆர். ஜயவர்த்தன |
| தொழில் | : | சகல அதிகாரங்களையும் ஒருவரிடம் குவிப்பது. |
| நண்பர்கள் | : | நேற்று ஐ.தே.கட்சி இன்று பொ.ஜ.முன்னணி. |
| எதிரிகள் | : | நேற்று பொ.ஜ.முன்னணி இன்று ஐ.தே.கட்சி என்றும் ஜே.வி.பி. |
| சாதனை | : | எதிர்த்தவர்களையும் காந்தமாகக் கவர்ந்தது! |
| சோதனை | : | கிட்டாதவர்கள் எட்டப் போகுமாறு திட்டித் தீர்ப்பது! |
| நம்புவது | : | தீராத இனப்பிரச்சனை தொடரும் யுத்தம். |
| வெறுப்பது | : | பாராளுமன்ற ஆட்சியை! |
| எதிர்காலத் திட்டம் | : | எதையாவது கூறி தாக்குப்பிடிப்பது! |

# உற்றுப் பாருங்கள்




கொஞ்சநேரம் உற்றுப்பார்த்தால் உங்களுக்கே தெரிந்துவிடும். உற்றுப் பார்த்துத் தெரியாதவர்கள் சற்று யோசித்தால் புரிந்துவிடும்.

# யார் இந்த கட்சித் தலைவர்?

*தமிழ்க் கட்சித் தலைவர்களில் ஒருவரான திருவாளர் 'எக்ஸ்' தினமும் மூன்று அறிக்கைகளாவது எழுதுகிறாராம். ஒரு அறிக்கை குறைந்தால் மறுநாள் அதையும் சேர்த்து எழுதிவிடுகிறார்.*

*உட்கட்சி பிரச்சனை தலைவலியாக மாறியிருப்பதால், தன்னை ஒரு அரசியல் விவேகியாக காண்பிக்க பலத்த முயற்சி செய்து வருகிறார்.*

*கட்சியின் நீண்டகால உறுப்பினர்கள் அவரது சுயரூபத்தை அறிந்துகொண்டு விட்டதால், தன் தனிப்பட்ட நண்பர்களையும், நெருங்கிய உறவினர்களையுமே முன்னால் கொண்டுவர அரும்பாடுபட்டு வருகிறார். மூத்த உறுப்பினர்கள்மீது அவதூறுகள் கூறிவருகிறாராம்.*

*அண்மையில் வெளியான வெளியீடு ஒன்றில் அவரது புகைப்படம் இடம்பெற வேண்டும் என்று கண்டிப்பாக கூறி இடம்பெறச் செய்தாராம்.*

*கட்சிக்குள் அவருக்கு போட்டியாக உள்ளவர்கள் மாநாடு நடத்துவதற்கு அனுமதி கேட்கிறார்கள். அவரோ மறுத்து வருகிறாராம்.*

*கொழும்பிலேயே கூடாரமடித்து இருந்தவர் தன் நாற்காலிக்கு ஆபத்து என்றதும் வடக்கு-கிழக்கு எங்கும் சுற்றுலா போய் வந்துள்ளாராம்.*

*தலைமைக்கு ஆபத்து என்றால் தலையை கொடுத்து பாடுபடும் இந்த சுறுசுறுப்பு ஏனைய சந்தர்ப்பங்களில் இல்லையே என்று உறுப்பினர்கள் மூக்கில் விரலை வைக்கிறார்களாம்.*

# இப்படியும் அறிக்கை வரும்

*பாலியல் வல்லுறவுகளை பெரிதுபடுத்தி தமிழ் மக்களை குழப்பும் சக்திகளையிட்டு விழிப்பாக இருக்க வேண்டும்.*

*கொசோவாவில் எத்தனையோ பெண்களை வல்லுறவு புரிந்தனர். அந்தளவு எண்ணிக்கையில் இன்னமும் இங்கு வல்லுறவுகள் நிகழவில்லையே. பின்னர் ஏன் நாம் கொதிக்க வேண்டும்?*

*வியட்நாமில் அமெரிக்க படைகள் பல்லாயிரம் வியட்நாமியப் பெண்களை வல்லுறவு புரிந்தன. இங்கு என்ன கணக்கு என்று யாருக்காவது தெரியுமா?*

*அரசாங்கம் மிகவும் கருணையுள்ளது. நிவாரணம் தருவதற்கு இரங்கியுள்ளது. வேலை வாய்ப்பும் குறைந்தது பத்துப் பேருக்காவது தருவதற்கு இணங்கியுள்ளது. சமாதான நீதிவான் பட்டங்களும் வழங்கியுள்ளது. இத்தனை கருணையுள்ளபோது பாலியல் வல்லுறவுகளை எண்ணிக் கவலைப்படலாமா? என்ன வேறெங்கும் நடக்காத நிழ்வுகளா இங்கு நடந்துவிட்டன?*

*மேலும் அரசுடன் ஒத்துழைப்பது மூலமே வல்லுறவுகளை குறைத்து மெல்லுறவுகளுக்கு வழிவகுக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*தமிழர்களுக்கு வயிற்றை நிரப்பும் நற்சிந்தனை மட்டும் இருந்தால் போதும். வல்லுறவுகள் பற்றி வருத்தப்படுவது முட்டாள்தனம். நிர்வாணமாக இருப்பினும் நிவாரணமே முக்கியம் என்பதை மறப்பது எவ்வகையிலும் விவேகமாகாது.*

*இவ்வாறு அறிக்கைவிடும் ஒப்பற்ற யோசனை சிலருக்கு தோன்றியுள்ளதாக அறியப்படுகிறது.*


காதிலை பூ கந்தசாமி

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


## நிறம்



↑ 'நீல அழகி' என்றழைக்கப்படும் இம்மீன் வீட்டில் தொட்டிகளில் வளர்ப்பதற்கு உகந்த இனம்தான். இருப்பினும் ஒரே அளவு, ஒரே வயதுடையவையாக இருந்தால் அவை ஒன்று சேர்ந்து அதிக பிணக்குகள் இல்லாது வளரும்.


ஆனால் இதே இன மீனில் சற்றுச் சிறிய மீனாக இருக்குமானால் பெரிய மீன் சிறியவற்றை அழித்தொழித்துவிடவே முயலும். இந்த ரக மீன்கள் இனப்பெருக்கத்தில் தீவிரமானவை என்று கருதுவதால் பலரும் இவற்றை வளர்ப்பதில் நாட்டம் காட்டுவார்கள்.

இந்நீல அழகிகள் வளர்க்கப்படும் தொட்டிகளுள் வேறு ரக மீன்களையும் சேர்த்து வளர்க்க விரும்பினால் அது நிச்சயமாகப் பலனளிக்காது. முரட்டுத்தனமான 'நீல அழகி' மற்ற மீனை அடித்துக் கடித்துக் குதறிவிடும்.




ஸ்ரீ கல்யாணி ஜுவலர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


## மணமகன்



→ இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே. இவரது பந்தில் 240 விக்கெட்டுகள் இதுவரை சாய்ந்துள்ளன. சிறந்த வீச்சு: 6-12. ஆனால் இவரையே சாய்த்துவிட்டார் சேத்னா. அவர்தான் கும்ளேயின் மனைவி.

ஜூலை மாதம் முதலாம் திகதி சேத்னாவும் கும்ளேயும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டனர். உனக்கு நான். எனக்கு நீ. அதே நாள் இன்னொரு பந்து வீச்சாளரான ஸ்ரீநாத்துக்கும் திருமணம் நடந்தது இன்னொரு சிறப்பு.

17.10.1970இல் பெங்களூரில் பிறந்தவர் கும்ளே.

ஒருநாள் போட்டிகளிலும், டெஸ்ட் போட்டிகளிலும் அதிக விக்கெட்டுக்களை கொய்த முதல் சுழற்பந்து வீச்சாளர் இவர்தான்.

↑ இப்போது கும்ளேயுடன் ஷேன் வோர்னும் சேர்ந்துள்ளார்.

சென்ற உலகக் கோப்பை போட்டியில் அதிக விக்கெட்டுக்களை சாய்த்தவரும் கும்ளேதான். 14 விக்கெட்டுக்கள். இம்முறை உலகக் கோப்பை போட்டிகளில் 8 விக்கெட்டுக்கள்.

மேலும் இவரது சுழற்பந்து வீச்சு மெருகேறும் என்கிறார்கள். இந்திய அணிக்கு பல சுழற்பந்து வீச்சாளர்கள் சமீபகாலங்களில் வந்தனர், போயினர். இவர் மட்டுமே தொடர்ந்து தாக்குப் பிடிக்கிறார்.

## சாகசம்



← சாதாரண சைக்கிளை ஓட்டுவதற்கு நிதானம் அவசியம். இரு சக்கரங்கள் மட்டும் நிலையாக நிற்பது முடியாத காரியம். மூன்றாவது சக்கரம் அல்லது ஒரு துணை நிறுத்தி உதவி இருந்தால் மட்டுமே சைக்கிள் நிமிர்ந்த நிலையில் நிதானமாக நிற்கும்.

படத்தில் ஒருவர் மட்டும் ஒற்றைச் சக்கர சைக்கிளில் சாகசம் புரிகிறார். அப்பக்கமோ இப்பக்கமோ சாய்ந்து விடாமலும் முன் பக்கமாக முகம் குப்புற விழுந்துவிடாமலும் பக்குவமாக 'பாலன்ஸ்' செய்ய சைக்கிளில் அமர்ந்து சாதனை படைத்துள்ளார் இம்மனிதர். முயற்சித்தால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.

## பந்தயம்



→ முதன் முதலில் 1863ம் ஆண்டில் ஒரு பெட்ரோல் இயந்திர சாதனத்தை படகில் பொருத்தி நீரில் செலுத்திச் சாதனை படைத்தவர் ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜூன் லேனியர் என்பவர்தான் என்று கூறப்படுகிறது.

இயந்திர சாதனத்தினால் இயங்கும் படகுகளுக்கான முறையான போட்டி முதன் முதலில் 1900ம் ஆண்டில்தான் ஆரம்பித்தது. தொடர்ந்து 1903ம் ஆண்டு இங்கிலாந்தில் கலாயிஸ், ஃபிரான்ஸ் மற்றும் டோவர் அணிகளுக்கிடையில் இயந்திரசாதனத்தால் இயங்கும் ஓடங்களுக்கான போட்டி முறையாக நடைபெற்றது.

1900ம் வருடம் அமெரிக்காவில் நியூயோர்க் நகரிலுள்ள ஹட்சன் நதியில் முதலில் தங்கக் கோப்பைக்கான போட்டி இடம்பெற்றது.

கௌஸ் என்ற இடத்திலிருந்து டோர்க்குவே என்ற இடம் வரை ஓடம் செலுத்தும் போட்டி 1961ல் தொடங்கியது. ஏழு வருடங்களின் பின்னர் அமெரிக்காவில் கௌஸிலிருந்து கிளம்பி மீண்டும் டோர்க்குவே வரை சென்று மீண்டும் கௌஸ் திரும்பும் போட்டி முறை ஆரம்பமாயிற்று.

படகுகள் நீரைக் கிழித்தபடி வேகமாக செல்லும் காட்சியைக் காண்பது வியப்பாக இருக்கும். நம்நாட்டிலும் கடற்பரப்பில் நிஜமான படகு ஓட்டங்கள் அடிக்கடி நடக்கின்றன. அது கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையில் நடப்பவை. படத்தில் உள்ளதுபோலத்தான் அப்போது கடற்பரப்பு நுரை ததும்பி காணப்படும்.


## ப்பூ



↑ சிறுவர்களுக்குப் பிடித்தமான பண்டங்களில் ஒன்று தான் 'பபிள்கம்'. வாயில் போட்டு சில மணி நேரமாவது சப்பிக் கொண்டிருப்பதில் நம் சிறுவர்களுக்குத் தனிக் குஷி. சாதாரணமாகப் பற்களால் சப்புவதுடன் வாயில் அதனை வைத்து காற்றினால் ஊதவைப்பதும் உண்டு.

படத்தில் சுசான் மொண்டகோமரி என்பவர் பபிள் கம்மை ஒரு பெரிய பலூனுக்கு நிகராக ஊத வைத்துச் சாதனை படைக்கிறார். ஒரு பபிள் கம்மை இத்தனை பெரிதாக ஊதியவர் என்று சுசானை கின்னஸ் சாதனைப் புத்தகம் பதிவு செய்துள்ளது. நீங்களும் முயற்சிக்கலாம்.


## 1வது பிறந்தநாள் வாழ்த்து 03.08.99



### செல்வன் நவோதயன் சந்திரகுமார்

திரு.திருமதி சந்திரகுமார்-வானதி தம்பதியினரின் செல்வப் புதல்வன் நவோதயன் (ஆகாஷ்) தனது முதலாவது பிறந்தநாளை 03.08.99 அன்று கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்-கிஷோபன், தங்கை அபிநயா மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: பத்மன், கொழும்பு.


## நாடாளுமன்றம்



→ இக்கட்டடத்தைப் பார்த்ததும் இலண்டன் மாநகரிலுள்ள தேம்ஸ் நதிக்கரையில் அமைந்திருக்கும் பிரிட்டனின் பாராளுமன்றம்தான் நினைவுக்கு வரும். ஆனால் இது அதுவல்ல. இதுவும் பாராளுமன்றக் கட்டடம்தான். கனடா-ஒன்டாரியோவில் ஒட்டாவா ஆற்றங்கரையில் நிமிர்ந்து நிற்கும் கனடாநாட்டின் பாராளுமன்றக் கட்டடம்தான் இது. பிரதிநிதிகள் சபை மற்றும் செனற் சபை ஆகிய இரு சபைகளையும் கொண்டதே கனடாவின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக உள்ள பாராளுமன்றம்.

நாட்டின் பிரதம மந்திரியை பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளே தெரிவு செய்கின்றனர். அவரே ஆட்சியை வழிநடத்தும் பொறுப்பிலுள்ளார். கனடா, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரங்கமாக நீண்ட காலமாக இருந்தமையினால் பிரிட்டிஷ் பாராளுமன்றக் கட்டடத்தின் பாணியைப் பின்பற்றியே இக்கட்டடமும் அமைக்கப்பட்டுள்ளது.

நவீன கட்டட வடிவங்கள் பல வந்தும் பழமையான வடிவத்தை மாற்றுவதற்கு விரும்பவில்லை. நவீன வடிவங்கள் இந்த பழமையான வடிவத்திற்கு ஈடாகுமா? 'ஓல்ட் இஸ் கோல்ட்' என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பார, நாவலவில் உள்ள ஈமலை அச்சகத்தில் ஆகஸ்ட் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்